


கல்கி
KALKI
9-2-1958
30
நயா
பைசா



நவீனமானதொரு தொழிற்சாலையாக பெருகி வளர்கிறது என்பீல்ட் இந்தியா

55 வருஷ கால அனுபவம்! ஆம், எங்களுடன் ஒத்துழைத்துவரும் **ரெட்டிட்ச், இங்கிலாந்திலுள்ள என்பீல்ட் சைக்கிள் கம்பெனி லிமிடெட்டின்** இந்த நீண்டகால அனுபவமும் திறமையுமே, இப்போது சென்னை அருகே **திருவொற்றியூரில்** 60,000 சதுர அடி விஸ்தீர்ணத்தில் அமைந்துள்ள புதிய தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு **ராயல் என்பீல்ட்** மோட்டார் சைக்கிளையும் உன்னத முறையில் உருவாக்கி வருகிறது.



இத்துடன் இரண்டு தலைமுறைகளாக சைக்கிள்களை விற்று, **சர்விஸ்** செய்வதில் இக்கம்பெனி டைரக்டர்களுக்குள்ள திறமை கலந்த அனுபவத்தையும் நீங்கள் சேர்த்துப் பார்க்க வேண்டும்.

சிறந்த ரக பொருள்கள் ஈடு **இணையற்ற** சர்விஸ் வசதிகளோடு கிடைப்பதற்கு இவையே முக்கிய காரணம்.

என்பீல்ட் இந்தியா லிமிடெட்

இங்கிலாந்து என்பீல்ட் சைக்கிள் கம்பெனி லிமிடெட்டின்
கூட்டுதவி பெற்ற தயாரிப்பாளர்கள்.

சேர்மன்: K. R. சுந்தரம் அய்யர்; டைரக்டர்கள்: மேன்மை தங்கிய திருவாங்கூர் இளைய ராஜா ஸ்ரீ மார்த்தாண்ட வர்மா, K. ஈஸ்வரன், N. சாந்தப்பா, S. சங்கரன் (மானேஜிங்)
தொழில் நிபுணர் & பிரதம எஞ்ஜினியர் H. B. ஸ்டான்போர்ட்



உயர்தர போக்குவரத்து சாதனத்தை விரும்புவோருக்கு — ராயல் என்பீல்ட்

கல்கி
பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.





மலர் 17 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற | ஹேவிளம்பி
இதழ் 28 | தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | தை மீ 27உ

வரிகள் வருகின்றன, உஷார்!

குடுகுடுப்பாண்டி வந்தால் 'நல்ல காலம் வருகிறது! ஐயாவுக்கு நல்ல காலம் வருகிறது! அதிர்ஷ்டம் கொழிக்கப் போகிறது!' என்று உடுக்கையை ஆட்டிக் கொண்டு சொல்வான். நவீன உடுக்கைக்காரன் அவ்வாறு சொல்லவில்லை. "வரி வருகிறது! வரி வருகிறது!!" என்று சொல்லுகிறான்.

ராஜ்ய சர்க்கார்கள் அடுத்த வருஷ பட்ஜெட்டில் புது வரிகள் மூலம் சுமார் இருநூறு கோடி ரூபாய் வரையில் வசூலிக்க வேண்டும் என்று பாரத சர்க்கார் எதிர் பார்ப்பதாகச் செய்திகள் வெளியாகி யிருக்கின்றன.

சென்ற ஆண்டு பாரத சர்க்கார் தயாரித்து வெளியிட்ட பட்ஜெட்டில் ஏழைகளும் பணக்காரர்களும் ஒருசேர எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்று நாம் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறோம். புது வரிகள் எவ்வளவு தூரம் மக்களைத் தொழில்களில் ஊக்க மிழக்கச் செய்து துன்புறுத்துகின்றன என்று சொல்லியிருந்தோம்.

தீப்பெட்டி, சர்க்கரை போன்ற பாமர மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் பொருள்கள் மீதும் வரிவிதித்ததனால் பாமர மக்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப்படு கிறார்கள் என்று கூறியிருந்தோம். இவர்கள் பாதிக்கப்பட்டது போதாது என்று வருமான வரியின் உச்ச வரம்பு குறைக்கப்பட்டதனால், மாதம் முந்நூறு ரூபாய் சம்பாதிக்கும் வர்க்கத்தினரும் பாதிக்கப்பட்டனர்.

நடுத்தர வர்க்கத்தினர் பணக்காரர்களல்ல. பணக்காரர்கள் போல் ஆடை களுக்கும், மற்ற விஷயங்களுக்கும் தம் சக்திக்கு மிஞ்சிச் செலவழிக்கக் கடமைப்பட்ட வர்களாக இருக்கிறார்கள். இவ்விஷயங்களில் ஏழைகளுக்குள்ள சௌகரியம் இவர் களுக்கில்லை. முந்நூறு ரூபாய் சம்பளத்தில் மிகுந்த சிரமத்துடன் வாழ்க்கை நடத்தும் மத்தியதர வகுப்பினருக்கு இப்படி வருமான வரி செலுத்தும் 'கௌரவத்தை' வேறு அளித்து அவர்கள் கஷ்டங்களை அதிகரித்தாகிவிட்டது.

இந்தச் சூடுகள் இன்னும் ஆறியபாடில்லை. அதற்குள் அடுத்த ஆண்டிலேயே ராஜ்ய சர்க்கார் இன்னும் சில புது வரிகள் விதிக்கப் போகிறார்கள் என்பதை அறிந்து மக்கள் திகிலடைந்திருக்கின்றனர்.

ஏற்கனவே மத்திய சர்க்காருக்கு, ராஜ்ய சர்க்காரின் உரிமைகள் பறி கொடுக்கப் பட்டிருக்கின்றன. ராஜ்ய சர்க்காரின் உரிமையாக, விற்பனைவரி முக்கியமாக இருந்து வந்தது. செலவுவரி என்று மத்திய சர்க்கார் புதுவரி முறையைக் கொண்டு வந்திருக் கிறபடியால் விற்பனைவரி மறைமுகமாகச் சவளிகரம் ஆகிவிட்டது. சமீபத்தில் புகையிலை மீதும் மற்றும் சாதாரணப் பொருள்கள் சிலவற்றின் மீதும் விதிக்கப்பட்டு வந்த ராஜ்ய சர்க்காரின் விற்பனை வரியையும் மத்திய சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விற்பனை வரி சுதந்திரத்தைக் குறைத்துவிட்டு ராஜ்ய சர்க்கார்களிடமிருந்து இருநூறு கோடி ரூபாய் அடுத்த ஆண்டு பட்ஜெட்டிலேயே சேர்த்துத் தர வேண்டும் என்கிறார்கள்! ராஜ்ய சர்க்கார் என்ன செய்ய முடியும்? ஒன்று, புது வரிகள் போடவேண்டும் அல்லது இருக்கிற வரிகளை மேலும் அதிகப்படுத்த வேண்டும்! இது மக்களின் கஷ்டங்களை அதிகப்படுத்துவதாகத்தான் முடியும்.

ஏற்கனவே பல பொருள்களின் இறக்குமதி தடை செய்யப்பட்டதால் பல வியாபாரங்கள் நசித்துப் போகும் நிலையிலிருக்கின்றன. அதனால் அந்த வியாபாரங்களை நம்பி வாழும் பல கோடி மக்கள் வாழ வழி தெரியாது திணறிக் கொண்டிருக்கின்றனர்.

''சிறு சேமிப்புத் திட்டம்'' என்று ஒரு திட்டத்தை மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களுக்கே ஒதுக்கி யிருக்கிறார்கள். இதைப் பற்றி மக்களின் நிலை எப்படியிருக்கிறது என்று அறியவேண்டுமல்லவா? வரவுக்கு மிஞ்சிய செலவைச் சரிக்கட்ட முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் போது, 'சிறு சேமிப்பு' என்றால் மக்களுக்குக் கோபம் வருகிறது! அதனால் ராஜ்ய சர்க்கார், தங்கள் தாட்சிண்யத்திலும் தயவிலும் வாழும் பள்ளிக்கூட ஆசிரியர்கள், சாதாரண உத்தியோகஸ்தர்கள் ஆகியவர்களைச் சிறு சேமிப்புத் திட்டத்தில் சேரும்படி வற்புறுத்திச் சேர்க்கிறார்கள். இதனால் இந்த எளிய மக்கள் தாங்கள் படும் தொல்லைகளைப் பற்றி நமக்குக் கண்ணீர் விட்டுக் கடிதங்கள் எழுதுகிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் புது வரிகள் என்றால் மக்கள் கதிகலங்குகின்றனர். ஏழையிலிருந்து பணக்காரர்கள் வரையில் அஞ்சுகின்றனர்.

இவ்வளவு வரிகளுக்கும் கஷ்டங்களுக்கும் காரணம் திட்டம்தான்! எப்பாடு பட்டாகிலும் திட்டத்தை நிறைவேற்றிவிட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இப்படி யெல்லாம் செய்கிறார்கள். ''திட்டம் நிறைவேற்றியே தீருவோம்!'' என்று சென்ற வருஷ ஆரம்பத்தில் கூறிக்கொண்டிருந்த வீரம் இப்போது இல்லை. பிரத்யட்ச நிலைமையை உணர்ந்து சற்று சுருதியை இறக்கித்தான் பேசுகிறார்கள். இருப்பினும், ராஜ்ய சர்க்கார்களிடமிருந்து அடுத்த ஆண்டில் இருநூறு கோடி ரூபாய் எதிர்பார்ப்பதற்குக் காரணம், 'குறைந்த பட்சம், ஆரம்பித்துவிட்ட மூன்று எஃகு தொழிற்சாலைகளையாவது கட்டி முடித்து விடவேண்டு மல்லவா' என்கிறார்கள். இந்த மூன்று தொழிற்சாலைகளைக் கட்டி முடிக்க இவ்வளவு வரி விதிக்க வேண்டி யிருக்கிறது. அத் தொழிற்சாலைகள் இருக்கும் ராஜ்யங்களில் தொழிலாளர்கள் பயன் அடைந்து வருகிறார்கள். அந்த ராஜ்ய மக்கள் கண் முன்னால் ஒரு தொழிற்கூடம் நிறுவப்படுவதைப் பார்க்கிறார்கள். அதனால் அவர்களுக்கு அவ்விஷயத்தில் அதிக வரி செலுத்த ஊக்கமும் உற்சாகமும் இருக்கலாம். தேசம் முழுவதிலும் பரவலாக வரிகளை அதிகப்படுத்தினால் மக்களின் அதிருப்திதான் வளரும். தேசம் இருக்கும் நிலையில் அதிருப்தியையும், கஷ்டங்களையும் வளர்ப்பது அறிவுடைமையாகாது!


கிணற்றிலிருந்து நீர் எடுக்க வேண்டியது அவசியம். ஆனால் குடத்துக்குக் கட்டியிருக்கும் கயிறு அறுந்து விடும் போலிருக்கிறது!

ஏ. வி. ராமன் மறைந்தார்

பாரதநாட்டுச் சுதந்திரப் போரில் ஈடுபட்டு பகிரங்கமாக நாட்டின் உரிமைக்காகப் பாடுபட்டவர்கள் எண்ணிலர். ஆனால் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து கொண்டு பெரும் ஆங்கிலேய அதிகாரிகளுடன் நியாயத்துக்காக அவ்வப்போது போராடிய தீரர்களில் ஒருவர் திரு ஏ. வி. ராமன். கொள்கைக்காக சர்க்கார் உத்தியோகத்தை உதறி எறிந்து விட்டு வெளியே வந்தவர். சிறு பிராயத்திலேயே இங்கிலாந்து சென்று சுகாதார இன்ஜினீரிங் பயிற்சி பெற்று நம் தேசத்தின் பல பகுதிகளில் ஸானிடரி இன்ஜினீராகப் பணியாற்றியிருக்கிறார். இன்ஜினீர் பதவியிலிருந்தாலும் கூலிக்காரரைப்போல் வேலை செய்யும் பண்பாட்டை மேற்கொண்டவர். சுகாதாரச் சூழ்நிலை ஏற்படுத்தினால் பல தொத்து நோய்கள் பரவாமல் மக்களைக் காப்பாற்றலாம் என்ற தீவிர உணர்ச்சி கொண்டு, பல முனிசிபாலிடிகளுடனும் சர்க்காருடனும் போராடி யிருக்கிறார். இதற்காக வேண்டி ஆங்கிலத்தில் ''மக்கள் ஆரோக்கியம்'' என்ற பத்திரிகையை ஐந்து வருட காலம் நடத்தினார். இவை எல்லாவற்றையும்விட முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய விஷயம் அவருக்குத் தமிழ் மொழியிலும், தமிழ்ச் சொற்களிலும் உள்ள ஆர்வம்தான்.



பௌதிகக் கலைச் சொற்களைப் பழந் தமிழ் இலக்கியப் பொக்கிஷங்களிலிருந்து எடுக்க வேண்டும் என்ற தீவிர உணர்ச்சி கொண்டவர். இக் கருத்தை வலியுறுத்தி, ''தமிழை வளர்ப்பது எப்படி?'' என்றதோர் அரிய புத்தகம் எழுதி சமீபத்தில் வெளியிட்டார். ராஜாஜியின் நெருங்கிய நண்பர். படாடோபமற்ற தீவிர தெய்வபக்தி கொண்டவர். அவர் சென்ற மாதம் 29-ம் தேதி சற்றும் எதிர்பாராதவண்ணம் உயிர் நீத்தார். அவருடைய பிரிவால் வருத்தமுற்று நிற்கும் அவருடைய மனைவியாருக்கும், குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


சென்னை ராஜ்யம்
சென்னை சர்க்கார்
ஆட்சி மொழிக் கொள்கையில் தென்னக மக்களின் உணர்ச்சிகளை சென்னை சர்க்கார் சரியானபடி வட நாட்டுக்கு உணர்த்த வில்லை என்கிறார் ராஜாஜி
ராஜ்யங்களிலிருந்து 200 கோடி ரூபாய் வரிவிதித்து வசூலிக்க வேண்டும் என்கிறது மத்திய சர்க்கார்.
திட்டக் கமிஷன்
ராஜ்யங்கள்
வரிப்பணம்
உலக சமாதானம்
பாகிஸ்தான் தனக்கு அணு குண்டு வேண்டு மென்கிறது.
பாகிஸ்தான் பிரதமர்
பாகிஸ்தான்
அப்துல்லா
காஷ்மீர்
விஜி

என்ன சேதி ?

அந்நிய உதவி

அமெரிக்காவிலிருந்து ஜப்பான் வரையுள்ள பல நாடுகள் சென்ற இரண்டு வாரங்களாக 'நான் முந்தி; நீ முந்தி' என்று போட்டி போட்டுக் கொண்டு பாரத நாட்டுக்கு உதவ முன் வந்திருக்கின்றன. 'ஐயோ, இத்தனை நாடுகளிடம் கடன் பட்டு விட்டால் நம் கதி என்ன ஆவது?' என்று இதற்கு முன் கவலைப்படாதவர்கள் எல்லாம் கவலைப் பட ஆரம்பித் திருக்கிறார்கள். நல்ல வேளையாக இப்பொழுது ஒரே நாட்டி லிருந்து பெருந்தொகை கடனாகக் கிடைக்காமல், பல நாடுகளிலிருந்து கடன் கிடைப்பதால் நமது சுதந்திர அந்நிய நாட்டுக் கொள்கை காப்பாற் றப் படலாம்! நமது வெளிநாட்டுக் கொள்கையைத் தனக்கு இஷ்டமானபடி மாற்றிக் கொள்ளும்படி எந்த ஒரு நாடும் கோர முடியாது! பல நாடுகளிலிருந்து கடன் கிடைப்பதனால் ஏற்படும் இந்தப் பயனை நினைத்து மகிழ்கிறோம்!

இது எப்படியாயினும் வாங்கும் பணம் கடன் என்பதை மறக்கலாகாது. வட்டி யும் முதலும் திருப்பிக் கொடுக்கத்தான் வேண்டும்.

யார் குற்றவாளி ?

திரு ஈ. வே. ரா. வழக்கில் சர்க்கார் தரப்பில் வாதாடிய வக்கீல் ஸ்ரீ ஈ. வி. சீனிவாசாச்சாரியார் அவர்களைக் காலிகள் சிலர் தாக்கி யிருக்கின்றனர். இந்தச் செய்தியைப் படித்து தமிழ் நாட்டு மக்கள் பெருந்துயரத்தில் ஆழ்ந் திருக்கின்றனர். இத்தகைய செயல்கள் இடைவிடாது நடைபெற்று வந்தால் எத்தகைய அராஜகத்தில் போய் முடி யும் என்று கவலை கொண்டிருக்கின்றனர். இந்தச் செயல்களில் ஈடுபட்ட ஆட் களை நினைத்து நமக்குப் பரிதாபமாக இருக்கிறது. இம்மாதிரிச் செயல்கள் அவர்களாகச் செய்யவில்லை. அவர்க ளுடைய தலைவர்கள் ஓயாமல் நேர்முக மாகவும் மறைமுகமாகவும் பத்திரிகை களிலும் மேடைகளிலும் தீய பிரசாரம் செய்து வந்ததினாலேயே இவர்கள் இச் செயல்களில் ஈடுபட்டனர். உண்மையில் குற்றம் செய்தவர்கள் இவர்கள் அல்ல. பின்னால் நின்று தூண்டிவிட்ட குற்ற வாளிக்குச் சர்க்கார் மிகுந்த சலுகைகள் காட்டியும், உடனடியாக கடும்! நட வடிக்கை எடுக்காததாலும் நாட்டில் தீய சக்திகளுக்கு ஓரளவு தைரியம் உண்டாகி விட்டது. சர்க்கார் ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்ற துணிச்சல் ஏற்பட்டு விட்டது. திரு ஈ. வி. சீனிவா சாச்சாரியார் வழக்கில் சம்பந்தப்பட்ட வர்களை, பொய் சாட்சிகள் தயாரிக்க வழியில்லாமல் உடனடியாக வழக்கு நடத்திக் கடும் தண்டனை அளிக்க வேண் டும். இவ்விதம் செய்தால்தான் நாட்டில் அராஜகத்துக்கு இடமில்லை என்ற எண் ணம் மக்கள் மனத்தில் உறுதிப்படும்!

முந்தரா விஷயம்

இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் முந்தரா கம்பெனிகளில் பங்குகள் வாங் கிய விஷயமாக நியமிக்கப்பட்ட விசா ரணைக் கமிஷன் நாட்டில் பெரும் பரபரப்பை உண்டு பண்ணி யிருக்கிறது. கமிஷன் முன் சாட்சியம் கூறும் அத்தியா யம் முடிந்தது. அட்டர்னி ஜெனரலின் வாதம் எதிர்பாராதவிதமாக அமைந் தது. அவர் எல்லாரையும் தாக்கிப் பேசினார். ஆனால் சாட்சி விசாரணை அவ்வளவு தீவிரமாக அவர் நடத்திய தாகத் தெரியவில்லை. நாடு நீதிபதி சக்லாவினுடைய தீர்ப்பை எதிர் பார்த்து நிற்கிறது.

மிக உச்சநிலையிலிருந்து வந்த ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்கள் ஏன் இப் படித் தவறாக நடந்து கொண்டார்கள் என்ற புதிர் விடுபடவில்லை. காரணமில் லாமல் இப்படிச் செய்வார்களா ?

மேலிடத்திலிருந்து அதாவது அர சியல் தலைவர்களிடமிருந்து தூண்டுத லில்லாமல் இப்படி நடந்து கொண் டிருக்கமாட்டார்கள் என்று நமக்குத் தோன்றுகிறது. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டாங்கே அவர்கள் எழுதிய கடிதம் பத்திரிகையில் வெளியாகி யிருக் கிறது. தேர்தல் சமயத்தில் முந்தரா அவர்களிடமிருந்து நிதி வசூலிக்கப்பட் டதா என்று கேட்டிருக்கிறார். இதை நீதிபதி விசாரிக்க வேண்டிய விஷயமாக எடுத்துக் கொள்ளவில்லை.

பாவை விளக்கு

பாவை விளக்குத் தொடர் கதையில் வரும் மூன்று கதாநாயகிகளும், கதாநாய கன் தணிகாசலத்துக்கு எப்படி யெல்லாம் தோற்றமளிக்கிறார்கள் என்பதை இவ்வார அட்டையில் அற்புதமாகச் சித்திரித்திருக்கிறார் ஓவியர் வினு.

அருள் வாக்கு

வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டுமென்பது இக்கால கோஷமாக இருக்கிறது. இதனால் ஆடம்பர வாழ்க்கையே தோன்றுகிறது. உண்மை சோஷலிஸம் ஆடம்பர வாழ்க்கைத் தரத்தைத் தவிர்த்து, சிக்கனமான வாழ்வு நடத்துவதன் மூலம்தான் ஏற்படக்கூடும். ஆகாரம், ஆடைகளில் எளிய முறையைப் பின்பற்ற வேண்டும். சாமான்யப் பொதுஜன நிலையிலேயே எல்லோரும்வாழவேண்டும். ஆடைகள் அணிவது உஷ்ணம், குளிரிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் கண்ணியமாக இருக்கவும் தேவைப்பட வேண்டும். உணவு, பசியைப் போக்கத்தான் தேவை. ருசிபோனபடியெல்லாம் சாப்பிடுவதென்பது கூடாது. எவ்வளவு முக்கியத் தேவையோ, அவ்வளவு ஆகாரம்தான் சாப்பிடுவதென்பது அபரிக்கிரஹம். தேசிய செல்வத்தை விஞ்ஞான வளர்ச்சி, தேசப் பாதுகாப்பு ஆகியவற்றுக்குப் பயன்படுத்தவேண்டும்; ஜனங்கள் ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபட உபயோகிக்கக் கூடாது. வாழ்க்கைத் தரம் எளிய அளவிலேயே இருப்பதுதான் எல்லோருக்கும் நலம். அப்போது எல்லாரும் இன்புற்றிருக்கத் தேசத்தில் போதிய செல்வம் இருக்கும்.

ஒரு தனிப்பட்டவரிடமோ அல்லது தேசத்திடமோ அதிகப்படி பொருள் இருந்தால், ஏழைகளான தனிப்பட்டவர்களுக்கும், தேசங்களுக்கும் உதவ அதை உபயோகிக்க வேண்டும். ஒரு தேசத்துக்கு அதிகப் பணம் இருந்தால், இப்போது காணப்படுவது போல், தனது கொள்கையை ஆதரிப்பவர்கள் என்பதற்காகவோ அல்லது யுத்தம் வந்தால் தன்னுடன் சேரக்கூடியவர்கள் என்பதற்காகவோ உதவுவதென்பது கூடாது. ஒரு தேசம் தனது உற்பத்தியைக் கொண்டே திருப்திப்படுவது என்பதுதான் உத்தமம். வாழ்க்கைத்தரம் மிக உயர்ந்துள்ள தேசங்கள் தங்களது அந்த வாழ்க்கைத்தரம் அப்படியே உயர்ந்திருக்க, பிறதேச மார்க்கெட்டுக்களைத் தேடவேண்டியிருக்கிறது. எங்கு பிறதேசத் தேவைகள் குறைந்து தங்கள் மார்க்கெட்டு போய்விடுமோவென அவர்கள் எப்பொழுதும் அஞ்சிய நிலையிலேயே இருக்கின்றனர். இதனால் பலவித போராட்டங்களும் நிகழ்கின்றன. நம் தேசமும் பிற தேசங்களைக் காப்பி யடித்து இவ்வழியைப் பின்பற்றினால், இப்பொழு தில்லாவிடினும் பின்னராவது இதே நிலைமைதான் நம் தேசத்துக்கும் ஏற்படும்.

ஸ்ரீசங்கராச்சாரியார், காஞ்சி காமகோடிபீடம்

சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.

34/1-A. பாந்தியன் சாலை, சென்னை-8

ஐந்தாம் அகில இந்திய கைத்தறி வார விழா

நிகழ்ச்சி நிரல்

8-2-1958 கைத்தறிக் கண்காட்சி.
மாலை 6 மணி டாக்டர் ஸி. பி. ராமசாமி ஐயர், பி.ஏ., பி.எல். திறந்து வைப்பார்
மாலை 6-15மணி கைத்தறி வார விழா.
பிரதம நீதிபதி பி. ராஜகோபாலன், ஐ. ஸி. எஸ். ஆரம்பித்து வைப்பார்
சொற்பொழிவாளர்: திருமதி ஆர். காந்திமதி அம்மாள், எம்.ஏ., பி.டி.
தலைமை ஆசிரியை, மாநில பெண்கள் உயர்நிலைப்பள்ளி, எழும்பூர்
மாலை 7-15மணி நடனம்: திருமதி கமலா லக்ஷ்மண்

9-2-1958 பொதுக்கூட்டம்
மாலை 6 மணி தலைவர்: ஸ்ரீ விஷ்ணுராம் மேதி, சென்னை கவர்னர்
சொற்பொழிவாளர்கள்: திரு டி. எஸ். ஜோஷி, ஐ. ஸி. எஸ்., சேர்மன்
அகில இந்திய கைத்தறி போர்டு, பம்பாய்
டாக்டர் மு. வரதராசனார், எம்.ஏ., எம்.ஓ.எல்.
பச்சையப்பன் கல்லூரி, சென்னை
மாலை 7-15மணி நாடகம்: ''இராஜ ராஜ சோழன்'' டி. கே. எஸ். சகோதரர்கள்

10-2-1958 பொதுக்கூட்டம்
மாலை 6 மணி தலைவர்: திரு எம். பக்தவத்சலம், பி.ஏ., பி.எல்., உள்நாட்டு அமைச்சர்
சொற்பொழிவாளர்: டாக்டர் ஆர்.பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.
மாலை 7-15மணி இன்னிசை: இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர்

11-2-1958 பொதுக்கூட்டம்
மாலை 6 மணி தலைவர்: திரு கே. காமராஜ், சென்னை முதலமைச்சர்
சொற்பொழிவாளர்: திரு எம். ஆர். பெருமாள், எம்.ஏ., எல்.டி.
கல்லூரித் தலைவர், ஆசிரியர்கள் கல்லூரி, சைதை
மாலை 7-15மணி நாடகம்: ''இலங்கேஸ்வரன்'' மனோகர் நாடகக் குழுவினர்

12-2-1958 மாதர் தினம் — பொதுக்கூட்டம்
மாலை 6 மணி தலைவர்: திருமதி தாரா செரியன், மேயர், சென்னை நகராண்மைக் கழகம்
சொற்பொழிவாளர்கள்: திருமதிகள் சவுந்திரம் கைலாசம், ராஜலோசனா
மாலை 7-15மணி கைத்தறி உடைகள் போட்டி, குழந்தைகளின் கலைக் காட்சி
நடனங்கள்: ராதா ராணி, சரோஜா குழுவினர்

13-2-1958 பொதுக்கூட்டம்
மாலை 6 மணி தலைவர்: திரு டி. எம். நாராயணசாமி பிள்ளை, எம்.ஏ., பி.எல்., எம்.எல்.ஸி.
உப-அத்யட்சகர், அண்ணாமலை பல்கலைக் கழகம்
சொற்பொழிவாளர்: தவத்திரு குன்றக்குடி அடிகள்
மாலை 7-15மணி இன்னிசை: திருமதி கே. பி. சுந்தராம்பாள்

14-2-1958 மாணவர் தினம்
தலைவர்: திரு ஸி. சுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்., நிதி அமைச்சர்
மாலை 5-15மணி குழந்தைகள் விளையாட்டு விழா
மாலை 6 மணி மாணவர்களின் சொற்பொழிவுப் போட்டி
இன்னிசை & நடனம்
திரு எஸ். டி. சுந்தரவடிவேலு, எம்.ஏ., எல்.டி.,
டைரக்டர் பொதுக் கல்வித் துறை, பரிசுகள் வழங்குவார்

15-2-1958 பொதுக்கூட்டம்
மாலை 6 மணி தலைவர்: திரு ஆர். வெங்கட்ராமன், எம்.ஏ., பி.எல்., கூட்டுறவு அமைச்சர்
சொற்பொழிவாளர்: திருவாசகமணி கே. எம். பாலசுப்ரமணியம்,
பி.ஏ., பி.எல்.
மாலை 7-15மணி நடனம்: குமாரி லட்சுமி ராஜ்யம் குழுவினர்

கண்காட்சி நேரம் மாலை 3 மணி முதல் இரவு 10 மணி வரை

பிரவேசக் கட்டணம் இல்லை

எம். பி. நாச்சிமுத்து, பி.ஏ., பி.எல்.
தலைவர்

W. ஞானசம்பந்தம், பி.ஏ., ஸி.ஏ.ஐ.ஐ.பி.
வியாபார நிர்வாகி

வள்ளுவர் வாசகம்

ராஜாஜி

17

நல் விருந்து ஓம்பி மிஞ்சிய உணவை உண்டு இல்லறம் நடத்துகிறவனைத் தெய்வம் பாதுகாக்கும். அவனுடைய பண்ணையில் விதை விதைக்காமலே நல்ல பயிர் உண்டாகும் என்று உயர்வு நவிற்சி என்னும் அணியில் பாடுகிறார்.

> வித்தும் இடல்வேண்டும்
> கொல்லோ விருந்துஓம்பி
> மிச்சில் மிசைவான்
> புலம்.

[மிசைதல்—உணவு உண்ணுதல்]

முதலில் விருந்ினரைக் கவனித்து விட்டுப் பின்னால் தானும் மக்களும் உண்பது. அதன்பின் மனைவி உண்பது தமிழ்ப்பண்பாடு. பாரதநாடு முழுதுமே இந்தப் பண்பாடு. இந்தப் பண்பாட்டின்படி நடத்தி வரும் இல்லறத்துக்கு ஒரு குறைவும் வராது. வயலில் விதை விதைப்பதுபோல் எண்ணி விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்கிறார். குடியானவன் விதை தெளிக்கும்பொழுது அதனால் வரும் பயனை மனத்தில் கொண்டு சந்தோஷமாக விதைக்கிறான். அந்த மனப்பான்மையோடு விருந்தினருக்கு அன்னமிட்டு உபசாரம் செய்து மகிழ்விக்க வேண்டும் என்பதை உள்ளுரையாகக் கொண்டு பாட்டு அமைந்திருக்கிறது.

. .

இவ்வாறு செய்யாமல் தாம்மட்டும் உண்டு வாழ்க்கையைக் கழித்து விட்டவர்கள் அந்திகாலத்தில் பரிதவிப்பார்கள். வாழ்நாள் முழுதும் கஷ்டப்பட்டுக் கவலைப்பட்டு என்ன சம்பாதித்தோம் என்று வருந்த வேண்டியதாகும். பசித்து வந்தவர்களுக்கு அன்னமிடாமல் வாழ்நாளைக் கழித்தால் துயரத்துக்கு ஏதுவாகும். பசித்தவருக்கு அன்னமிடுவது வேள்வியாகும். அந்த வேள்விப் பயன் மறுமைக்குச் சேமிப்பு ஆகும். அது செய்யாமல் வாழ்நாளை முடித்து விட்டால் ஒரு சேமிப்பும் இல்லாமல் மறுமையில் வறியர் ஆவோம். பலமில்லாதவன் நடப்பதற்குப் பற்றுக்கோடு இன்றி வனத்தில் புகுவதுபோல், துயரப்படுவோம்.

> பரிந்துஓம்பிப் பற்றுஅற்றேம்
> என்பர் விருந்துஓம்பி
> வேள்வி தலைப்படா
> தார்.

[பற்று-பற்றுக்கோடு. ஊன்றுகோல். கையில் பற்றிச் செல்லும் கம்பு. அதாவது துணை]

பொருளைத் தேடுவதில் வருந்திப் பிறகு அதனைக் காப்பாற்றுவதில் மிக வருந்தித் துன்பப்பட்டது ஒன்றே இலாபமாகும், விருந்தோம்புதல் என்கிற வேள்வியை மேற்கொள்ளாதவரின் முடிவு. விருந்தினரை உபசரித்தால் வேறு வேள்விகளும் வேண்டியதில்லை என்பது குறிப்பு.

. . .

பொருள் இருந்தும் அது மடமையினால் பொருளில்லாத நிலைக்குச் சமானமாகக் கூடும். எப்படி? விருந்தினரை உபசரிக்காத மடமை இந்த நிலைமையை உண்டாக்கும். உபசரிக்கக் கூடிய சௌகரியம் இருந்தும் அதற்கு மனம் வராமற் போனால் அது மடமை

யாகும். சிறிது அறிவு இருப்பவனும் இப்படிச் செய்ய மாட்டான்.

உடைமையுள் இன்மை
விருந்தோம்பல் ஓம்பா
மடைமை மடவார்கண்
உண்டு.

உடைமையுள் இன்மை என்கிற பரிகசிக்கத் தக்க நிலைமை எப்படி உண்டாகிறது? விருந்தோம்பல் ஓம்பா மடைமையினால் உண்டாகிறது. அது மடவார் அதாவது அறிவில்லாதவர்களிடத்தில் உண்டு. அதாவது காணப்படுகிறது. இத்தகைய மடைமையும் சிலரிடம் இருக்கிறதே என்று வியந்து கூறுகிறார் முனிவர்.

* * *

சிலது எளிதில் வதங்கிப் போகும் புஷ்பம், மூக்கில் வைத்து மோந்தால் வாடிப் போகும். இவ்வளவும் வேண்டியதில்லை. விருந்தினன் உள்ளத்துக்கு. உபசரிப்பை எதிர்பார்த்துச் சென்ற இடத்தில் மகிழ்ச்சியின்றிச் சிறிதளவு முகம் கோணினாலும் பசித்து வந்தவனுடைய உள்ளம் வாடிவிடும். இந்தப் புஷ்பமானது, மூக்குவரை போக வேண்டியதில்லை. தூரத்திலிருந்தே திரிந்த முகத்தைப் பார்த்தவுடன் குழைந்து போகும்.

மோப்பக் குழையும்
அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும்
விருந்து.

மலரைத் தொடுக்கும்போதும் சூடும்போதும் காட்டும் கைக் கூச்சத்தைப் போல் அவ்வளவு நுட்பமான கவனத்தை விருந்தினரை எதிர்கொள்வதிலும் உபசரிப்பதிலும் காட்ட வேண்டும்.

அனிச்சம் என்பது கவிஞர்கள் போற்றும் ஒரு மலர். மலர்களுக்குள் மிக எளிதில் வாடிப் போகும் மெல்லிய மலர்.


* * *

அரசனுடைய நிர்ப்பந்தமின்றி மக்களுடைய ஆசாரத்தின் மூலமாகவே பசியில் வருந்துகிறவர்களுக்கு உணவு கிடைக்க முற்காலத்தில் ஏதுவாக இருந்தது இந்த விருந்தோம்பல் என்கிற பாரத நாட்டுப் பண்பாடு.

வறியோருடைய பசியைத் தீர்ப்பதே பொருள் படைத்தவனுக்குத் தனி மகிழ்ச்சி தந்து வந்தது. தாம் உண்டு களிப்பதைவிடப் பிறரை உண்டு களிக்கச் செய்வதில் அதிக மகிழ்ச்சி கண்டார்கள்.

சோம்பல் வழக்கத்தைப் பெருகச் செய்யாமலிருப்பதற்காக இந்தப் பண்பாட்டை வர வரச் சுருக்கிவிட்டுப் புதியதொரு நிலை நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. பசித்து உணவின்றித் துன்பப்படுகிறவர்களை இக்காலத்தில் காண்கிறோம்.

சமூகத்தின் பண்பாட்டுக்குப் பதிலாக, வரி வசூலித்து அன்னமிடும் கடமை அரசாட்சியைச் சார்ந்து நிற்கிறது. விருந்தோம்பலில் மகிழ்ச்சி இருந்தது. வரி கொடுப்பதிலும், திரட்டிய பணத்தைச் செலவழிப்பதிலும் அகமகிழ்ச்சி இல்லை.



கோபுரமும் குப்பைமேடும்

பீஷ்மணி

கார்த்திகை மாதம். வானே அடைத்துக் கொண்டு மேகங்கள் கூடியிருந்தன. ஈரக் காற்று வீசி மழையின் வருகையை அறிவித்தது. தெருவிலே ஒரு சில வீட்டு வாசல் திண்ணைகளில் மினுக்கிக் கொண்டிருந்த அகல் விளக்குகளையும் உள்ளே எடுத்துச் சென்று விட்டார்கள். நீண்டு கிடந்த தெருவில் இருள் மூடிக் கிடந்தது. எதிர் வீட்டுக் கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

"மணி என்ன ஸார் இருக்கும்?"— இருளிலே சாமா சாஸ்திரியின் உருவம் மங்கலாகத் தெரிந்தது. குரல்; மட்டும் தீர்க்கமாய்க் கேட்டது.

"எட்டே முக்காலாகிறது!"

"சரிதான்!"

இரண்டு மூன்று முறை தண்ணீர் விட்டு வாயைக் கொப்பளித்துத் துப்பி விட்டு, கதவை அடைத்துக் கொண்டு அவர் உள்ளே போய்விட்டார்.

எட்டே முக்காலுக்கே ஊர் உறங்கி விட்டது. தெருவுக்கு வந்து மேற்கே பார்த்தேன். மேலக்கோடியில் இருக்கும் பெருமாளே கூட உறங்கப் போய் விட்டார்.

லக்ஷ்மி ஊரிலிருந்தால் நாற்காலியில் சுகமாகச் சாய்ந்துகொண்டு, அவளை ஏதாவது கதை படிக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டிருப்பேன். இன்று காலேதான் அவள் தென் காசிக்குப் பஸ் ஏறினள். திரும்பி வர ஒரு மாதமாவது ஆகும்.

பத்து மணிக்கு முன் படுத்துத் தூங்கிப் பழக்கமில்லாத எனக்கு, 'ஊருடன் ஒத்து வாழ்வது' சிரமமாகத்தான் இருந்தது.

கதவை இழுத்துச் சாத்திப் பூட்டி விட்டுச் சாவிக் கொத்தைச் சுற்றிக் கொண்டே தெருவில் இறங்கி நடந்தேன்.

ராமநாதன் அதற்குள் தூங்கியிருக்க மாட்டான். அவனை அழைத்து வந்தால் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்கலாம் என்ற எண்ணத்துடன் கிளம்பினேன்.

நான் நினைத்தது போலவே அவன் அரிக்கேன் விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு பரீட்சைக்குப் படிக்கும் மாணவனைப் போல் வெகு அமெரிக்கையாய் அமெரிக்க நாவல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தான்.

"என்னப்பா விஷயம்?" என்றான் என்னைக் கண்டதும், படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்து விட்டு.

"விஷயம் ஒன்றுமில்லை. ஊர் தூங்கிப் போச்சு. ஆனால் எனக்குத்தான் தூக்கம் வரவில்லை. தனியே எவ்வளவு நேரம்தான் கொட்டுக் கொட்டென்று உட்கார்ந்திருப்பது? வீட்டிலே யாரும் இல்லை. புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு அங்கே வாயேன். பேசியோ, படிச்சோ பொழுதைப் போக்கிட்டு, தூக்கம் வந்தப்போ தூங்கலாம்!" என்றேன்.

சிரித்துக் கொண்டே அவன் மெதுவாக எழுந்திருந்தான், என்னுடன் வருவதற்காக.

மாடவீதி வழியாகப் பிரதட்சிணமாகப் போனும். மேல மாடவீதியில் பத்துப் பன்னிரண்டு வீடுகள். அதற்குப் பின் பொட்டல் நிலம். அப்புறம் ஒரு பிள்ளையார் கோவில். வடக்குமாட வீதியில் வீடுகள் கிடையாது. மதிலுக்கு எதிர்த்தாற்போல் குளக்கரைதான் உயர்ந்து நிற்கும். பிள்ளையார் கோவில் திண்ணையில் விளக்கொளி தெரிந்தது.

அருகே நெருங்கியபோது, காடா விளக்கின் மங்கல் ஒளியில் ஒரு பெண் எதையோ சாப்பிட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. அவளுக்குப் பக்கத்தில் இரண்டு மண்பானைகள் இருந்தன. இன்னும் சின்னச் சின்னதாக வேறு சில பொருள்களும் இருந்தன. அவை சரியாகத் தெரியவில்லை.

மேற்குப்புறத்தை நோக்கி உட்கார்ந்து கொண்டிருந்தாள் அந்தப் பெண். அதனால் அவள் முகத்தைப் பார்க்க முடியவில்லை.

பளீரென்று மின்னல் வெட்டியது.

அதன் கணநேர ஒளியில் பக்கவாட்டில் தெரிந்த அவள் முகம்! கோமதி ஏன் இப்படி மழை நேரத்தில் பிள்ளையார் கோவில் திண்ணையில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறள்? போய் விசாரித்தாலென்ன? கோமதியில்லாமல் வேறு யாராகவாவது இருந்தால் என்ன செய்வது?

பேசாமல் நடந்தேன்.

வானம் பயங்கரமாக இடித்தது.

யாராக இருந்தால் தானென்ன? கொட்டப் போகிற மழையில் இந்தப் பிள்ளையார் கோவில் திண்ணையை நம்பி அந்தப் பெண் எப்படி ஒண்டிக் கொண்டாள்? இப்படி வானமே கூரையாகவும் வையமே வீடாகவும் வாழும் குடும்பங்கள் எத்தனையோ? கோமதியாக இருக்குமோ? கோமதி எப்படி இவ்வளவு தாழ்ந்த நிலைக்கு வந்தாள்?

"படித்துக் கொண்டிருந்தவனைப் பேச்சுத் துணைக்கு ஆள் வேணுமென்று இழுத்து வந்து விட்டு, நீ என்னமோ மனோராஜ்யம் செய்ய ஆரம்பித்துவிட்டாயே!" ராமநாதன் சலித்துக் கொண்டான்.

"தூங்குகிற ஜனங்களுக்கு இடைஞ்சலாய்த் தெருவிலே என்னத்தைப் பேசிக் கொண்டு வருகிறது? அரைத் தூக்கத்திலே எவனாவது சபிக்கத் தொலையப் போகிறன்!"

நாங்கள் வீட்டை அடைந்து கதவைத் திறந்து கொண்டு உள்ளே போய் உட்காருவதற்கும் வெளியே மழை பிடித்துக் கொள்வதற்கும் சரியாக இருந்தது.

காடா விளக்கின் ஒளியில் பிள்ளையார் கோவில் திண்ணையில் பார்த்த அந்தப் பெண்ணின் உருவம் மங்கலாக மனத் திரையில் நிழலாடியது. இந்த மழையில் நனையாமல் ஒண்டக்கூட அங்கே இடம் இல்லையே!

"பிள்ளையார் கோவில் திண்ணையிலே ஒரு பெண் உட்கார்ந்து என்னமோ சாப்பிட்டுக் கொண்டிருந்தாளே, பார்த்தாயா நீ?"

'' பார்த்தேன். ஏன்...?''

'' திருநெல்வேலியில் சந்நியாசிக் கிராமத்தில் நான் இருந்தபோது வழக்கமாக எங்கள் வீட்டுக்குக் கறிகாய் கொண்டு வருவாள் ஒரு பெண். கோமதி என்று பெயர். இவளைப் பார்த்தால் அவளைப் போலவே இருந்தது. ஒரு வேளை அவளே தானோ என்னவோ?''

ராமநாதன் சிரித்தான்.

'' சிரிப்பதற்கு இப்போ என்ன ஹாஸ்யத்தைக் கண்டாய்?'' என்றேன் எரிச்சலுடன்.

'' காலையில்தானே மனைவியை ஊருக்கு அனுப்பினாய். அதற்குள்...''

அவளை அறைந்துவிடலாமா என்று ஆத்திரம் வந்தது.

'' கோபிக்கக்காதே அப்பா! திடீரென்று இவ்வளவு நாரம் அந்தப் பெண்ணைப் பற்றி என்ன சிந்தனை?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டான் அவன்.

'' மழை இப்படிக் கொட்டுகிறதே. பாவம் அந்தப் பெண் எங்கே ஒதுங்கிக் கொள்வாள் என்று நினைத்துக் கொண்டேன். நீ என்னடா என்றால்....''

''இந்த மாதிரி ஜன்மங்களெல்லாம் இப்படித்தான் சீரழியும். இதற்கெல்லாம் இரக்கப்பட ஆரம்பித்தால் அப்புறம் வாழவே முடியாது. மானத்தை விட்டு விட்டு ஜீவனம் செய்கிற பிழைப்பு என்ன பிழைப்பு! என்னமோ போ!''



''ஆளைச் சரியாகப் பார்க்கக்கூட இல்லை நீ. அதற்குள் இப்படியெல்லாம் தீர்மானத்துக்கு வந்துவிட்டாயே அப்பா! சேச்சே!''

ராமநாதனின் அபிப்பிராயம் எரிச்சலைத் தான் மூட்டியது.

அவன் என்னைப் பார்த்து, நையாண்டித்தனமாய்ச் சிரித்துக்கொண் டிருந்தான்.

''அவள் அந்தப் பிள்ளையார் கோயில் திண்ணையிலே ஒரு மாசமாகக் குடியிருக்கிறாளாம். வீடு வாசலில்லாமல் தெருவுக்கு வந்துவிட்ட அவளுக்கு என்ன மினுக்கு. என்ன குலுக்கு தெரியுமா? சாமா சாஸ்திரிதான் சொன்னார். ஒரு நாள் ராத்திரி எங்கேயோ அந்தப் பக்கமாக வந்து கொண்டிருந்தாராம். இவளும் யாரோ. ஒருவனும் இன்பமாக உரையாடிக் கொண் டிருந்தார்களாம். ஊருக்கு ஊர் இப்படி நடுத்தெரு நாடகம் பெருத்துப் போச்சு! அதற்குப் பிள்ளையார் கோவில் திண்ணைதானா அகப்பட்டது?''

மின்னலொளியில் மங்கலாகத் தெரிந்த அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தேன்.

கோமதியின் முகம்தான் நினைவில் எழுந்தது. ராமநாதன் சம்பந்தமும் சம்பந்தமில்லாததுமாக ஏதேதோ பேசிக் கொண்டிருந்தான். வாய் 'ஊம்' கொட்டிக் கொண்டிருந்ததே யொழியச் சிந்தனைகள் கோமதியைச் சுற்றித் தான் வளைய வந்து கொண்டிருந்தன.

★

லக்ஷ்மிக்குக் கறிகாய் கொண்டு வரும் கோமதியிடம் அலாதியான ஈடுபாடு. கருப்பாக இருந்தாலும் குறுகுறுவென்றிருப்பாள் கோமதி. கிராமத்திலே எங்கோ வாழ்ந்தாலும் கச்சிதமாக உடுத்திக் கொண்டிருப்பாள். முகத்திலே நல்ல களை. நெற்றி நடுவில் அகலமாகக் குங்குமப் பொட்டு இட்டுக்கொண்டிருப்பாள். அடர்த்தியாக வளர்ந்திருக்கும் தலைமயிரை அழகாக வாரிப் பின்புறத்தில் செருகிக் கொண்டையாக முடிந்திருப்பாள். சீராக வளர்ந்திருக்கும் பற்கள் தெரியச் சிரித்துச் சிரித்து அவள் பேசும் அழகுதான் லக்ஷ்மிக்கு அவளிடம் அவ்வளவு ஈடுபாட்டை ஏற்படுத்தியிருக்கும் என்று எண்ணமிட்டுக் கொள்வேன். அது மட்டுமா காரணம்? அவள் கொண்டு வரும் பச்சைப்பசிய கறிகாய்களும்தான்!

ஒரு நாள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது லக்ஷ்மி சொன்னாள்.

''இன்னும் ஒரு மாதத்துக்குக் கறிகாய்க்குத் திண்டாட்டம்தான்!''

''ஏன்?''

''கோமதிக்குக் கலியாணம் நிச்சயமாகியிருக்கிறதாம். இன்னும் ஒரு மாசத்துக்குக் கறிகாய் விற்க மாட்டாளாம். இனிமேல் நீங்கள் கறிகாய்க் கடைக்குப் போய் அவன் கொடுத்ததை வாங்கிக்கொண்டு வரப் போகிறீர்கள். அவனுகப் பார்த்து நல்லதாகப் பொறுக்கிக் கொடுத்தால்தானே உண்டு!''

நான் சாமான்கள் வாங்கும் திறமையைப் பற்றி அவள் அபிப்பிராயம் அது.

''மாப்பிள்ளை அயலாளு. உறவுக்காரனே தானு?'' என்று கேட்டேன்.

''அயலானுமில்லே. உறவுக்காரனுமில்லே. அவளுக்குத் தெரிந்த தோட்டக்காரன்.''

''தோட்டக்காரனு? அப்படியென்றால்...?''

'' இந்தப் பெண்ணுக்குச் சொந்தமா காய்கறித் தோட்டம் ஒன்றும் கிடையாதாம். அந்தக் கிராமத்திலேயே பழனியாண்டி என்பவனுக்குத்தான் பெரிய தோட்டம் இருக்கிறதாம். அந்தத் தோட்டத்துக் காய்களைத்தான் விலைக்கு வாங்கி வந்து விற்றிருக்கிறாள் கோமதி. அவனுக்கு இருபத்தைந்து வயசுதான் இருக்குமாம். கோமதி சின்னஞ்சிறுசா பார்க்க லட்சணமா இருக்கிறாளா? சொக்கிப் போய் விட்டான். இவள் வந்தாலே தினமும் நல்ல பிஞ்சுக் காயாகப் பொறுக்கிக் கொடுத்து அனுப்புவானும். அவனுக்கு இவள் மேலே இருந்த பிரியம்தான் நமக்குப் பிஞ்சாக நல்ல காயாகத் தினம் கிடைத்திருக்கிறது!''

'' இவளுக்கு அவனைப் பிடித்திருக்கிறதோ, இல்லையோ......?''

'' இல்லாமலா கலியாணத்துக்குச் சம்மதித்திருக்கிறாள்?''

அப்புறம் ஒரு மாதமென்ன, இரண்டு மாதத்துக்குப் பிறகுதான் கோமதி வந்தாள்.

முன்னைவிடக் கோமதி இப்போது இன்னும் கவர்ச்சியாக இருந்தாள். காதிலே சிவப்புக் கல் தோடும் மூக்கிலே வெள்ளைக் கல் மூக்குத்தியும். திருமணத்துக்குப் பின் ஏற்பட்ட

'பதவிசு'மாய் அவள் மேலும் புதிய எழில் பெற்றிருந்தாள்.

"கறிகாய்த் தோட்டத்தை அவர் விற்று விடப் போகிறாராம், அம்மா! உங்களை இனிமேல் தினம் எங்கே பார்க்க முடியப்போவுது?"

கறிகாய்த் தோட்டம் விற்பனையாவது பற்றிக் கூட அவள் வருந்தியதாகத் தெரியவில்லை. லக்ஷ்மியைப் பார்க்காமல் இருப்பது தான் அவளுக்குக் கவலையாக இருந்தது.

"ஏன் விற்கப் போகிறாராம்?"

"விற்று விட்டு, அந்தப் பணத்தைக் கொண்டு கடை நடத்தப் போகிறாராம்!"

"கலியாணத்தைச் சாக்கிட்டு இரண்டு மாசம் வராமல் இருந்துவிட்டாய். கறிகாய் வியாபாரமும் இல்லையானால் இனிமேல் எங்கே வரப் போகிறாய்?" என்று ஆதங்கத்துடன் கூறினாள் லக்ஷ்மி.

"அதென்ன அம்மா, அப்படிச் சொல்லி விட்டீங்க! பழகினவர்களை மறந்து அப்படிப் பறந்து போயிடுவேனா? எப்படியானாலும் ஒருபோது வந்து பார்த்துவிட்டுப் போயிட மாட்டேன்?"

அதன்பின் மாதங்கள் ஓடிவிட்டன.

நாளடைவில் நான் கோமதியை மறந்தே கூடப் போய்விட்டேன்!

அன்று ஞாயிற்றுக்கிழமை.

மத்தியானப் படக் காட்சிக்குப் போய் விட்டு நானும் லக்ஷ்மியும் வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தோம்.

கூட நடந்து வந்து கொண்டிருந்த லக்ஷ்மி திடீரென்று நின்று "கோமதி, கோமதி!" என்று கூப்பிட்டாள். எதிர்ப் பக்கத்துக் கடைப் பாதையில் வேகமாக நடந்து போய்க் கொண்டிருந்த கோமதி என் மனைவியின் குரல் கேட்டுத் திகைத்து நின்றாள்.

கோமதியா இப்படி ஆகி விட்டாள்?

வாரப்படாத தலை மயிர் காற்றிலே பறந்து கொண்டிருந்தது. கட்டுடலும் களையுமாய் இருந்த அவள் உடல் மெலிந்து பொலிவிழந்து காணப்பட்டாள்.

லக்ஷ்மியைப் பார்த்ததும் அவள் முகத்தில் மகிழ்ச்சியின் ஒளி படர்ந்தது. பாதையைக் கடந்து எங்கள் அருகே வந்து நின்றாள்.

அவள் முகத்திலே பூசியிருந்த துயரச் சாயை அவள் அருகே வந்து நின்றபோது நன்கு தெரிந்தது.



"என்னடீ, கோமதி! இப்படி ஆகி விட்டாய்?" என்று கேட்டாள் லக்ஷ்மி.

"நான் எப்படியம்மா ஆயிட்டேன்! நல்லாத்தான் இருக்கேன்! அவருக்குத்தான் ஒரு மாசமா உடம்பு சரியில்லே! பெரிய ஆஸ்பத்திரியிலே படுத்திருக்கிறாரு!" முகத்திலே

பெருகி வழிந்த வியர்வையைப் புடவையின் முந்தானையினால் துடைத்துக் கொண்டே அவள் பேசினாள்.

"என்னமா உடம்பு திடீரென்று?"

"நல்லாத்தாம்மா இருந்தாரு. போன மாசம் ஒருநாள் தலையை வலிக்குதுன்னு வந்து படுத்தாரு. அன்னைக்கு ராவே இப்படி மாபாரதமா சுரம் வந்துடுத்து. டைபாயிட் காய்ச்சலாம். ஒருதரம் குணமாய் மறுபடியும் போனவாரம் திரும்பிக்கிடுத்தம்மா! கடை, நகை, நட்டு எல்லாம் விற்றுவிட்டேன். அவரு பிழைச்சாப் போதும். காசு பெரிசா அம்மா? உசிரு இருந்தால் எப்படியும் பிழைச்சுக்கலாம்?"

அதன்பின் அவளைப் பார்க்கும் சந்தர்ப்பமே கிட்டவில்லை. என்னை இங்கே மாற்றி விட்டார்கள்.

ராமநாதன் கையை வாய்க்கெதிரே சொடுக்கிக் கொண்டே கொட்டாவி விட்டான்.

படுக்கையை விரித்து விட்டு, விளக்கை அணைத்து விட்டுப் படுத்துக் கொண்டோம்.

சற்றைக்கெல்லாம் பக்கத்திலே குறட்டை ஒலி கேட்டது. ராமநாதன் தூங்கி விட்டான். எனக்குத்தான் தூக்கம் வரவில்லை.

வெளியே மழை பெய்யும் ஒலி கேட்டது.

கோமதிதான் ராமநாதன் சொல்வதுபோல் இப்படிச் சீரழிந்து போய் விட்டாளோ?

"உசிரு இருந்தால் எப்படியும் பிழைச்சுக்கலாம்!" என்று அவள் கூறியது என் நினைவுக்கு வந்தது.

'எப்படியும் பிழைச்சுக்கத் துணிந்து விட்டாளா? சே!'

நினைக்கும்போதே சொல்லொணாத வேதனையில் நெஞ்சு வலித்தது.

'புருஷனுக்கு உடம்பு குணமில்லாதபோது அப்படிப் புழுவாய்த் துடித்த அவளா இப்படி ஆகியிருப்பாள்? இருக்கவே முடியாது!' என்று எண்ணிக் கொண்டேன்.

என்னென்னவோ தெளிவும் தெளிவற்றதுமான சிந்தனைகளில் திரிந்து கொண்டிருக்கும் போதே நித்திரையும் ஒரு வழியாய் என்னை அணைத்துக் கொண்டது.

பாதித் தூக்கத்தில் தெருவிலேயிருந்து வந்த பெருங் கூச்சலில் திடுக்கிட்டுக் கண் விழித்துக் கொண்டேன். தடதடவென்று தெருவிலே அடியோசை கேட்டது.

எழுந்து போய் வாசற் கதவைத் திறந்து வெளியே வந்தேன்.

இரண்டு மூன்று போலீஸ்காரர்கள் யாரோ இருவரைப் பிடித்துக் கொண்டு கிழக்கே போய்க் கொண்டிருந்தார்கள்.

அப்போது மழை விட்டு வானம் துலாம்பரமாக இருந்தது.

எதிர் வீட்டு வாசலில் என்னைப் போலவே கிழக்கே பார்த்துக் கொண்டு சாமா சாஸ்திரி நின்றுகொண்டிருந்தார்.

"என்னவாம்?" என்று கேட்டேன்.

"பிள்ளையார் கோயில் திண்ணைக்கு ஒரு தலுக்கு சுந்தரி வந்திருக்கு! இந்தப் பசங்க என்னவோ தகராறு பண்ணிக்கொண்டிருந்தார்களாம். பாராவுக்கு வந்த போலீஸ் பிடித்துக்கொண்டு போகிறார்கள்!"

"அவளைக் காணவில்லையே!"

"போலீஸெல்லாம் ஆம்பிளேதானே? எல்லாம் அப்படி அப்படித்தான்!" என்று பெரிதாகச் சிரித்தார் அவர்.

'அந்தப் பெண் கோமதியாக இருக்கக் கூடாது, கடவுளே!' என்று மனத்துக்குள் வேண்டிக் கொண்டேன்.

சாமா சாஸ்திரி உள்ளே போய் விட்டார்.

கதவைச் சாத்தி விட்டு உள்ளே போய்ப் படுத்துக் கொண்டேன். இன்ன தென்று விவரிக்க முடியாத வேதனையில் மனம் குழம்பிக் கொண்டிருக்கையிலேயே எப்படியோ தூங்கியும் போய்விட்டேன்.

ராமநாதன் எழுப்பியபோது நன்ருக விடிந்திருந்தது.

நான் விழித்த போதே கோமதியின் நினைவும் உடன் எழுந்து விட்டது.

"ராமநாதன்! குளத்தங்கரையோரமாய்க் கொஞ்ச தூரம் நடந்து போய் விட்டு வந்து அப்புறம் குளத்திலேயே குளித்து விட்டும் வந்துவிடலாம்" என்றேன். அவனும் 'சரி' யென்று புறப்பட்டு விட்டான். இருவரும் குளத்தங்கரைக்குப் புறப்பட்டோம்.

பிள்ளையார் கோவிலுக்குப் போய் 'அவள் கோமதியா அல்லது வேறு பெண்ணு?' என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல்தான் என்னை இயக்கியது. கோமதியாக இருந்தால் வெறுப்புத்தீர நாலு வார்த்தை திட்டி விட்டு வருவது என்று தீர்மானித்தேன்.

வடக்குமாட வீதி முனை. திரும்பும்போதே எதிரே பிள்ளையார் கோவிலில் ஒரு பெண் புடவை உலர்த்திக் கொண்டிருப்பது தெரிந்தது. "வரமங்கைத் தாயே, அவள் கோமதியாக இருக்கக்கூடாது!" என்று என் மனம் வேண்டிக் கொண்டிருந்தது.

ஆனல்......

பிள்ளையார் கோவிலை நெருங்கிய போது...? புடவை உலர்த்திக் கொண்டிருந்த பெண் இந்தப்புறம் திரும்பினுள். "ஹா...ங்...! கோமதியேதான். அவளா இப்படி ஆகி விட்டாள்? என்னை அவள் அடையாளம் கண்டு கொண்டு விட்டாள் என்பதை அவள் முகத்திலே படர்ந்த மகிழ்வொளியே கூறிவிட்டது.

சற்றுத் தள்ளி உட்கார்ந்து அடுப்பு மூட்டிக் கொண்டிருந்த ஆண்பிள்ளையிடம் ஏதோ சொல்லி விட்டு மடமடவெனப் படியிறங்கி ஓடி வந்தாள்.

ராமநாதன் வியப்புடன் நின்று விட்டான்.

"நீங்க இந்த ஊரிலேதான் இருக்கீங்களா? அம்மா சௌக்கியமா இருக்காரா?—அந்த மகராசி புண்ணியத்திலே அவரு பொழைக்க எழுந்திட்டாருங்க! சொத்து சுகமெல்லாம் போயிடுச்சு! போனல் என்னங்க? உசிரு இருக்கு. எப்படியோ பிழைச்சுக்கிட்டோம்" என்று பொரிந்து கொட்டிக் கொண்டே திரும்பிப் பின்புறம் பார்த்து, "இந்தாங்க, இங்கே கொஞ்சம் வாங்க!" என்று கூறினுள்.

அடுப்பு மூட்டிக் கொண்டிருந்த அந்த மனிதன் கும்பிட்டுக் கொண்டே எழுந்து வந்தான். அவன்தான் அவள் புருஷனுக இருக்க வேண்டும் என்று நான் ஊகித்துக் கொண்டிருக்கையிலே கோமதியே, "இவர்



கும்பகோணம் நகரசபைத் தலைவரும்
இந்தியன் ஹோமியோபதி
இன்ஸ்டிடியூட்டின் அதிபருமான
டாக்டர் வி. ஆர். மூர்த்தி
அவர்களின் புதல்வி

குமாரி சாருபாலா

8-2-58 சனிக்கிழமை மாலை ஏர் இந்தியா இன்டர்நேஷனல் ஆகாய விமானம் மூலம் ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி மாணவிகள் சிலருடன் ஐரோப்பாவுக்குப் பிரயாணமாகிருர். சென்னை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் மாணவியாக இருக்கும் குமாரி சாருபாலா, ஒரு நல்ல பரதநாட்டிய கலைச் செல்வியும் கூட. ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொழுது இத்தாலி, ஸ்விட்ஜர் லாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் இங்கிலாந்து முதலிய இடங்களில் இவர் சில பரதநாட்டிய நிகழ்ச்சிகளும் நடத்த சந்தர்ப்பம் ஏற்படும் எனத் தெரிகிறது.



பையன் :— **வாத்தியார் முழுச் சம்பளம் கொண்டு வான்னு சொல்லிருரம்மா?......**

தாயார்: **(பெண்ஷனர்மனைவி)—எங்கப்பாவே அரைச் சம்பளம் தான் வாங்குரு....நானும் அரைச் சம்பளந்தான் கொடுப்பேன்னு' சொல்லு போ!............**

தானுங்க!'' என்று அவனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

எதை எதை அவளிடம் கேட்க வேண்டும் என்று நினைத்தேனோ அவை என் நெஞ்சக் குழியிலேயே புதைந்து விட்டன.

'' ஆமாம், நீங்க இங்கே எங்கே வந்து சேர்ந்தீங்க? இப்படிப் பிள்ளையார் கோவில் திண்ணையிலே குடும்பம் நடத்திக் கொண்டு...'' என்று கேட்டேன்.

அவன்தான் எனக்குப் பதில் கூறினான். கோமதி கண்கலங்கி நின்றாள்.

'' நான் ஆஸ்பத்திரியிலே படுத்திருந்தப்போ, டாக்டருக்கு, பழத்துக்கு, பாலுக்கு, மருந்துக்கு என்று ஏகப்பட்ட பணத்தைச் செலவு பண்ணிட்டுதுங்க! நான் எவ்வளவோ சொன்னேனுங்க! கேட்காமல் என்னவோ சத்தியவான் உசிரை மீட்கிற சாவித்திரி மாதிரி நெனைச்சுக்கிட்டு...! இப்போ நிக்க நிழலில்லே. கையிலே சல்லிக் காசு இல்லே! எனக்குத் தெரிஞ்சவர் ஒருத்தரு இங்கே தாசில்தாரா வந்திருக்காரு. அவரு கிட்டே கேட்டு எதினாச்சும் வேலை வாங்கித் தரச் சொல்லலாமின்னு புறப்பட்டேன். என்னைத் தனியே விடமாட்டேன்னு அதுவும் புறப்பட்டிடுச்சு! பெண்களை அழைத்துக்கிட்டு வந்து அரசமரத்தடியிலே தங்க முடியுதுங்களா?— நேற்று ராத்திரி இரண்டு காலிப் பசங்கள் வந்து நானும் இவளும் தூங்கிக்கிட்டு இருக்கிறப்போ என்னைப் பிடிச்சு மரத்தோடு கட்டி வச்சுப்புட்டு இவ கிட்டே வம்பு பண்ண ஆரம்பிச்சுட்டானுக. கையும் காலும் கட்டிப் போட்டிருக்கிறப்போ நான் என்ன செய்ய முடியுங்க? பொம்பளையாட்டம் கதறி அழுதேன். அவன் போட்ட கூச்சலிலே நல்லவேளையாக அந்தப் பக்கம் தற்செயலாக வந்த போலீஸ்காரங்க, ஓடிவந்து அந்தப் பயலுகளைப் பிடிச்சுக்கிட்டாங்க! கேசு, கோர்ட்டு, சாட்சியமின்னு இது வேறே இப்போ!''

ஆனால் பேசி முடித்துவிட்ட அவன் அழுது கொண்டிருந்தான். கோமதியும் விசித்து விசித்து அழுது கொண்டிருந்தாள். என்னால் இந்தக் கண்ணீருவிக் காட்சியைச் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லே.

ராமநாதனைப் பார்த்தேன்.

அவன் முகம் பரிதாபமாக மாறியிருந்தது.

அரசமரத்தின் இலைகள் சலசலத்தன. வெய்யில் பளீரென்று அடிக்கத் தொடங்கியது. பெரிய சாலையில் போகும் பஸ் ஹாரன் சத்தம் தேய்ந்து ஒலித்தது.

சற்று நேரம் அமைதியாக நின்று கொண்டிருந்தோம்.

எனக்குள் ஏதோ தீர்மானம் பிறந்து வலுப் பெற்றது.

'' கோமதி! நீயும் உன் புருஷனும் என் வீட்டுக்கு வந்திருங்க! லக்ஷ்மி இப்போ ஊருக்குப் போயிருக்கா. உன் புருஷனுக்கு வேலை கிடைச்சதும் ஒரு சின்ன வீடாகப் பார்த்து வாடகைக்குப் பிடிச்சுடலாம். அதுவரைக்கும் நம்ம வீட்டிலே உங்களுக்கு ஒரு அறை ஒழித்துக் கொடுக்கிறேன்'' என்றேன்.

ராமநாதன் வியப்புடன் என்னைப் பார்த்தான். ஆனால் ஒன்றும் பேசவில்லே. கோமதியும் அவள் புருஷனும் ஏக காலத்தில், '' நிசமாவா?'' என்றனர்.

'' ஆமாம், புறப்படுங்க......!'' என்றேன்.

நாங்கள் கோவில் வாசலைத் தாண்டித் தெருவில் புகும்போது எதிரே சாமா சாஸ்திரி கைப்பெட்டியுடன் தலை தெறிக்க எங்கோ புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்தபோது எரிச்சல் அடிவயிற்றிலிருந்து கிளம்பியது. ' எவ்வளவு எளிதாக அபிப்பிராயம் கூறி விடுகிறார்!' என்று நினைத்துக் கொண்டேன்.

அவர் எங்களைக் கவனிக்காமல் வேகமாகத் தெருவில் நுழைந்து போய் விட்டார்.

'' விடிந்ததும் விடியாததுமாய் எங்கே ஓடுகிறார் சாமாசாஸ்திரி?'' என்று ராமநாதனைக் கேட்டேன்.

என் கேள்விக்கு ராமநாதன் பதில் கூறவில்லே. தம் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த பலராமய்யங்கார் பதில் கூறினார். '' பட்டணத்திலே அக்கா வீட்டிலே படிச்சிண்டிருந்த அவருடைய இரண்டாவது பெண் பிரேமா எங்கேயோ ஓடிப் போயிட்டுதாம்! இன்னைக்குப் பொழுது அந்தத் தந்திச் செய்தியோடுதான் அவருக்கு விடிஞ்சுது. பாவம்! மனுஷனுக்குத் தந்தியைப் படிக்கத் தெரியவில்லே. என்னைக் கூப்பிட்டுப் படிக்கச் சொன்னார். வயசு வந்த பெண். பட்டணக் கரையிலே என்ன சகவாசமோ......?'' வம்பளப்பில் பெயர் போன பலராமய்யங்கார் கண் காது மூக்கு வைத்துப் பேசலானார்.

அவரிடமிருந்து ஒருவிதமாக எப்படியோ தப்பித்துக் கொண்டு நடந்தோம்.

' குப்பை மேட்டில் குருக்கத்தி கொஞ்சிச் சிரிக்கிறது. கோபுரத்திலே கோட்டான் கூவி அலறுகிறது!' என்று என் சிந்தனை ரகசியமாக என்னுள்ளே முனகியது.

வட்ட மேஜை

ஓர் விண்ணப்பம்

தஞ்சை மாவட்டத்தில் பெருவாரியாகத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவை அரிசி தயாரிக்கும் தொழிற்சாலைகள் தான். இந்த ஒரு தொழில்தான் நமக்குத் தாய்மையானது. இந்தத் தொழில்கூட நாளடைவில் புறக்கணிக்கப்பட்டு நசித்துவிடுமென அச்சமடையவேண்டிய நிலையில் இருக்கிறது. உதாரணமாக, தஞ்சாவூர் அரிசியென மற்ற நாட்டவரால் (கேரளம், ஆந்திரம், கன்னடம்) புகழப்பட்டதற்கு மாறாக அதன் மதிப்பு இப்போது குறைந்து வருகிறது. நெல் சாகுபடி அதிகம் இல்லாத மாவட்டத்தில் அரிசி தயாரிக்கும் தொழிற்சாலைகளை அமைத்து இருநூறு மைல் தொலைவிலிருந்து நெல் கொள்முதல் செய்து அரிசியாகத் தயாரித்து, மேற்படி அரிசியை மேற்கொண்டு இருநூறு மைல் தொலைவில் கொண்டுசென்று நமது மாவட்ட அரிசியைவிட அதிகவிலைக்கு விற்பனை செய்து லாபம் அடைய முடிகிறதென்றால் அதன் காரணம் என்ன? உயர்ந்த ரகமாகத் தயாரிப்பதனால்தான். இந்த நிலை நீடித்தால் வெகு விரைவிலேயே நமது மாவட்டத்தில் பெருவாரியாக நடந்து வரும் இந்தத் தொழிலும் பாதிக்கப்படும். அநேக தொழிலாளிகளும் இசைப்புத்தரகர்களும் பாதிக்கப்பட்டு விடுவார்கள். இதனால் பொருளாதாரச் செலாவணியும் குறையக் கூடும். இதை யெல்லாம் மில் முதலாளிகள் உணர்ந்து ஊக்கத்துடன், நல்ல உயர்ந்த ரக அரிசியாகத் தயாரித்துத் தஞ்சாவூர் அரிசி என்றாலே முதல்தரமானது என்ற பெயரை நிலைநாட்டச் செய்யும்படி தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாயூரம்
27—1—58

பி. வரதராசன்

சிறந்த விளக்கம்

"மொழிப் பிரச்னை தீரவில்லை" என்ற 26–1–58 கல்கியின் தலையங்கம் நல்லதொரு விளக்கம். சென்னை சர்க்காருக்குக் கூறியுள்ள யோசனை வரவேற்கத் தக்கது. இந்தி விஷயத்தில் ராஜாஜியின் கருத்தைத் தெள்ளத் தெளிய எழுதியிருப்பது பாராட்டத்தக்கது.

சென்னை
23—1—58

திருமதி சம்பந்தம்

ஆட்சி மொழி

இந்தி மொழியைப் பாரதம் முழுவதும் பரப்புவதில் யாருக்கும் ஆட்சேபணையில்லை. ஆனால் அது ஆட்சி மொழியாகும் தகுதி இன்னும் பெறவில்லை என்பது பேரறிஞர்களின் கருத்து. பொது மக்களின் விருப்பத்துக்கு எதிராக அம் மொழியைத் திணிக்க ஏற்பாடு செய்வது முறையல்ல. திணிக்கவில்லை என்று சொல்லிக் கொண்டே இதுவரையில் தபால் கார்டு, மணி ஆர்டர் பாரம் இவைகளில் திணித்திருக்கின்றனர். பற்றாக் குறைக்கு 1958-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அகில இந்திய ரேடியோ ஒலி பரப்பிலும் "ஆகாஷ் வாணி" என்று புதிய பாணியில் ஒலி கிளம்புகிறது. இவ்விஷயமாக, 26-1-58 கல்கி இதழில் குடியரசுத் திருநாள், மொழிப் பிரச்னை தீரவில்லை, என்னசேதி பகுதிகளிலும், திரு எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் எழுதிய "மத்திய அலுவலக மொழி" என்ற கட்டுரையிலும் நல்ல முறையில் யாவருக்கும் எளிதில் விளங்கும்படி விவரிக்கப்பட்டுள்ளது. இதை நமது அரசாங்கத்தார் அவசியம் கவனித்து ஆவன செய்வார்களாக.


அதிராம் பட்டணம்
29—1—58

அ. உலகநாதன்

நிம்மதியாக வாழ வழி

சென்றமுடித்தனமான நிலச் சீர்திருத்தங்களால் நாட்டின் பல பகுதிகளில் விளைபொருள் உற்பத்திக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. இதுவரை அமுலுக்கு வந்துள்ள நிலச் சீர்திருத்தங்களின் விபரீதத்தால், "சிறு நிலச் சுவான்"களில் பலர் கிராமங்களை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. நிலச் சீர்திருத்தங்களால் நிலச் சுவான்களுக்கும், அவர்களது நிலவுடைமைக்கும் தொடர்பு அநேகமாக முற்றிலும் அறுக்கப்பட்டு விட்டது. சாகுபடியாளரிடமிருந்து அவர்கள் தங்கள் நிலங்களைத் திரும்பப் பெறுவது மிகவும் கஷ்டமாகி விட்டது. எனவே, அவர்கள் பிழைப்புக்காகப் பட்டணங்களை நாடவேண்டியிருக்கிறது. இதன் மூலம் பட்டணங்களில் வேலையில்லாத் திண்டாட்டமும், ஜாகை வசதி நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. இதைச் சென்னை மந்திரிகளும், சட்டசபை அங்கத்தினர்களும் நன்கு அறிந்திருப்பார்கள்.

ஆறரை ஏகருக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு, குடியானவர்கள் பாதுகாப்பு மசோதா, நியாய வார மசோதா இந்த இரண்டிலிருந்தும் பூரண விலக்கு அளிக்க வேண்டும். 1. 'சிறு நிலச்சுவான் தாரர்' சொந்தத்தில் பூமியை விவசாயம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறினால் குத்தகைக்காரர் ஒருவித ஆட்சேபணையும் கூறாமல் பூமியை நிலச்சுவான்தாரர் வசம் ஒப்படைத்துவிட வேண்டும். ஏனெனில் இவர்கள் விவசாயத்தையே நம்பி வாழ்பவர்கள். 2. ஆறரை ஏகருக்குக் குறைவாக உள்ள நிலச்சுவான்களுக்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் என்ன குத்தகை கொடுத்து வந்தாரோ அதே விகிதத்தில் குத்தகையை நிர்ணயிக்கவேண்டும். ஏனெனில் இவர்கள் அதையே நம்பி வாழ்க்கை நடத்துபவர்கள். இவர்களுக்கு வேறு தொழில் இல்லை. 3. ஆறரை ஏகருக்குக் கீழ்ப்பட்டவர்கள் வருமானம் பொறாத காரணத்தால் பூமியை விற்க நேரிடும். பூமியை வேறு ஒருவருக்குக் கிரயம்செய்தால் பூமியை உடன் சுவாதீனத்திற்குக் குத்தகைக்காரர் விட்டுவிட வேண்டும். ஏனெனில் பூமியைச் சுவாதீனம் செய்து கொடுத்தால்தான் வாங்குபவர் கிரயத்திற்கு வாங்கச் சம்மதிக்கிறார்.



பாரதத்தின் தலைநகரான புதுடில்லியில் குடியரசு தினம் கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது. குடியரசு தின விழாவில் தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் பல்வேறு தொழில் துறையில் உள்ளவர்களும், கலைத்துறையில் உள்ளவர்களும் கலந்து கொண்டனர். அவரவர்கள் தங்கள் திறமையைக் காண்பித்து மக்களுக்கு மகிழ்ச்சியூட்டினர். சென்ற ஐம்பது ஆண்டுகளாக இரும்புத் தொழில் துறையில் இணையற்ற முறையில் தொண்டாற்றி வரும் டாடா இரும்பு எஃகு தொழில் ஸ்தாபனத்தாரும் குடியரசு தின விழாவில் கலந்து கொண்டு பாரதம் தொழில் துறையில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்பதைக் காட்டினர். இரும்பைக்கொண்டு விதம் விதமான சாமான்கள் தயாரிக்கும் பிரம்மாண்டமான இயந்திரத்தையே ஊர்வலத்தில் கொண்டுவந்து மக்களின் பாராட்டுதலைப் பெற்றனர் டாடா கம்பெனியார். மக்களின் குதூகல ஆரவாரத்துக்கு மத்தியில் டாடா கம்பெனியின் மாபெரும் இயந்திரம் ஊர்வலமாகச் செல்வதைப் படத்தில் காணலாம்.

இந்த மூன்று சலுகைகளும், சென்னை அரசாங்கம் 'சிறு நிலச்சுவான்தாரர்'களுக்கு செய்தால்தான் சிறு நிலச்சுவான்கள் இந்த உலகில் நிம்மதியாக வாழ முடியும்.

திருமாதிரிபூர்
27-1-58 — எஸ். நாகராஜன்

கிராம மக்களின் தேவை

மதுரை ஜில்லாவிலுள்ள எங்கள் கிராமமான சிறு குடிக்கும் அதைச் சுற்றியுள்ள ஆவுச்சிப்பட்டி, செங்குளம், குட்டுப்பட்டி, சமுத்திராப்பட்டி, கொட்டாம்பட்டி, சொக்கம்பட்டி முதலிய கிராமங்களுக்கும் மின்சாரம் சப்ளை செய்வதற்கு 1955-ம் ஆண்டில் மின்சார இலாக்கா கணக்கெடுத்தார்கள். ஆனால் இன்றுவரை மின்சாரம் சப்ளை செய்வதற்கான அறிகுறிகளைக் காணோம். இப் பகுதியில் கிணற்றுப் பாசனத்தின் மூலமே கூடுதலாக இருப்பதால், மின்சார இலாக்கா உடனடியாகக் கவனித்து மேல் கண்ட கிராமங்களில் மின்சார வசதி ஏற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தால் விவசாயிகளின் குறைகள் நீங்கி விவசாயம் பெருக வழி ஏற்படும்.

மற்றும் எங்கள் கிராமத்தில் பஸ் வசதியும் இல்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதியும் பதில் இல்லை. அதிகாரிகள் இனிமேலாவது திண்டுக்கல்-காரைக்குடி-திண்டுக்கல், மதுரை-புதுக்கோட்டை-மதுரை (வழி நத்தம்) பஸ்களைச் சிறுகுடி வழியாகப் போய் வர அனுமதித்து உதவுவார்களா ?

சிறுகுடி
23—1—58 — ஆர். தியாகராஜா

ஆய்ந்தோய்ந்து பாருங்கள்

இன்று தமிழ் நாட்டில் நிலவி வரும் மொழிப் பிரச்னையானது பல பெரும் தலைவர்களின் கவனத்தை இழுத்திருக்கிறது. அரசியல் மேதைகளில் சாணக்கியருக்கு ஒப்பான ராஜாஜி அவர்கள் ஒரு காரியத்தையும் நிரயோசியாமல் பேசுவதோ எழுதுவதோ கிடையாது. அவர் சமீபத்தில் ஒரே மேடையில் அண்ணாதுரையுடன் பேசி இருப்பது பலருக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. ஹிந்தி ஆதரவாளர்களோ அது தேசத்தின் ஐக்கியத்தைக் குலைக்கும் என்று கூறுகிறார்கள். அது தவறு.

1. ஹிந்தியையே அடியோடு எதிர்ப்பது வேறு. 2. ஹிந்தி திணிப்பை முன்னேற்பாட்டுடன் பலவந்தமாகத் தமிழ் மக்களின்மேல் திணிப்பது வேறு. இதில் இரண்டாவது திணிப்பைத்தான் ராஜாஜி எதிர்க்கிறார். அதை அறியாமல் காங்கிரஸ் அக்ராசனர் தேபர், காரியதரிசி சத்யநாராயண ராஜு, மொரார்ஜி, லோஹியா போன்றவர்கள் ராஜாஜி தேச ஐக்கியத்திற்குத் தீங்கு தேடுவதாகச் சொல்கிறார்கள்.

தேச ஐக்கியத்திற்கு பாடுபட்டவர்களில் முன்னவர்களுக்கு ராஜாஜி குறைந்தவர் அல்ல என்பதை அவர்களே அறிவார்கள். தீமை நேரும் என்று தெரிந்தால் அதை மக்கள் முன்னிலையில் சொல்ல வேண்டும். இன்று ராஜாஜியைக் காங்கிரஸ் மகாநாட்டிற்கு வரவழைத்து விவாதம் செய்து பின்னர் மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றி இருக்க வேண்டும். ராஜாஜியின் எத்தனையோ யோசனைகள் முன்பு ஒப்புக்கொள்ளப்படாமல் பின்பு 'ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கின்றன. காங்கிரஸ் தலைவர்கள் ராஜாஜியின் இந்த யோசனையையும் அவசரப்படாமல் ஆய்ந்தோய்ந்து நல்ல முடிவுக்கு வருவார்களாக.

மேட்டூர் அணை
26—1—58

கே. ஸ்ரீனிவாசன்

கலைகண்ட மலேயா

"கலை 'கண்ட மலேயா'' கட்டுரைத் தொடரில் ''பினங்கில் பிரியாவிடை'' என்ற கடைசி அத்தியாயத்தில் ஒரு தவறு நேர்ந்து விட்டது. பினங்குத் தமிழர் பிரதிநிதித்துவ சபையின் சார்பில் பிரியா விடைக் கூட்டம் ஆகஸ்டு 6-ல்தான் நடைபெற்றது. ஜூலை 6-ல் அல்ல! பினங்கிலிருந்து நாங்கள் புறப்பட்ட தேதி ஆகஸ்டு 9; சென்னை வந்து சேர்ந்த தேதி ஆகஸ்டு 15.

சென்னை
30-1-58

டி. கே. சண்முகம்
புத்தனேரி சுப்பிரமணியம்

சம்பளக் கமிஷன்

சம்பளக் கமிஷனிடம் சங்கங்களும், தனிப்பட்டவர்களும் விலைவாசி விவரத்தையும் அவரவர்கள் யோசனைகளையும் தெரிவிக்கலாமென்றும் அவற்றைக் கமிஷன் பரிசீலனை செய்யுமென்றும் அறிவிக்கப்படுகிறது. எனவே, எங்கள் வீட்டுக் குப்புப் பாட்டி கீழ்க்கண்ட புள்ளி விவரங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறாள்:

1943-ல் விலைவாசி	1957 விலை	மடங்கு விகிதம்
1 படி அரிசி 0-3-6	ரூ. 1-2-0	5 மடங்கு
1 படி உ. பருப்பு 0-3-6 அல்லது 0-4-0	ரூ. 1-4-0	5 மடங்கு
1 வீ. மிளகாய் 0-9-0	ரூ. 3-8-0	6 மடங்கு
1 வீ. காப்பி 1-2-0	ரூ. 7-8-0	7 (சுமார்)
1 வீ. சர்க்கரை 0-5-0	ரூ. 1-8-0	5 மடங்கு
1 வீ. நல்லெண்ணெய் 0-7-0	ரூ. 3-0-0	7 மடங்கு
1 கு. விறகு 0-5-0	ரூ. 1-14-0	6 மடங்கு
1 கு. கரி 1-0-0	ரூ. 5-8-0	5 மடங்கு
1 படி பால் 0-6-0	ரூ. 1-8-0	4 மடங்கு
1 தேங்காய் 0-0-9	ரூ. 0-4-0	4 மடங்கு

இம்மாதிரி சாமான்களின் விலை பல மடங்கு உயர்ந்திருக்கிறது. தவிர, வீட்டு வாடகை உயர்வு சொல்ல இயலாது. 1942-ல் ஒரு புருஷனும் மனைவியும் 40 ரூபாய் சம்பளத்தில் மாதம் 5 ரூபாய் மிச்சம் பிடிக்க முடிந்தது. குழந்தைகள் பிறந்து குடும்பம் பெருகாமல் இருந்தால்கூட அந்தக் குடும்பத்துக்குக் குறைந்தபக்ஷம் ஐந்து பங்கு அதிக வரும்படி வேண்டும். அதாவது ரூ. 200 ஆவது வேண்டும். ஆனால் வருவது ரூ. 120 தான். எப்படி அவர்கள் ஆரோக்கியத்துடன் இருக்க முடியும்? இவைகளை மனத்தில் கொண்டு கமிஷன் சிபார்சு செய்யும் என எதிர்பார்க்கலாமா!

சென்னை
28—1—58


ரங்கநாயகி

அருணகிரிநாதர் பிரதிஷ்டை

○●○



தமிழ்க் கடவுள் முருகனுக்குத் தித்திக்கும் தீந்தமிழில் திருப்புகழ் பாடி அருளிய அருணகிரிநாதரை முருகனடியார்கள் மறக்கவில்லை. அருணகிரிநாதரின் திருவுருவப் பிரதிஷ்டை செய்து திருப்புகழ் பாடி, தெருவெல்லாம் பக்தி வெள்ளம் பாய்ந்தோடச் செய்து வருகின்றனர். சென்ற மாதம் 26ந் தேதியன்று சென்னை பூக்கடை மல்லீசுவரர் ஆலய அனுபூதி மண்டபத்தில் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் அனுக்கிரகத்தால் அருணகிரிநாதர் திருவுருவப் பிரதிஷ்டை விழா நடைபெற்றது. இந்த வைபவத்தைத் திருப்புகழ்மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் நடத்தி வைத்தார். சென்னையிலுள்ள பல திருப்புகழ் சபையினர் அருணகிரிநாதர் சன்னதியில் திருப்புகழ் பஜனையும், அருட் செல்வர்களின் சொற்பொழிவுகளும் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றனர். பெருந்திரளான மக்கள் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உள்ளம் குளிர்கின்றனர்.



மூன்றும் கதை

ரா.வீ

பிரும்மா !

விஷ்ணு !

சிவன் !

கேள்விப்பட்ட பெயராகத் தோன்றவில்லை

'ஆக்கல், காத்தல், அழித்தல் தொழி மேற்கொண்டிருக்கும் கடவுளர்கள்தானே. என்று கேட்கிறீர்களா?

தப்பு! தப்பு!

நான் சொல்ல வருபவர்கள் எழுத்துலக திலே பிரசித்தி பெற்றவர்கள்.

ஆபீஸ் நேரம் போக மற்ற நேரங்களி பேனாவும் கையுமாக, பேப்பரும் மேசையு மாக உட்கார்ந்து இலக்கியப் படைப்பி முழு கவனமும் செலுத்துவதால் 'பிரும்மா என்று தமக்குத் தாமே பட்டம் சூட்டி கொண்டவர் முதல்வர்.

இலக்கியம் - அது நல்லதோ தீயதோ காத்தே தீருவது என்று கங்கணம் கட்டி கொண்டு அதையே தமது காரியமாக

கொண்டு 'விஷ்ணு' என்று பெயர் புனைந்து கொண்டவர் இரண்டாமவர்.

இலக்கியத்தில் இடையிடையே தலைகாட்டும் தீயசக்திகளைத் தமது முக்கண் விமரிசனத் தினால் தகர்த்தெறியும் ஆற்றலைத் தம்முள் அடக்கிக் கொண்டிருப்பதாகக் கனவு கண்டதனால் 'சிவம்' என்று புனைபெயரைத் தாங்கி நிற்பவர் மூன்றுமவர்.

பிரும்மா, விஷ்ணு, சிவன் என்று பெயர் பூண்டு விட்டதனாலேயேதானோ என்னவோ, மூவரும் மிக மிக அன்யோன்யமாகப் பழகினர்; மூவரும் ஓர் உயிர் மூவுடலாகத் திகழ்ந்தனர்.

எழுத்தாளர்கள் என்று கூறும்பொழுது 'ஏழை' என்ற ஒரு அடைமொழி முன்நின்று சாபக்கேடாகத் திகழ்கிறது அல்லவா? அந்தச் சாபக்கேடு நல்லவேளையாக அவர்களுக்குக் கிடையாது. காரணம், மூவரும், மூன்று காரியாலயங்களில் உத்தியோகம் பார்ப்பவர்கள். எழுத்தைத் தமது வயிற்றுப் பிழைப்பாக — எழுத்தாளர் அலுவலகத்தைத் தமது உத்தியோக அலுவலமாக அவர்கள் கொள்ளவில்லை. பொழுதுபோக்குக்கு எழுதுவது, அதில் வரும் சன்மானத்தைக் கொண்டு, ஊர் சுற்றி, உலகம் சுற்றி அறிவையும் அநுபவத்தையும் வளர்த்துக் கொள்வது, பிறகு அதையே முதலீடாக்கி மேலும் வருவாயைப் பெருக்கிக் கொள்வது என்ற சீரிய திட்டத்தை வகுத்துக் கொண்டிருந்தனர். பல ஐந்தாண்டுத் திட்டங்களைப் போல் இல்லாமல், நடைமுறையிலும் அதைச் செயலாக்கி வந்தார்கள்.

முதல் வருஷம் இந்தியப் பிரயாணம் என்றால், இரண்டாவது வருஷம் இலங்கைப் பிரயாணம். இப்படி எத்தனை எத்தனையோ பிரயாணங்களை மேற் கொண்டவர்கள் இந்த வருஷம் அமெரிக்கப் பிரயாணத்துக்கு அடிகோலிக்கொண்டார்கள்.

அமெரிக்க நாட்டிலே அடி எடுத்து வைத்த அவர்கள் நியூயார்க் நகரத்தை அடைந்து வானளாவ ஓங்கி நிற்கும் கட்டடங்களைக் கண்ணுற்றனர். அண்ணாந்து பார்த்ததில் கழுத்து சுளுக்கிக் கொண்டது. 'ஓங்கி உலகளந்த உத்தமன் பெயர் பாடிய'வர்களின் நாட்டிலே பிறந்தவர்களான அவர்களுக்கு ஒரு ஆசை உதித்தது. முப்பத்தெட்டு அடுக்கு நன் கொண்ட மாடிக் கட்டடத்தில் முப்பத்தெட்டாவது மாடியில் அறை வாடகைக்கு எடுத்துக் கொண்டு வாசம் செய்ய வேண்டும் என்பதுதான் அந்த ஆசை. அவர்களது அந்த ஆசையும் எவ்வித இடையூறுமின்றி நிறைவேறியது.

ஒருநாள் இரவு நகர்வலம் வந்து அவர்கள் திரும்பும்பொழுது வெகு நேரமாகி விட்டது. ஊரே உறங்கியபின், அந்தக் கட்டடத்தின் மின்சார விளக்கும் உறங்கி விட்டது! எத்தனைதான் பள்ளியெழுச்சி பாடினாலும் அது பொழுது விடிந்துதான் கண் விழிக்கும் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்!


முப்பத்தெட்டாவது மாடியில் இருக்கும் அறைக்கு எப்படிப் போவது? ஒரு மாடியா, இரண்டு மாடியா? இப்படி நடந்தே ஜாலியாகப் போய் விடலாம் என்பதற்கு? யோசித்துப் பார்த்ததில் நடந்து படியேறுவதைத் தவிர, வேறு வழியிருப்பதாகத் தோன்றவில்லை. நகர்வலம் வந்ததில் உள்ள ஆனந்தம் அத்தனையும் மண்ணாகி விட்டது.

கடைசியில் வேறு வழி இல்லாமல் அவர்கள் ஓவர்கோட், கோட், பாஸ்கெட் முதலியவற்றைக் களைந்து கீழே உள்ள காரியாலயத்து அறையில் ஒப்படைத்தார்கள். உடலில் அதிகப் பளுவை வைத்துக் கொள்ளாமல், நடந்தே படியேறித் தங்கள் அறையை அடைந்து விடுவது என்றும் அவர்கள் தீர்மானித்தார்கள்.

தீர்மானம் செயலாக முகிழ்த்தது. ஆனால் முதல் மாடி தாண்டுவதற்குள்ளேயே அவர்களுக்குச் சிரமத்தின் நிலை நன்கு புலனாகியது.

இந்தச் சிரமத்தை உணராமல் படியேறுவதற்கு என்ன செய்யலாம்?

பிரும்மாவுக்குத் திடீரென்று ஒரு யோசனை பளிச்சிட்டது. சொன்னார்: "நாமோ முப்பத்தெட்டாவது மாடியை அடைந்தாக வேண்டும். சிரமத்தை மறந்து நாம் படியேற



வேண்டுமென்றால், ஒருவர் பின் ஒருவராக நாம் மூவரும் கதை சொல்லலாம். கதை சொல்லிக் கேட்பதனால், கதை சுவாரஸ்யத்தில் நடந்து செல்லும் களைப்பும் தோன்றாது. சீக்கிரமும் போய்ச் சேர்ந்துவிட முடியும்!''

பேசாமல் மௌனமாக நடப்பதைக் காட்டிலும் கஷ்டமான காரியம் வேறு ஒன்றும் இல்லை என்பதை உணர்ந்த மூவரும், கதை சொல்லும் யோசனையை ஒருமுகமாக ஆதரித்தார்கள்.

யோசனை சொன்ன பிரும்மாவின் தலையிலேயே முதலாவதாகக் கதை சொல்லும் பொறுப்பு சுமந்தது. அவர் சொன்ன கதை பண்டைக் காலத்துப் பிராசீனமான காதல் கதை. அது வருமாறு:

கதாநாயகன் இளைஞன்; காதலன். அவனது செம்மட்டையான கேசங்கள், வளைந்த காலத்து மேகத்தை நிகர்த்திருந்தன. அவனது நீலவிழிகளில் நீலத் திரைக்கடலின் ஆழம், ஆழங் காண முடியாமல் காட்சி அளித்தது. அவன் புல்லாங்குழலைக் கையில் ஏந்தி இன்னிசைஎழுப்பி, தன் இதயத்துக் கினியாளை நினைத்துக் கசிந்து உருகிக் கொண்டிருந்தான். அவன் புல்லாங்குழலிலே ஒரு அபூர்வ சக்தி இருந்தது. யாழில் வல்ல அகத்தியரின் இன்னிசை, கல்லை நீராக்கி, நீரைக் கல்லாக்கும் ஆற்றல் படைத்திருந்தது என்று சொல்வார்களே, அந்த அபூர்வ ஆற்றல், அவனுடைய புல்லாங்குழலுக்கும் இருந்தது.

ஒருநாள் இரவு திடீரென்று தீப்பற்றி மூங்கிற் காடு முழுவதும் எரிந்து விட்டது. அதோடு அவனுடைய புல்லாங்குழலும் பஸ்மமாகி விட்டது. தன் புல்லாங்குழல் போன அதிர்ச்சியில் அவன் பித்தனாகி விட்டான். தன் காதலியை நினைத்து நினைத்துப் புலம்பியவாறே காடு காடாக அலையலானான். அவன் போகாத இடம் இல்லை; தேடாத இடமில்லை. ஆனால் இருவரும் சந்திக்கவே முடியவில்லை. அவனது புலம்பலைச் சகிக்காத வனதேவதைகள் அவன்மேல் அருள் சுரந்து அவனைத் தன்னுள் அடக்கமாக்கிக் கொண்டு விட்டன. அவன் சமாதியில் கொடிகள் மலரைச் சொரிந்தன; நட்சத்திரங்கள் நீரைச் சொரிந்தன. இன்னும் கூடக் காடுகளில் மரங்களும் கொடிகளும் மலர் சொரிவதையும் நட்சத்திரங்கள் கண்ணீர்சொரிவதையும் காணலாம்.



பிரும்மா தம் பெயருக்கேற்ப, பிரும்மம் தோன்றித் தோன்றாக் காலத்துக் கதையைச் சொல்லி முடித்தார். கதை ரசமானதாக இருந்தது; உணர்ச்சி நிறைந்ததாக இருந்தது. சொல்லும் முறையும் கனிவுற அமைந்து விடவே, சொன்னவரும் கேட்டவர்களும் தங்களை மறந்த நிலையை எய்தினார்கள்.

கதை முடிந்தபொழுது, தங்கள் நினைவுக்கு வந்து அவர்கள் பார்த்தார்கள். பதிமூன்றாவது மாடியைக் கடந்து பதினான்காவது மாடியில் ஏறிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் உணர்ந்தார்கள். அவர்களுக்குப் பெருமிதம் உண்டாயிற்று. 'அப்பாடா' என்று நிம்மதியாக மூச்சுவிட்டு விட்டு, மீண்டும் உற்சாகத்துடன் படியேறலானார்கள்.

அடுத்த படியாக, விஷ்ணு கதை சொல்லும் கட்டம். பல அவதாரங்கள் எடுத்துத் தம் ரகசியத்தைத் தமக்குள்ளேயே அடக்கிக்கொண்டு விட்ட 'விஷ்ணு'வின் பெயரைத் தமது புனை பெயராகக் கொண்டு விட்ட காரணத்தினால் தானோ என்னவோ, விஷ்ணு சொன்ன கதை ரகசிய — மர்மங்கள் நிறைந்ததாகவும், மயிர்க் கூச்செடுப்பதாகவும் அமைந்து விட்டது. அக் கதை வருமாறு:

ஒரு வியாபாரி. அவர் கோடீசுவரன். அவருக்கு ஒரே பெண். அவளைக் கொள்ளைக் கூட்டத்தினர் அபகரித்துச் சென்று ஒளிந்து விட்டனர். மறுநாள் வியாபாரியின் வீட்டு முற்றத்திலே ஒரு பிணம் கிடந்தது. தலை சிவப்பட்டு முண்டம் மட்டுமே காணப்பட்டது. தம் மகளின் பிணம் என்றே வியாபாரி முடிவு செய்து நம்பிவிட்டார். அன்று முதல் வியாபாரி துயரமே உருவாக இருக்கலானார். வியாபாரத்தைக் கவனிப்பதில்லை; வேலைவெட்டிகளைக் கவனிப்பதில்லை. அதனால் நாளுக்கு நாள் அவர் நிலை — மன நிலை, பொருளாதார நிலை—எல்லாமே மோசமாகத் தொடங்கியது.

அவர் வசித்து வந்த தெருவிலேயே ஒரு வாலிபன் இருந்தான். அவன் ஒரு சிறு நடமாடும் கடை வைத்திருந்தான். ஆரம்பத்திலிருந்தே, அவன், ஏனோ தெரியவில்லை, இந்த நிகழ்ச்சியிலே அதிக அக்கறை செலுத்தி வந்தான். வியாபாரியை எல்லோருமாகச் சேர்ந்து ஏமாற்றுகிறார்கள் என்ற சந்தேகம் அவன் மனத்தில் ஆதி முதற்கொண்டே வலுப் பெற்றிருந்தது. எப்படியாவது உண்மையைக்

கண்டுபிடித்து வியாபாரிக்கு உதவ வேண்டும் என்று திட்டமிட்டான். பலவிதமான முயற்சிகள் செய்தும் அவனுக்குத் துப்புத் துலங்கவில்லை. ஆயினும் 'நமக்கு ஏன் இந்த வம்பு?' என்று சும்மா விட்டுவிட அவன் மனம் இடம் தரவில்லை. முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார், முயற்சி திருவினையாக்கும் என்ற முதுமொழிகளை அறிந்திருந்த அவன் சிறிதும் மனம் சோராமல் இந்த விஷயத்தில்'தன் சோதனையை மட்டும் செய்து வந்தான். நாட்கள் மாதங்களாயின. மாதங்கள் வருஷங்களாகக் கூட முயன்றன. இந்தச் சமயத்தில் அவனுக்குத் திடீரென்று ஒரு தடையம் கிடைத்தது. வியாபாரிக்குச் சகோதரன் மகன் என்று சொந்தம் பாராட்டக் கூடியவன்ஒருவன் இருக்கிறான்என்றும், அவன் நோக்கம் வியாபாரியின் சொத்தை அடைவது என்றும், அவனது சூழ்ச்சிகளாகத்தான் இவை இருக்க வேண்டும் என்றும் தெரிய வந்தன. அதோடு இன்னொரு சமாசாரமும் தெரிந்தது. வியாபாரியின் மகள் மரிக்கவில்லை என்றும், அவள் அந்தச் சகோதரன் மகன் என்று சொல்லிக் கொள்ளப்படுபவனால் சிறை வைக்கப்பட்டிருக்கிறாள் என்பதையும் அவன் கண்டு பிடித்தான். கண்டு பிடித்துவிட்டால் மட்டும் போதுமா? கண்டு பிடித்ததைக் கிரியாம்சையில் காட்டினால்தானே முயற்சிக்குரிய பலன் கிட்டியதாகும்?

எனவே, மிகுந்த சிரமத்தின்பேரில் போலீஸாரின் உதவியைப் பெற்று அந்தப் பெண்ணை அச் சிறையிலிருந்து மீட்டான். தன் மகளை அடைந்த வியாபாரிக்கு மீண்டும் தன் வாழ்வு மலர்ந்தது போலாகியது. அவன் அந்த நடமாடும் கடைக்குச் சொந்தக்காரனான வாலிபனுக்கே தன் மகளை மணம் முடித்து வைத்தான். பிற்காலத்தில் அந்த வாலிபனே வியாபாரியின் சொத்து முழுமைக்கும் வாரிசானான்.

இந்தக் கதை உடலின் சதைகளைக் கவ்வக் கூடியதாகவும், மயிர்க் கூச்செறிக்கச் செய்யக் கூடியதாகவும் அமைந்து விட்டது. அதைக் கேட்டு மற்ற இரு நண்பர்களும் அயர்ந்தே போய் விட்டார்கள்.

'மேலே என்ன, மேலே என்ன?' என்று அறியும் ஆவலைத் தூண்டிவிடக் கூடியதாகவும், விஸ்தாரமாகவும் கதை சொல்லப்படவே, மேலும் இருபத்து மூன்று மாடிகளை நாம் தாண்டி விட்டோம் என்ற நினைப்பே அவர்களுக்கு உண்டாகவில்லை. இரண்டு கதைகளும் சேர்ந்து கொஞ்சம்கூடக் களைப்பு ஏற்படச் செய்யாமல் அவர்களை முப்பத்தேழு மாடிகளைத் தாண்டும்படி செய்து விட்டன.

இன்னும் ஒரே ஒரு மாடிதான் பாக்கியிருந்தது. மூன்றாவதான சிவம் சொல்ல வேண்டிய கதையும் பாக்கி யிருந்தது.

''சிவம்! நாம் கடைசி மாடியைக் கடந்து விட்டாலும் பரவாயில்லை, நீ கதைசொல்லித்தான் ஆகவேண்டும். உன் கதையைக் கேட்காமல் இன்று நாங்கள் விடப் போவதில்லை!'' என்றார் பிரும்மா.

''இன்றுஇரவு சிவராத்திரியாகவே ஆனாலும் சரி, நாங்கள் உன் கதையைக் கேட்டுவிட்டுத்தான் கண் அயர்வோம்!'' என்று பிடிவாதமாகச் சொன்னார் விஷ்ணு.



மானேஜர்: என்ன சார் ஆபீஸில் எப்பொழுதும் நீங்கள் பலமாகக் குறட்டை விட்டுக் கொண்டு தூங்குகிறீர்களாமே!

குமாஸ்தா: சுத்தப் பொய், நான் தூங்கும் போது குறட்டை விடுகிற பழக்கமே இல்லை...!

''அவ்வளவு சிரமம் உங்களுக்குத் தர மாட்டேன்!''

''அப்படியானால் நீ கதை சொல்லப் போவதில்லையா?''

''கதை சொல்லாவிட்டால் இங்கே யார் விட்டார்கள்?''

''சொல்வதற்குள் அவசரப் படுகிறீர்களே! நான் கதை சொல்லத்தான் போகிறேன்; கேட்டுத்தான் தீரப் போகிறீர்கள். ஆனால் உங்களுக்கு அவ்வளவு சிரமம் இராது!''

''அப்படியென்றால்...?''

''நான் சொல்லப்போவது ரொம்ப ரொம்பச் சிறிய கதை. ஆனால் நிசமானது: உண்மையானது. நடந்தது. நடக்கிறது. நடக்கப் போவது ..!''

''பொய்க் கலப்பில்லாத முற்றிலும் உண்மைச் சம்பவம் என்று சொல்லு!''

''ஆமாம்!''

''இந்த நாட்களில் உண்மைச் சம்பவத்துக்குத் தான் மதிப்பு அதிகம். அப்படியானால் சட்டுப்புட்டென்று சொல்லேன்! ஆவலைக் கிளப்பிவிட்டுவிட்டு வேடிக்கை பார்க்கிறாயே! இன்னும் நாலு படிகள் கூடப் பாக்கியில்லையே!'' என்று அவசரப்படுத்தினார் பிரும்மா.

''அதுதான் சொல்லிக் கொண்டிருக்கிறேனே! அதற்குள் அவசரப்பட்டால்....?'' என்று சொல்லியவாறே கடைசிப் படியில் காலை வைத்த சிவம், தன் கால் சட்டைப் பையில் கையை விட்டார். பிறகு மிகுந்த மன வருத்தத்துடன், ''என் கதை மிக மிகச் சாதாரணமானது. ஒரே ஒரு வார்த்தையில் முடித்து விடுகிறேன். அறைச் சாவி, நாம் கீழே வைத்துவிட்டு வந்த ஒருவர் கோட் பையிலேயே தங்கி விட்டது!'' என்றார்.

கி.ரா.கோபாலன் குடும்ப உதவி நிதி

ஸ்ரீமதி சாரதா சுப்பிரமணி யம், பம்பாய். ரூ. 20.00
ஸ்ரீமதி லலிதா ஸ்ரீனிவாசன், அபிராமபுரம். ரூ. 10.00
ஸ்ரீமதி கே. விஜயலக்ஷ்மி கோயமுத்தூர். ரூ. 5.00
ஸ்ரீமதி பி. கே. பார்வதி, கோயமுத்தூர். ரூ. 5.00
ஸ்ரீமதி கே. எஸ். ராஜலக்ஷ்மி, டாடாபுரம். ரூ. 5.00
ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாஸன், புரசை வாக்கம். ரூ. 5.00
டாக்டர் எஸ். பாலகிருஷ்ணன், கோயமுத்தூர். ரூ. 5.00
ஸ்ரீ டி. இ. வீரராகவன், கல்கிரி. ரூ. 5.00
ஸ்ரீ சாம்பசிவன், டி. எஸ். வி. மதராஸ், ஏர்போர்ட். ரூ. 4.50
ஸ்ரீமதி எச். வி. பதுரம்மா, ஹைதராபாத் ரூ. 4.00
ஸ்ரீ எம். பழனியப்பன், இலங்கை ரூ. 1.92
நூரவாணிநகர் நூல் நிலையம் பங்களூர். ரூ. 1.25
ஸ்ரீ சுகவனம், பங்களூர். ரூ. 0.50
ஸ்ரீ ஆர். வெங்கடசுப்பிரமணி யன், சிவகிரி. ரூ. 0.50
ஸ்ரீ வி. வி. பி. ராவ், பங்களூர் ரூ. 0.25

ரூ. 2. நன்கொடை அளித்தவர்கள்:

ஸ்ரீ டி. எஸ். ராஜகோபால், பங்களூர்; ஸ்ரீ என். பெருமாள், ஊர்காம்; ஸ்ரீமதி ஜயா சந்தானம், புதுதில்லி; ஸ்ரீ ராமஸ்வாமி அய்யர், கல்கத்தா.

ரூ. 1. நன்கொடை அளித்தவர்கள்:

திருவாளர்கள் ஏ. எஸ். மணி, டி. ராக வேந்திரன், எம். விசுவநாதன், ஏ. கே. லக்ஷ்மணாச்சார், கே. பஞ்சாபகேசன், எஸ். பி. தர்மராஜ், பங்களூர்; எஸ். ஆர். ஆதிமூலம், சிவகிரி; நா. ராமச்சந்திரன், சைதாப் பேட்டை; வி. எஸ். ராமசாமி அய்யர், பி. எஸ். சர்மா, கல்கத்தா; திருமதி ஷாஜ ஹான், கொழும்பு.

தில்லி தமிழ்ச் சங்கம் மூலம் வருலான தொகை ரூ. 32-க்கு விவரம்:

திரு சுப்புடு ரூ. 10.00
திருமதி பார்வதி ரூ. 5.00
திருவாளர்கள் பூர்ணம் விச்வநாதன், ஒ. என். நாகரத்தினம், இசக்கி, இ. ரா. பஞ் சாபகேசன், வி. எஸ். மணி, ரா. பார்த்த சாரதி, ந. அருணாசலம், சித்தலிங்கம், என். ஆர். ராஜகோபாலன், ஆர். எஸ். வெங்கட் ராமன், என். ஸ்ரீனிவாசன், வி, என். சுப்ப ராவ், டி. ஜி. அனந்தசாமி, ஆர். வி. அய்யர், ரூ. 17.00

பம்பாய் சிவ. கோபால கிருஷ்ணன் மூலம் வருலான தொகை ரூ. 51-க்கு விவரம்:

ஸ்ரீ கு. க. சுந்தரம், முருகேசன் ரூ. 7; எஸ். வெங்கடாச்சாரி ரூ. 5; ரா. சாரங்கன் ரூ. 3; நவநீதன் ரூ. 3; ரா. ஸ்ரீனிவாசன் ரூ. 2; சுப. மங்களேசுவரன் ரூ. 2; கி. சிவராமன் ரூ. 2; டி. எஸ். வெங்கடராமன் ரூ. 2; க. ஸ்ரீ. நாராயணன் ரூ. 2; ரா. வெங்க டேஷ் ரூ. 2; எஸ். ராமன் ரூ. 2; ச. கே கோபாலன் ரூ. 2.

ரூ. 1. நன்கொடை அளித்தவர்கள்:

திருவாளர்கள் வேணுகோபால், லெ. மு. ராமலிங்கம், எஸ். ரங்கசாமி, ரா. ரங்க நாதன், ந. ரங்கநாதன், வே. கிருஷ்ண மூர்த்தி, இ. ரா. ஸ்ரீனிவாசன், லெ. ராதா கிருஷ்ணன், கி. ப. சுதர்சனம், வி. கண்ணன், எஸ். சம்பத், லட்சுமி நாராயணன், ஒய். வி. கிருஷ்ணன், ஸி. அ. சுப்ரமண்யம், ப. ஸ்ரீனிவாசன், சாமா, ருக்மிணி அம்மாள்.

கரக்பூர் சகோதரிகளிடமிருந்து வருலான தொகை ரூ. 60-க்கு விவரம்.

ரூ. 2. நன்கொடை அளித்தவர்கள்:

ஸ்ரீமதிகள் ராஜம் சாரி, லக்ஷ்மி சேஷாத்ரி, சாவித்திரி ரங்காராவ், ருக்மணி கே. வி. கே. மூர்த்தி, வஸந்தா சாம்பமூர்த்தி, சரஸ்வதி நாராயணஸ்வாமி, லக்ஷ்மி ராதாகிருஷ்ணன் ரூ. 1—50.

ரூ. 1 நன்கொடை அளித்தவர்கள்:

ஸ்ரீமதிகள்: எஸ். சீதாலக்ஷ்மி, கமலம் ஆர். ஜி. அய்யர், மீனாட்சி விசுவநாதன், பார்வதி சங்கரய்யர், நீலாவதி அன்னாஜி ராவ், துங்காபாய் சீதாபதிராவ், பர்வதம் முத்துஸ்வாமி அய்யர், லக்ஷ்மி ராம மூர்த்தி, விசாலாக்ஷி எஸ். வி. சாஸ்திரி, ரமணம்மாள் பிரஸாதராவ், சாரதா மார்கமய்யர், யசோதா ஆறுமுகமுதலியார், கமலா சோமசுந்தரம், அன்னபூரணி சந்திர மௌளி, கமலா பரமேசுவரன், ஜயலக்ஷ்மி ஸ்ரீனிவாசன், சாரதா நடராஜன், பாலா ஹரிஹரன், புஷ்பா ராஜகோபால், லீலா மோஹன், ஜெயலக்ஷ்மி நாகராஜன், லீலா ஸ்ரீஹரி அய்யர், சரோஜா பார்த்தசாரதி, குஞ்சம்மாள் சந்தானராமன், சண்பகம் வெங்கடரமணராவ், தங்கம் பாலகிருஷ்ணன், ராஜம் பரமேசுவரன், வஸந்தா ஸ்ரீனிவாசன், ருக்மிணி ராமமூர்த்தி, சரளா ராஜகோபா லன், முத்துலக்ஷ்மி நடராஜய்யர், சுந்தரம் வாஹாலு, லக்ஷ்மி, காந்தி ராமநாதன்.


8 அணா நன்கொடை அளித்தவர்கள்:

ஸ்ரீமதிகள்: கமலா ராமாராவ், மீனாட்சி ராஜா ராமன், அம்புஜம் பத்மநாபன், லக்ஷ்மி மகாதேவன், மதுரம் கிருஷ்ண மூர்த்தி, அலமேலு நரசிம்மன், ஞானம் ஆர். எஸ். மணி, ரங்கநாயகி நரசிம்மன், லக்ஷ்மி உபேந்திரராவ், மதுரம் புண்ய கோடி, சரஸ்வதி ராஜகோபாலன், சாவித் திரி சுப்ரமண்யம், மங்களம் பாலசுப்ரமண யம், மஹாலக்ஷ்மிநாத், சுலோசனா சம்பத், லக்ஷ்மி விசுவநாதன், மங்களம் குப்புஸ்வாமி, சிவகாமி சிவராமன், ருக்மிணி சாமாராவ் அமிர்தம் கே. வி. அய்யர், கலாவதி ராமமூர்த்தி, விசாலம் சுப்ரமண்யம், ஜானகி ராமமூர்த்தி, சின்னம்மா. 4 அணா. கமலா சங்கர் லக்ஷ்மி வேங்கடராமன்.

முன் வரவு ரூ. 2024.26

ஆகமொத்தம் ரூ. 2259.18


கால்கேட்டின்
துப்புரவாக சுத்தம் செய்யும்
வன்மை உங்களது
பற்களேயும் ஈறுகளேயும்
பாதுகாக்கிறது !
சாஸ்திரீயமாக அமைக்கப்பட்ட கால்கேட் டூத் பிரஷ் உங்கள் பற்களின் இடுக்குகளில் சுலபமாக நுழைகிறது ... உட்புறத்தையும், வெளிப்புறத்தையும் துப்புரவாக சுத்தம் செய்கிறது ... பல் ஈறுகளை மிருதுவாகத்தடவி உறுதிப்படுத்துகிறது! உங்கள் பற்களேயும், ஈறுகளேயும் கால்கேட் டூத் பிரஷ்ஷால் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.
4 வகைகள் : ★ அடல்ட்ஸ் ★ ஜூனியர் ★ சைல்ட் ★ பேபி
★ ஹார்ட் ★ மீடியம் ★ ஸாப்ட்
சுகாதார பிளாஸ்டிக் குழாயிலோ அல்லது ரெகுலரிலோ டிலக்ஸ் கிடைக்கும் !
அழகான பிளாஸ்டிக் பிடிகளில் உறுதியாகப் பொருத்தப்பட்ட ஸ்டெரிலைஸ் செய்யப்பட்ட நைலான் பிரிஸல்களில்
COLGATE
Nylon TOOTH BRUSH
இந்தியாவில் சிறந்த டூத்பேஸ்ட் செய்பவர்களால் தயாரிக்கப்படுகிறது!


சுடர்
தீப்பெட்டிகள்
தயாரிப்பவர்கள் :
அரசினர் தீப்பெட்டி தொழிற்சாலை
பெரம்பூர், சென்னை
சென்னை சர்க்கார் தொழில் & வர்த்தக இலாகாவின் ஒரு பிரிவு
எல்லா ஜில்லாக்களிலும் தொழில் & வர்த்தக உதவி டைரக்டர் காரியாலயங்களில் கிடைக்கும்

பாவை விளக்கு

அத்தியாயம் 14

கண்ணுறங்கு, கண்மணியே!



அகிலன்

'பிருந்தாவனம்' ஸ்டூடியோவுக்குப் போய், பார்வையாளர்கள் தங்குமிடத்தில் உட்கார்ந்துகொண்டு, குமாரசாமிக்குத் தன்னுடைய வரவைச் சொல்லி அனுப்பினான் தணிகாசலம். 'பிருந்தாவனம்' திரைப்பட நிலையம் குமாரசாமிக்குச் சொந்தமானதல்ல. அங்கேதான் அவருடைய முதல் படம் பிடிக்கப்பட்டு வெற்றியுடன் ஓடிக்கொண்டிருந்தது. அந்த வெற்றி கொடுத்த நம்பிக்கையில் மறு படத்தையும் அவர் அங்கு எடுக்கத் தொடங்கினார். ஸ்டூடியோக்காரர்கள் அவரது படப் பிடிப்புக்கென்று தனியாக கட்டடத்தின் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டுக் கொடுத்திருந்தார்கள்.

சொல்லி அனுப்பிய வேலையாள் திரும்பி வருவதற்குள் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக் களைத்துவிட்டான் தணிகாசலம். நாற்காலியில் இருப்புக் கொள்ளவில்லை. முகத்தில் வேர்வைத் துளிகள் அரும்பி விட்டன.— எதற்காகக் குமாரசாமி என்னை அழைக்க வேண்டும்? என்னுடைய நினைவு அவருக்கு எப்படி வந்தது? குற்றாலத்தில் குடும்பத்துடன் பழகியது நினைவில் இருந்தால் என்னை வீட்டுக்கு அழைக்காமல் எதற்காக ஆபீசுக்கு அழைக்கிறார்? தனிமையில் என்னிடம் செங்கமலத்தைப் பற்றிக் கேட்கப் போகிறாரா? ஐயோ! அந்தக்கடிதம்... அந்தக் கடிதம்...

'தமிழ்ப் பெண் ஒருத்திக்குக் காதல் கடிதம் எழுதுவதைப் போல் முட்டாள்தனம் வேறில்லை' என்று எண்ணித் தவித்தான் அவன். பிறகு, 'அது காதல் கடிதம் கூட இல்லையே! அறியாப் பருவத்தின் இளமைத் துடிப்பில் 'கல்யாணம் செய்து கொள்கிறாயா?' என்று கேட்ட கேள்விதானே அது?' எனத் தன்னைத் தேற்றிக் கொள்ளப் பார்த்தான். 'கிளியே, மயிலே, குயிலே' என்று அதில் ஒன்றும் பிதற்றி எழுதவில்லை. கண்ணியத்துடன் விடுத்த வேண்டுகோள்.

அவன் தனக்காகப் பயப்படவில்லை. செங்கமலத்துக்காகப் பயப்பட்டான்.



அவளிடம் அவருக்கு இதனால் சந்தேகம் ஏற்பட்டிருக்குமோ? பெண்பிள்ளை மீது காரணமில்லாமல் கணவன் சந்தேகம் கொண்டால், பாவம், அவள் என்ன செய்வாள்? குழந்தை, வீடு-வாசல், சுக வாழ்வு, அந்தஸ்து, எதை அவள் இழந்தாலும் பொருட்படுத்த வேண்டியதில்லை. ஆனால் குமாரசாமியை அவள் இழக்கக் கூடாது. தன் கடிதம் அதற்குக் கருவியாக இருக்கக் கூடாது.



வேலையாள் திரும்பி வந்து தணிகாசலத்தைக் குமாரசாமியிடம் அழைத்துச் சென்றான். கலவரத்தை மறைத்துக் [illegible] கை கூப்பினான் [illegible] அவரும் வணக்கம் [illegible] வரவேற்றார். அவர் முகத்தில் எவ்விதக் கலக்கமும் தென்படவில்லை. தணிகாசலத்துக்கு அவர் முகத் தோற்றம் [illegible] பயத்தை விலக்கியது. அருகில் மற்றொரு மனிதர் உட்கார்ந்திருப்பதைக் கண்டவுடன் அவனுக்குத் தெம்பே வந்து விட்டது. மூன்றாவது மனிதரைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு யாரும் குடும்ப விவகாரம் பேச மாட்டார்களல்லவா?

"இவர் தாம் மோகனரங்கம்; திரைப்படத் தொழில் நிபுணர், டைரக்டர். பெயரைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்."

திறமையுள்ள நிபுணர் அவர் என்பதைத் தணிகாசலம் ஏற்கனவே தெரிந்து கொண்டிருந்தான். படங்கள் பார்ப்பது அவன் பொழுதுபோக்கு. குமாசாமியின் முதல் படத்தைத் திரையாக்கிப் பகபதிக்குப் பெயர் கொடுத்தவரும் அவரே. நேரில் பார்த்ததில் தன் மகிழ்ச்சியைத்

தெரிவித்துக் கொண்டு, "பசுபதி இருக்கிறாரா?" என்று கேட்டான் தணிகாசலம்.

அந்தக் கேள்வியை எடுத்தவுடன் நிபுணரின் முகம் சுருங்கியது; குமாரசாமியின் முகம் மலர்ந்தது. இரண்டையும் கவனித்தான் தணிகாசலம். பசுபதியின் செல்வாக்கு முதலாளியை மயக்கியிருக்கிறது; தொழில் நிபுணரை நசுக்கப் பார்க்கிறது. பசுபதியிடம் ஒன்றிப் பழகிய அநுபவம் அவனுக்கு உண்டு. மனிதர்கள் அவருக்கு ஏணிப் படிகள். படியேறி அவர் உச்சிக்குப் போய் விட்டால் யாரையுமே உதைத்துத் தள்ளத் தயங்க மாட்டார்.

ஐயாயிரத்துக்கு அவர் தமது பத்திரிகையை மற்றவர்கள் விலைக்குக் கேட்டதாக அவனிடம் கூறினாரல்லவா? அது வெறும் கதை! 'தமிழரசி' தூங்கிப் போய் விட்டாள். 'தமிழரசி'யும் அவருக்கு ஒரு ஏணி.

குமாரசாமி கூறினார்: "பசுபதி பம்பாய்க்குப் போயிருக்கிறார். வருவதற்குப் பத்து பன்னிரண்டு நாட்களாகும். படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கிறது; மோகனரங்கம் கவனித்து வருகிறார்."

காப்பி வரவழைத்துக் கொடுத்தார் குமாரசாமி. சிகரெட்டுப் பெட்டியை நீட்டினார். "மன்னிக்க வேண்டும்" என்று தணிகாசலம் சிரித்தான். மற்ற இருவரும் புகை பிடிப்பதற்குத் தொடங்கினார்கள்.

சிகரெட்டுச் சாம்பலைக் கிண்ணத்தில் தட்டிக்கொண்டே, அவனை அங்கு வரவழைத்த காரணத்தைக் கூறினார் குமாரசாமி:

"இரண்டாவது படம் முடிந்தவுடன் அடுத்த படப்பிடிப்பு ஆரம்பமாகும். அதற்குத் திரைக்கதை தயாரிக்க விரும்புகிறோம். மோகனரங்கம் தாமாகவே ஒரு குறிப்பு எழுதி வைத்திருக்கிறார். அதை விரிவுபடுத்தி 'ட்ரீட்மெண்ட்' எழுத வேண்டும். பிறகு கலந்து பேசிக் கொண்டு வசனம் எழுத வேண்டும். கதை மோகனரங்கத்தினுடையது; வசனம் உங்களுடையது. — உங்கள் கதைகள் சிலவற்றை நான் படித்துப் பார்த்தேன். எனக்கு உங்கள் நினைவு வந்தது. மோகனரங்கமும் உங்களையே விரும்புகிறார்."

தணிகாசலத்துக்கு அவன் குடித்த கசப்புக் காப்பி அப்போதுதான் இனித்தது. சிகரெட்டுப் புகையைக்கூட ஊதுவத்தியின் நறுமணமாக அவன் பாவித்துக் கொண்டான்.

'அப்பாடா! செங்கமலம் தப்பினாள். பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காய் முடியவில்லை; குரங்கு பிடிக்கப் போய்ப் பிள்ளையார் உருவானார்! வாழ்க, இந்தப் பணப் பிள்ளையார்!'

"என்னால் முடிந்ததைச் செய்கிறேன்; திருப்தி ஏற்படும் வரையில் உழைக்கிறேன்" என்றான் தணிகாசலம்.

குமாரசாமியிடம் இயல்பாகவே அவனுக்குப் பற்றுதல் ஏற்பட்டிருந்தது. காரணம் தெரியவில்லை. மனிதரிடம் மனிதர் முகம் கொடுத்துப் பேசும் போதோ சிலரிடம் விருப்பம் தோன்றுகிறது. இன்னும் சிலரிடமும் சந்தேகமும் அவநம்பிக்கையும் தோன்றுகின்றன. 'காரணம் எதற்கு? முகம் சொல்லி விடுகிறதே!—ஒரு வேளை, தேவகிக்குக் கௌரியிடம் ஏற்பட்டுள்ளது போன்ற அதே மனத் தொடர்பு, இவர் செங்கமலத்தின் கணவர் என்பதால் ஏற்பட்டிருக்குமோ? எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டும்.'

"நீங்களும் மோகனரங்கமும் கதையை விவாதித்து ஒரு வகை செய்யுங்கள்" என்று கூறிவிட்டு, குமாரசாமி தம்முடைய இதர அலுவல்களில் மூழ்கி விட்டார். இருவரும் எழுந்து அவ்விடத்தை விட்டு வெளியில் வந்தார்கள்.

மோகனரங்கத்துக்கு 'செட்' தயாராகி, 'ஷூட்டிங்' காத்துக் கொண்டிருந்தது. "ஒரு மணி நேரம் என்னோடு வந்து படப் பிடிப்பைப் பாருங்கள்; பிறகு அமைதியாய்ப் பேசுவோம்" என்று அவனை 'செட்'டுக்கு அழைத்துச் சென்று ஒரு நாற்காலியில் உட்காரச் செய்தார் மோகனரங்கம்.

நூறடிச் சதுரத்துக்குள் பிரும்மாண்டமான மலைகளும், காடுகளும், குகைகளும் நிறைந்திருந்தன. சிற்றருவியின் சலசலப்பைக் குழாய்த் தண்ணீர் கொண்டு வியக்கத் தக்கவகையில் ஏற்பாடு செய்திருந்தார்கள். நிற்கும் விளக்குகள், தொங்கும் விளக்குகள், நீளும் விளக்குகள், சுழலும் விளக்குகள் — ஒரே ஒளி மயம். தரை யெங்கும்



மின்சாரக் கம்பிகள் இழைந்து கொண்டிருந்தன. 'செட்'டுக்கு மேலே வலது இடது புறங்களில், மரங்களின் உச்சியில் தாவும் நம்முடைய பழம் பெரும் மூதாதையர் போல், உழைப்பாளர்கள் ஒளி அமைப்பைத் தகுந்தபடி இயக்குவதற்குக் காத்திருந்தார்கள். நகர்ந்து செல்லும் 'காமிரா' முன்னும் பின்னும் போய் வந்து கொண்டிருந்தது. ஒலிக் கருவி நீண்ட இரும்புக் கம்பியிலிருந்து கீழே தலை உயரத்துக்கு மேல் தொங்கியது. 'ஷூட்டிங்' நேரம் நெருங்கியதால் நடிக நடிகையரும், இதரக் கலைஞர்களும் பேச்சு மூச்சின்றி மோகனரங்கத்தின் வாய் அசைவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.



"சத்தம் போடாதீர்கள்!" என்று சத்தம் போட்டு விட்டு, "ஷூட்!" என்று மற்றொரு சத்தம் போட்டார் மோகனரங்கம். 'கிர்'ரென்று புகைப் படக் கருவியின் உருளைகள் சுழன்றன. நடிக நடிகையர்கள் உரையாடினார்கள்; பாடினார்கள்; நடித்தார்கள்.

'தமிழ் மக்களுக்குப் பிடித்தமானது' என்று திருவாளர் பசுபதி முடிவு கட்டிய ராஜா ராணி கதை அது. 'போக்லோர்' (Folklore) என்று சொல்லப்படுகிற நவீன ராஜசரித்திரம்.

கதையில் வரும் 'வில்லி' ராஜகுமாரனைக் குதிரைக் கொம்பு கொண்டுவரச் சொல்கிறாள், காளை மாட்டுப் பால் கறந்து வரச் சொல்கிறாள், சுறா மீனின் சுண்டு விரலை ஒடித்துவரச் சொல்கிறாள்! ராஜகுமாரனோ இல்லாத ஊருக்கு, போகாத வழி தேடி, கிடைக்காத பொருளுக்காக அலைந்து திரிகிறான். வழியில் அவனுக்குத்தான் எத்தனை எத்தனை துன்பங்கள்! சிறுத்தைப் புலிகள், மலைப் பாம்புகள், விஷப் பெருச்சாளிகள்—

'தனி மனிதனின் நேர்மைத் துணிவுக்கு எதிரே படையெடுக்கும் மனித விலங்குகளை இப்படிப் படம் எடுத்துக் காட்டலாம்' என்று தோன்றியது தணிகாசலத்துக்கு. அயோக்கியர்களை விட வன விலங்குகள் பொல்லாதவைகளல்லவே!

பணக்கார சித்தாந்த ரகசியத்தின் சாரம் அவனுக்கு அப்போது நினைவில் வந்தது: 'கலை-கொலைக்காக, உற்சாகம்-உறக்கத்துக்காக, பொழுது-பாழாக்குவதற்காக, பணம்-ஐம்பது மடங்காய்க் குட்டி போடுவதற்காக, திரைப்படம்-வாழ்க்கையின் துன்பங்களை மறைப்பதற்காக!' (மறக்க அடிப்பதற்கல்ல; மறைத்து மனிதனை மயக்குவதற்காக, ஐயா!)—'ஏழைகளின் எதிரில் அவர்களுடைய அவல வாழ்க்கையை எடுத்துக் காட்டாதே! அவர்கள் விழித்துக் கொண்டால், பிறகு அவர்கள் தொடையில் உன்னால் கயிறு திரிக்க முடியாது!'

தணிகாசலத்துக்கு ராஜகுமாரன் பாடிய பாட்டு கணீரென்று காதில் விழுந்தது. அதே சமயத்தில் அவனும் தனக்குள் ஒரு பாடலை முணுமுணுத்துக்கொண்டிருந்தான்.

மனத்துக்குள்ளே பக்க வாத்தியங்கள் முழங்கின. பாட்டை உள்ளத்தின் ஒலிப்பதிவுக் கருவி பதிவு செய்யத் தொடங்கியது:—

"கன்னித் தமிழகமே!
கண்ணுறங்கு, கண்மணியே!
மின்னல் திரையுலக
மினுக்கில் மனமயங்கி—
கன்னித் தமிழகமே!
கண்வளரு பெண்மயிலே!
கச்சா பிலிம்களும்,
காருக்குப் பெட்ரோலும்,
லட்சமோ லட்சமடி
லஞ்சம் கணக்கிலையடி!
வஞ்சக் கதைத்திருட்டு
பஞ்சமடி நற்கதைக்கு!"

ராஜகுமாரன் பாட்டு முடிந்தவுடன், "கட்!" என்று கத்தினார் மோகனரங்கம். அங்கே படத்துக்கும் 'கட்' இங்கே பாடலுக்கும் 'கட்'!

"ஷூட்!" திரும்பவும் குரல் எழுப்பினார் டைரக்டர் மோகனரங்கம்.

ராஜகுமாரனும் குரல் எழுப்பி வசனச் சொல்மாரி பொழிந்தான்.

தணிகாசலமும் தன் மனத்திற்குள் உரையாடினான்.

— காட்சித் திருப்பம் —

தணிகாசலம்: ''என்னருமைத் தமிழ்க் கன்னி! ஆடையில்லா ஆரணங்கே! சோறில்லாச் சித்திரமே! கூரையில்லாக் குஞ்சிதமே! உறங்கம்மா, நீ உறங்கு! தாலாட்டுக் கேட்கிலையே, தட்டி எழுப்பேனடி!''

[குரல் மாறுகிறது: கனல் தெறிக்கும் வசனம்.]

'' இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான கலைஞர்கள் இரவு பகல் பாராது உழைக்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய்களை விஞ்ஞான சாதனங்களுக்காக மேல் நாடுகளுக்குக் கப்பலேற்றி அனுப்புகிறீர்கள். சுதேச மன்னர்கள் வாழ்ந்த வாழ்க்கையை விடப் பலர் இந்தத் துறையில் குபேர வாழ்க்கை வாழ்கிறீர்கள். — இவ்வளவும் குதிரைக் கொம்புக்கு, காளை மாட்டுப் பாலுக்கு, சுறுமீனின் கண்டு விரலுக்கு! பத்து படங்களில் நான்கு படங்கள் பலனுள்ளவையாக அமையக் கூடாதா? 'ஜன நாயகம்' என்ற போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டு, பணநாயக வெறியாட்டந்தானே ஆடுகிறீர்கள்?''

மீண்டும் ''கட்!'' என்று கத்தினார் மோகனரங்கம். ''கட்! கட்! வெட்டுங்கள்'' என்றார்.

'வெட்டுங்கள்' என்று சொல்லிக் கொண்டே தணிகாசலத்தின் கழுத்தில் கையை வைத்தார் மோகனரங்கம். தணிகாசலம் பதறிக் கொண்டு துள்ளி எழுந்தான். 'என்னுடைய வசனத்தைப் பசுபதி கேட்டிருந்தால் இப்படிக் கூடச் செய்து விடுவார்' என்று தன் கழுத்து பத்திரமாக இருக்கிறதா என்று தடவிப் பார்த்துக் கொண்டான்.

இருவரும் டைரக்டரின் அறைக்கு வந்து உட்கார்ந்தார்கள். விசிறியைச் சுழல விட்டு சிகரெட்டைப் பற்ற வைத்தார் மோகனரங்கம். அவர் களைப்பாறுவதற்குள் அவர் தோற்றத்தை அவன் கண்களால் அளந்தான்: வாட்ட சாட்டமான உடல் அமைப்பு: கட்டுக் குலையாத தேகம்; கண்களில் தெரிந்த உணர்ச்சியை மட்டும் அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. அது உறுதியா? அல்லது மருட்சியா? இரண்டும் மாறி மாறித் தோன்றுகின்றனவா? மனிதர் எப்படிப் பட்டவர் என்று உடனே கண்டு கொள்ள முடியவுமில்லை.

''இப்போது எடுக்கும் படக்கதை உங்களுக்குத் தெரியும். அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டார் டைரக்டர் மோகனரங்கம்.

திரைப்படத் தோரணையில் அவன் பதிலளித்தான். ''தங்கத்தினால் செய்த சந்தனக் கிண்ணம்; வைரம் இழைத்த சித்திர வேலைப்பாடு; கண்ணைப் பறிக்கிற தோற்றம்; ஆனால்—''

''ஆனால்?''

தமிழனின் சிந்தனையைத் தூண்டி விடும் சந்தனம் மணக்கவில்லை. உணர்ச்சிகளைக் கிளறி விட்டுத் திசைமாற்றுச் சாராயம் ஊற்றித் தருகிறீர்கள்.''

''பசுபதியின் முதல் படம் உங்களுக்கும் பிடித்ததாய்ச் சொன்னீர்களே!''

''அதில் ஓரளவாவது உபயோகமுள்ள உல்லாசம் இருந்தது; இதில் ஊதாரித்



தனமான உல்லாசம் தெரிகிறது. மேல் நாடுகளில்கூடப் பல கோமாளித்தனமான படங்கள் வெளிவருகின்றன. படம் பார்ப்பவனின் வாழ்க்கைத் தரம் அங்கு இவ்வளவு மோசமாக இல்லை. வயிற்றுச் சோற்றுக்கு வஞ்சனை செய்து விட்டுத் தரை டிக்கட்டுக்குக் காசு சேர்க்கும் தமிழர்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா?—நல்ல படங்கள் பத்துக்கு ஒன்று வருகின்றன; அவற்றை நான் பாராட்டுகிறேன்.''

மோகனரங்கம் யோசனை செய்து பார்த்து விட்டு, ''எனக்கும் இதே எண்ணந்தான்'' என்று ஒப்புக் கொண்டார். ''ஆனால் நாம் நினைப்பதுபோல்

பணம் போடுபவர்கள் நினைப்பதில்லை. பசுபதியைப் போன்றவர்களும் அவர்களை நினைக்க விடுவதில்லை.''—மோகனரங்கம் தொடர்ந்து பேசிய பேச்சால் அவரும் ஒரு லட்சிய உள்ளங் கொண்ட கலைஞர் என்பது தெரிந்தது. ஆனால் பணநாயகம் அவரைப் பதுங்க வைத்துக் கொண்டிருந்தது.

அவர் எழுதி வைத்திருந்த குறிப்பை எடுத்து நீட்டினார். படித்துப் பார்த்த தணிகாசலம் பிரமிப் படைந்தான். தமிழரின் வாழ்வைப் பிரதிபலிக்கும் கட்டுக்கோப்புள்ள கதைச் சுருக்கம் அது. ''குறைந்த செலவில் உயர்தரமான படம் பிடிக்கலாம்; பலனும் சுவையும் கலந்த கதை அமைப்பு'' என்று கூறினான் தணிகாசலம்.

''வடக்கில் சாந்தாராம், அகமது அப்பாஸ்போன்றவர்கள் எடுக்கும் படங்களைப் பார்க்கும்போதெல்லாம் எனக்குத் தமிழ் நாட்டின் நிலை நினைவுக்கு வரும். அதனால்தான் இப்படி ஒரு முயற்சி செய்திருக்கிறேன். குமாரசாமியும் ஒப்புக் கொண்டார். நீங்கள் என்னுடன் ஒத்துழைக்க வேண்டும்.''

தணிகாசலத்துக்கு உச்சி குளிர்ந்தது. இருவரும் ஒரு திட்டம் வகுத்துக் கொண்டு கதையை ஆராய்ச்சி செய்தார்கள். கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்கள். ''ஒரு வாரத்தில் காட்சிப் பிரிவுகள் வகுத்துக் கொண்டு வருகிறேன்; பிறகு வசனத்தைக் கவனிப்போம்'' என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டான் தணிகாசலம்.

அத்தியாயம் 15

பணநாயகப் பண்பாடு

மனிதனை மனிதன் ஏமாற்றி வாழ்வது எளிது; மனிதனை மனிதன் ஏற்றி வாழ்வது கடினம். தன்னுடைய பாதை கடினமான பாதை என்று தெரிந்தும் கூடத் தணிகாசலம் மனிதர்களை ஏற்றி வாழவே விரும்பினான். மற்றவர்களை வாழ வைத்துத் தானும் வாழ விரும்பிய முயற்சியில் அவன் தனக்குக் கிடைத்த சாதனங்களையெல்லாம் பயன்படுத்திக் கொள்ளத் தயங்கவில்லை. இயல், இசை, நாடகம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் இவ்வளவும் கலந்த இயந்திரக் கலை திரைப்படக் கலை. எல்லாக் கலைகளும் உயர்ந்த கலைகளே; அதை ஆள்பவர்களின் மனத்துக்குத் தக்கபடி கலைகளால் நாட்டுக்குப் பணி புரியவும் முடியும்; நாட்டைப் பாழாக்கவும் முடியும்.

தணிகாசலம் தனக்குக் குமாரசாமியும் மோகனரங்கமும் அளித்த வாய்ப்பை வைத்துக் கொண்டு, நாட்டுக்கு உபயோகமுள்ள உல்லாசத்தை அளிக்க விரும்பினான். கல்லூரிகளை விட வலிமையுள்ள சாதனம் திரைக்கலை. படிக்காத கோடிக்கணக்கான மக்களை அதனால் விழிப்படையச் செய்யலாம். விஞ்ஞானம் தந்த அந்த அருஞ் செல்வத்தைத் தகாத முறையில் பயன்படுத்தினால் கல்லூரிகளைக் கூட அது குட்டிச் சுவர்களாக மாற்றி விடும். விண்ணில் பறப்பதும் விஞ்ஞானம்; மண்ணை அழிப்பதும் விஞ்ஞானம். எல்லாம் மனிதன் கையில்தான் இருக்கிறது. அந்த விஞ்ஞானத்தை இயக்கும் விசை!

திரைக்குக் கதை எழுதும் வேலையைத் தொடங்கியவுடன் உமா அவனைக் கரித்துக் கொட்டினாள். ''இலக்கியத்தை மறந்து விடப் போகிறீர்கள்'' என்று இடித்துக் காட்டினாள். தணிகாசலம் அவளுக்குத் தர்க்க ரீதியாக எடுத்து விளக்கிப் பார்த்தான். ''இலக்கியத்தை நான் மறந்தாலும் அது என்னை மறக்காது. என்னுடைய இருதயம் இலக்கியத்துக்கு; என்னுடைய மூளை என்னைப் பெற்றெடுத்த நாட்டுக்கு.''

''மூளை வேறு இருக்கிறதா!'' என்று பரிகசித்தாள் உமா.

''சொல்லடி, சிவசக்தி!-எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்,
வல்லமை தாராயோ - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?''

பாரதியின் பாட்டைப் பாடிக் காண்பித்து விட்டு, ''இந்தப் பாட்டைப் புரிந்து கொண்டு உன் வாயை மூடிக் கொள்'' என்றான் தணிகாசலம்.

வாயை மூடவில்லை அவள். ''செங்கமலத்துக்கு நீங்கள் எழுதப் போவது தெரியுமா?'' என்று கேட்டாள்.

இப்போது அவனுக்கு உண்மையான காரணம் விளங்கி விட்டது. அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது போல், செங்கமலத்தினிடம் அவளுக்கிருந்த வெறுப்பு இப்படி அவனிடம் குறை கண்டுபிடிக்கச் சொல்கிறது!

'வழிக்கு வந்து விட்டாய்' என்று நகைத்துக் கொண்டு, ''அவளுக்குத் தெரியாது; தொழிலுக்கும் அவளுக்கும் தொடர்பில்லை'' என்றான் தணிகாசலம். ''பின்னால் படம் எடுக்கும் போது ஒருவேளை தெரிந்து கொள்வாள்.''


இப்பொழுது
நடைபெறுகிறது
...சென்னை...
காமதேனு • பாரத்
மஹாலக்ஷ்மி
மற்றும் தென்னாடெங்கும்
பத்மினி பிக்சர்ஸ்
எங்கள் குடும்பம் பெரிசு
தயாரிப்பு • டைரக்ஷன்:
பி. ஆர். பந்துலு
ஸ்டுடியோ : பரணி
ஏ எல் எஸ்
வெளியீடு

உமாவுக்கு அமைதி ஏற்பட்டது. வழக்கம்போல் தானும் அந்த வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்ய முற்பட்டாள்.

'பிருந்தாவனம்' ஸ்டூடியோவுக்கு அவன் இரண்டு மூன்று முறை சென்று வந்தான். சென்றபோதெல்லாம் இன் முகத்துடன் அவனை வரவேற்றுப் பேசினார்கள். யோசனை கூறினார்கள். எந்த எந்த நடிகர் நடிகைகளைப் போடலாம் என்று விவாதித்தார்கள். மோகனரங்கமும் தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்து, அவன் எழுதிய பகுதி வரையில் படித்துப் பார்த்து மகிழ்ந்தார். ''விரைவில் முடித்துக் கொண்டு வாருங்கள்'' என்று அவசரப்படுத்திச் சென்றார்.

பசுபதியை மட்டிலும் தணிகாசலத்தால் சந்திக்க முடியவில்லை.

நூறு நாட்களுக்கு மேல் உழைத்துக் கதை வசனத்தை முடித்தான் தணிகாசலம். வெற்றி வீரனுடைய மனப்பான்மை அவனுக்கு அன்றைக்கு ஏற்பட்டது. மறுநாள் முற்பகல் பத்து மணிக்கெல்லாம் பிருந்தாவனத்துக்குள் நுழைந்தான்.

வழக்கம்போல் அன்றைக்கு அவனை யாரும் உடனே கூப்பிட்டு அனுப்பவில்லை. காத்திருப்போர் பலருக்கு மத்தியில் அவனும் மணிக்கணக்காகக் காத்திருந்தான். மோகனரங்கத்துக்குச் சீட்டு அனுப்பி ஒரு மணி நேரம் ஆயிற்று. போன ஆள் திரும்பவில்லை. மற்றொரு ஆளிடம் அவர் இருக்கிறாரா என்று கேட்டான். ''தெரியாது'' என்று பதில் வந்தது. இப்படியே அந்த ஆள் யார் எதைக் கேட்டாலும், ''தெரியாது'' என்று சொல்வதற்குக் கற்று வைத்திருந்தான். அவனுடைய சம்பளம் அதற்குத்தான் போலும்!

இரண்டு மணி நேரமும் ஆயிற்று. பிருந்தாவனம் ஏன் பாலைவனமாக மாறி விட்டது? பிருந்தாவனத்தில் உலவிய அவனுடைய கண்ணன் மோகனரங்கம் எங்கே போய் விட்டார்? மாயமாய் மறைந்து விட்டாரா? கோபிகளின் நர்த்தனத்தில் தம்மை மறந்து லயித்து விட்டாரா?

மற்றொரு சீட்டு எழுதிக் குமாரசாமிக்கு அனுப்பினான் தணிகாசலம். மேலும் அரைமணிப் பொழுது சென்றது. வயிறு கிள்ளியது. மடியில் வைத்திருந்த காகிதக் கட்டு இரும்பாய்க் கனத்தது. கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்து அறுபது கணங்கள் ஒரு நிமிஷமாக மாறுவதையும், ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமாக மாறுவதையும், 'மனிதனுடைய வாழ்நாள் குறுகியது' என்பதை அந்தக் கடிகாரம் எடுத்துச் சொல்வதையும் அவன் கண்டான்.

'நேரத்தின் அருமை குமாரசாமிக்கும் ஒன்றுதான்; எனக்கும் ஒன்றுதான்' நினைத்துக் கொண்டு, காகிதக்கட்டைக் கையில் தூக்கியபடி, குமாரசாமியின் அறைக் கதவைத் தட்டி உள்ளே நுழைந்தான். குமாரசாமியிடம் ரகசியம் பேசிக் கொண்டிருந்த பசுபதி அவன் வரவைக் கண்டு பதறிப் போனார். குமாரசாமிக்கு வலது கைப் பக்கத்தில் தணிகாசலம் அனுப்பிய பையன் நின்று கொண்டிருந்தான். சீட்டு மேஜைமேல் கிடந்தது.

''உங்களை இன்னும் நாங்கள் வரச் சொல்ல வில்லையே?'' என்று கூறினார் பசுபதி. 'ஏன் வந்தாய்? வெளியே போ!' என்று சொல்லாமல் சொன்னார்.



''நீங்கள் என்னைப் போகச் சொல்லவும் இல்லை; அதனால் வந்தேன்.''

''உட்காருங்கள்'' என்று கூறிய குமாரசாமி பையனிடம் சொல்லிக் காப்பி வரவழைத்தார்.

தணிகாசலம் அதை வாங்கிக் குடித்து வைத்தான். பசியை அது மேலும் கிளறி விட்டது.

பசுபதி காகிதக் கட்டைப் பிரித்துக் கொண்டே குமாரசாமியை அர்த்தத்துடன் பார்த்தார். படித்துப் பார்ப்பது போல் பாவனை செய்து முகத்தைச் சுளித்தார்; உதட்டைப் பிதுக்கினார்; தலையை ஆட்டிக் கொண்டார். குமாரசாமி குனிந்த தலை நிமிரவில்லை. தன்னைப் பற்றியே அவர்கள் அதுவரை பேசிக்

கொண்டிருந்தார்கள் என்பது அவனுக்கு விளங்கி விட்டது.

பசுபதி அவனிடம் மேடைப் பிரசங்கம் செய்யத் தொடங்கினர். உலகத்தில் உள்ள எல்லா ஸ்டுடியோக்களின் நிலைமைகளையும் விவரித்தார். தங்களைத் தவிர மற்றப் படப்பிடிப்பாளர்களை யெல்லாம் திட்டினர். அவனுக்கு வேண்டிய விவரங்களை அவரிடமிருந்து சேகரித்துக் கொள்வது, குதிரைக் கொம்பைத் தேடுவதை விடக் கடினமாகி விட்டது.

உமியில் நெல் பொறுக்கினன் தணிகாசலம். பேச்சுக் குப்பையிலிருந்து தனக்கு வேண்டிய பகுதிகளை யெல்லாம் பிரிக்க முயன்றன்.

''மோகனரங்கத்துக்கு என்ன தெரியும்?...நான் இல்லாமல் எப்படி நீங்கள் ஒப்புக் கொண்டீர்கள்?...முதலாளிக்கு என்ன தெரியும்? (அவரையும் வைத்துக் கொண்டுதான்!)....ரசிகர்களின் ருசி நாளுக்கு நாள் மாறி வருகிறது...மூன்ருவது படம் மாயாஜால மந்திர வித்தைகள் நிறைந்த தந்திரக் கதை... நீங்கள் வேண்டுமானல் என்னுடன் இருந்து மாயா ஜாலத்தைக் கவனியுங்கள்...இரு நூறு மூந்நூறு தரச் சொல்கிறேன்...இந்தக் கதையை எதற்கும் கொடுத்து விட்டுப் போங்கள்... தமிழ் நாட்டுக்கு இப்போது மாய மந்திரந்தான் தேவை...''

''மோகனரங்கம் எங்கே?'' என்று கேட்டான் தணிகாசலம்.

''அவரை எதற்குக் கேட்கிறீர்கள்? அவர் ஊரில் இல்லை.''

தணிகாசலம் குமாரசாமியைப் பார்த்தான். குமாரசாமி கோயில் சாமியாக —சிலைபோல்— உட்கார்ந்து கொண்டிருந்தார்.

''ருசி மாறிப் போன விவரத்தை எனக்கு எழுதினல் நான் அத்துடன் நிறுத்திக் கொண்டிருப்பேன். போன மாதம் கூட மோகனரங்கம் என்னிடம் வந்தார்களே!''

''மோகனரங்கத்தைப் பற்றிப் பேசாதீர்கள்!'' என்ருர் பசுபதி மிகவும் கண்டிப்பான குரலில்.

கடிதம் எழுதி அவனை வரச்சொன்ன குமாரசாமி அவன் எதிரில்தான் இருந்தார். அவரிடம் எதையும் கேட்க அவனுக்கு விருப்பமில்லை. அவர் செங்கமலத்தின் கணவர்! பசுபதிதாம் தம்மை மறந்து பேசினர் என்ருலும், பசுபதியின் முன்னிலையில் குமாரசாமிக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்.

காகிதக் கட்டைப் பசுபதியிடம் நீட்டி விட்டு, வெறுங்கையை உதறிக் கொண்டு எழுந்தான் தணிகாசலம்.

''சரி, புறப்படுகிறீர்களா? போய் வாருங்கள். விருப்பமிருந்தால் மாயா ஜாலத்தை....''

''எனக்கு மாயா ஜால வித்தையைப் பற்றி ஒன்றும் தெரியாது; நான் மனித ஜால வித்தைக்காரன்.''

தணிகாசலம் எழுந்தவுடன், குமாரசாமி அவனிடம் எதையோ கொடுப்பதற்காகச் சட்டைப் பைக்குள் கையை விட்டார். அவர் எதைக் கொடுத்தாலும் அவனுக்கு வாங்கிக் கொள்ளப் பிடிக்கவில்லை. அதற்குள் பசுபதியே குமாரசாமியை முறைத்துப் பார்த்து அதைத் தடுத்து விட்டார். அடங்காப் பிடாரியான மனைவி தன் அப்பாவிக் கணவனை அடக்குகிற பார்வை அது.

'சுக்கிராச்சாரி தானம் கொடுக்கும் போது தடுத்தார்; இந்த வக்கிராச்சாரி கூலி கொடுக்கும்போது தடுக்கிருர்' என்று சிரித்துக் கொண்டே வெளியில் வந்தான் தணிகாசலம். 'மதி இழந்த மன்னருக்கு ஒரு சதிபூக மந்திரி!'

பிருந்தாவனத்து நடைபாதையின் இரு புறங்களிலும் பட்டு ரோஜாக்கள் சிரித்தன. தங்க நிறச் செவ்வந்திப் பூக்கள் சிரித்தன. குரோட்டன்ஸ் இலைகள் சிரித்தன. கல்வாழைப் பூக்கள் சிரித்தன. தணிகாசலமும் அவைகளுடன் சேர்ந்து சிரித்தான். 'மலர்களே! செடிகளே! என்னைப் பார்த்துச் சிரிப்பு வருகிறதா உங்களுக்கு? மகாராசாக்களின் ருசி மாறிப் போனல் உங்களையும் அழித்து நகக்காமல் விடமாட்டார்கள். ஜாக்கிரதை!'

இரண்டு மணி. சுள்ளென்று உச்சித் தலையில் நெருப்புக் கொட்டியதுபோல் வெய்யில் அடித்தது. வழக்கமாக அவன் அங்கு வந்த போதெல்லாம் அவனை மாம்பலத்துக்குத் திருப்பி அனுப்பிய கார்கள் அங்கு நின்று கொண்டுதான் இருந்தன. ஒரு முறைகூட அவன் நடந்து திரும்பியதில்லை. பசுபதி இப்போது குமாரசாமிக்கு இந்த அறிவுரை வழங்கியிருப்பார். 'வேண்டியபோது காரைக் கொடு; வேண்டா விட்டால் தெருவைக் காட்டு!'

தெருவில் நடந்து வந்த தணிகாசலம் புளியமரத்தடி நிழலில் சற்றுக் களைப்புத் தீர உட்கார்ந்தான். இரண்டு பர்லாங் தூரம் நடந்து போனல் 'டவுன் பஸ்' கிடைக்கும். இருபது நிமிஷம் ஓய்வெடுத்த பிறகே இரண்டு பர்லாங் நடக்க முடியும். களைப்பு மனத்துக்குள் உட்கார்ந்து விட்டதல்லவா?

'மலர்க் கொத்'தில் அப்போது தொடர்கதை வந்து கொண்டிருந்தது. ஆசிரியர் அடுத்த கதை கேட்டிருந்தார்.

அதற்குச் செவி சாய்த்திருந்தால் மற்றொரு நூல் எழுதி முடித்திருக்கலாம். நூறு நாள் உழைப்பு வீணாகி விட்டதே! யார் கையில் கிடைக்கக் கூடாதோ அவரிடம் கிடைத்து விட்டதே! — பரவாயில்லை, விட்டுத் தள்ளு!

குறிப்பு நோட்டைச் சட்டைப் பையிலிருந்து எடுத்தான். முழங்காலில் வைத்துக்கொண்டு, 'வாழ்க்கையில் நான் தோல்வியை ஒப்புக்கொள்ள மாட்டேன்; மூன்று மனிதர்களை இதன் மூலம் நான் தெரிந்து கொண்டேன்' என்று எழுதி மடித்து வைத்தான். பசுபதியை ஏற்கனவே தெரியும். குமாரசாமி பசுபதிக்குள் அடக்கம். மோகனரங்கத்திடம் தொழில் இருந்தது. அநுபவத் திறமை இருந்தது. நல்லமனம் இருந்தது. முதுகெலும்பு மட்டுமில்லை. 'நல்லதை நினைப்பவர்கள் பலர்; செயலாற்றுவோர் சிலரே.'

புளியமரத்தை அண்ணாந்து பார்த்து விட்டு, ஐம்பது மைல் வேகத்தில் குறுக்கும் நெடுக்கும் பறக்கும் கார்களை நோக்கினான் தணிகாசலம். பிருந்தாவனத்திலிருந்து வெளிவந்த கார் ஒன்றில் பசுபதியும் மோகனரங்கமும் ஒன்றாக உட்கார்ந்து கொண்டு சென்றார்கள். தணிகாசலம் நன்றாக நோக்கினான். சந்தேகத்துக்கு இடமின்றி அதில் மோகனரங்கமும் இருந்தார். 'அவர் ஊருக்குப் போய் விட்டதாய்ப் பசுபதி கூறினாரே! கூறினால் என்ன? அரிச்சந்திர மன்னரின் பேரப்பிள்ளையா என்ன, பசுபதி?'

எதிர்ப் பக்கத்திலிருந்து பிருந்தாவனத்தை நோக்கி மற்றொரு கார் மெதுவாக வந்தது. அதைப் பெண் பிள்ளை தனியாக ஓட்டி வந்தாள். காருக்குள் அவளைத் தவிர வேறு யாருமில்லை. காரை ஓட்டிக்கொண்டு வந்தது செங்கமலம்தான். புளியமரத்தடி நிழலில் தணிகாசலத்தைக் கண்டு விட்டுக் காரை நிறுத்தினாள்.

குழந்தைகளை வேறு யாராவது அடித்து விட்டால், அந்த அடியின் வலி தாயாரைக் கண்டவுடன் பத்து மடங்கு வேதனையைத் தரும். 'கோ' வென்று வாயை விட்டுக் கதறிக் கொண்டு தாயின் கால்களைக் கட்டிக் கொள்வார்கள். செங்கமலத்தைக் கண்ட தணிகாசலம் தாயைக் கண்ட குழந்தையானான். அடக்கி வைத்துக் கொண்டிருந்த துன்பம் பீறிட்டுக் கொண்டு வெளியில் வரப் பார்த்தது. பல்லைக் கடித்துக் கொண்டான்.

நெற்றியில் விழுந்த தலைமயிர் காற்றில் நடுங்கியது.

"ஆபீஸ் பையனிடம் சொல்லி வைத்திருந்தேன்; இப்போதுதான் 'போன்' செய்தான்; அவசரமாய்ப் புறப்பட்டு வந்தேன்" என்று கூறினாள் செங்கமலம். எல்லா விஷயங்களுமே அவளுக்குத் தெரிந்திருந்தன.




"முன்பொரு நாள் உங்களைக் கடற்கரையில் கண்ட பிறகு, அவரிடம் உங்களைப் பற்றிச் சொல்லி வைத்திருந்தேன். கூப்பிட்டு எழுதச் சொன்னதும் நான்தான்."

தணிகாசலத்தின் உள்ளம் நன்றிப் பெருக்கால் விம்மியது. "எனக்காக நீ எடுத்துக் கொண்ட சிரமத்தை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன். இந்த விஷயம் எனக்குத் தெரியாது. நீ உதவி செய்ய முயற்சித்ததே, போதும், எனக்கு" என்றான்.

"அவருடைய தொழில் முறையில் நான் எல்லை மீறிக் குறுக்கிட்டால் அவருக்குக் கோபம் வரும். போனது போகட்டும். ஆனால் உங்களை வெறுங் கையுடன் அனுப்பி விட்டார்களாமே? வாருங்கள்; அவரிடம் சொல்லி ஆயிரம் ரூபாயாவது வாங்கித் தருகிறேன்."

அவள் பிடிவாதமாக வற்புறுத்தினாள்; அவன் பிடிவாதமாக மறுத்தான்.

"நீ செய்த முயற்சி இருக்கிறதே, அதை நான் தெரிந்து கொண்டது எனக்கு ஒரு லட்சம் கிடைத்த மாதிரி. அதை நினைத்து நான் ஆனந்தப்படுவேன். நீ எனக்காக வீண் கவலைப்பட்டு, அவர் சந்தேகப்படும்படி நடந்து



எஜமானியம்மா :— எண்டாப்பா எலியைக் கொண்டு போய் விட்டு வர உனக்கு இவ்வளவு நாழியா? எலி அப்பவே திரும்பி வந்து விட்டது. உனக்கு வருவதற்கு இவ்வளவு நாழியாகி இருக்கிறதே!

கொள்ளாதே.—இதில் சம்பந்தப்பட்டவர்கள் மூன்று பேர்கள் என்று நினைத்தேன்; இல்லை, நான்கு பேர்கள்.''

மீண்டும் செங்கமலம் அவனைக் குமாரசாமியிடம் வரச்சொல்லி அழைத்தாள்.

''முடியாது, செங்கமலம்! நீ திரும்பிப் போ. இனிமேல் நான் ஒருவன் இந்த உலகத்தில் இருப்பதையே மறந்து விடு. என்னைப் பற்றி நீ எந்த முறையிலும் நினைக்க வேண்டாம். — தயவுசெய்து எனக்காக ஒரு உதவி செய்வாயா?''

''என்ன?''

''அந்தக் கடிதம் இன்னும் உன்னிடம் இருந்தால் உடனே கிழித்துப் போடு. நீ நன்றாக இருந்தால் அதில் எனக்கு ஒரு ஆனந்தம்.''

''நீங்கள் நன்றாக இருக்க வேண்டாமா?'' என்றாள் செங்கமலம்.

''எனக்கு ஒரு குறைவுமில்லை. நான் ஆண்பிள்ளை. நான் கஷ்டப்படுவதாக நினைத்துக் கொண்டு நீ கஷ்டப்படாமல் இருந்தால் போதும்.''

தணிகாசலம் அவளைத் திருப்பி அனுப்பி விட்டு, புளிய மரத்தடியிலிருந்து கிளம்பினான். வானத்துச் சூரியன் செங்கமலத்தின் பேச்சுக்குப் பிறகு வண்ணமதியாக மாறி விட்டது. வம்பு செய்ய மூன்று பேர் காத்திருக்கும் உலகத்தில் அன்பு செய்யவும் ஒருவரா?

வீட்டில் கல்யாணி அம்மாளும் கௌரியும் அவனிடமிருந்து பரபரப்பான விவரங்களை எதிர்பார்த்தார்கள். அவனும் விறுவிறுப்பான சில தகவல்களை சொல்லி வைத்தான். அவர்கள் அவனை நம்பினார்கள். குழந்தை பரமசிவத்தைத் தூக்கி மடியில் போட்டுக் கொண்டு தாலாட்டுப் பாடினான் தணிகாசலம்.

உலகம் தெரியாத குழந்தை தன் பொக்கை வாயைக் கோணலாக்கிக் கொண்டு சிரித்தது. நாக்கைச் சுழற்றிப் பேசப் பார்த்தது. கைகால்களை உதறிக் கொண்டு துள்ளியது. ''துள்ளாதேடா, ராஜா! உன் அப்பாவை இன்றைக்கு மூன்று பேர்கள் ஏமாற்றி விட்டார்களடா! உலகம் தெரியாமல் நீ துள்ளாதே, கண்ணு!'' என்று அதனிடம் கூறினான். 'அவர்களுக்கும் இப்படிப் பிள்ளை குட்டிகள் இருக்குமல்லவா?'

மாடிப்படிகளில் சத்தம் கேட்டது. உமா பூரிப்பு நிறைந்த முகத்துடன் அவனிடம் வந்து கரங்களை நீட்டினாள். குழந்தையைக் கொடுத்தான். முன்றானை காற்றில் பறக்க அவள் குழந்தையை வைத்துக் கொண்டு சுற்றி விளையாடினாள். அவளுக்கு என்ன பதில் சொல்வது?

நல்லவேளை, அவள் அந்தப் பேச்சை எடுக்காமல் வேறு பேச்சுத் துவங்கினாள்.

''இன்றைக்கு உங்களுக்கு ஒரு நல்ல சமாசாரம்!''

'மண்ணாங்கட்டி!' என்று தனக்குள் திட்டிக் கொண்டு, ''என்ன சமாசாரம்?'' என்று கேட்டான்.

''கல்யாணத்துக்குப் பெண் பார்க்க வரப் போகிறார்கள். நாளைக்கு வருகிறார்களாம். படித்த மாப்பிள்ளை; பணக்காரப் பையன்; உத்தியோகம் பார்க்கிறார். அவரும் அவர் தாயாருமே வருகிறார்களாம்.''


''நல்ல சேதிதான்'' என்றான் தணிகாசலம். 'அல்லி ராணியின் பிடிவாதம் தளர்ந்து விட்டது. வரப் போகும் மாப்பிள்ளையை 'அவன் — இவன்' என்று முன்பு பேசியவள் இப்போது மரியாதைப் பன்மைக்கு வந்திருக்கிறாள். இன்னும் அவனை நேரில் கண்டு விட்டால் எப்படியோ?'

''என்ன யோசனை?'' என்று கேட்டாள் உமா.

''இப்போதே என் மனம் நிறைந்த வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்!''

''என்ன சொன்னீர்கள்?'' என்று உறுமினாள் உமா. அவளுக்கு வந்த கோபத்தில் பையன் பரமசிவம் வீறிட்டுக் கத்தினான். ''இந்தாருங்கள், நீங்களும் உங்கள் குழந்தையும்!'' என்று அவனைத் தூக்கித் தணிகாசலத்தின் மடியில் 'தொப்'பென்று போட்டாள். இந்த முட்டாள்தனமான முன்கோபம் அவளுக்கு ஏன் ஏற்பட்டதென்றே அவனுக்கு விளங்கவில்லை. **(தொடரும்)**


புதிய திட்டங்களிலும் ப்ராஜெக்ட்களிலும் பெயிண்ட்கள்




...இந்தியாவின் புதிய திட்டங்கள் யந்திரத்தொழில் அமைப்புக்கள் இவைகளின் பலவிதமானதும், விசேஷம் பொருத்தியதும், அதிகரித்துக்கொண்டே வருகிறதுமான தேவைகளைச் சமாளிக்க, ஷாலிமார் பெயிண்ட்கள், நீடித்த உழைப்பு, நல்ல பாதுகாப்பு அளிப்பதோடுகூட, சாஸ்திரியமாகவும், கலரீதியாகவும் திருப்தி உண்டு பண்ணும் வகையிலும், தயாரிக்கப்படுகின்றன.

—ஏனெனில், இந்தியாவில் ஷாலிமார் பெயிண்ட் கம்பெனியாருக்கு மட்டுமே 55 ஆண்டுகளுக்கு மேலாக பெயிண்ட் தயாரிக்கும் அனுபவம் இருந்து வருகிறது.












எந்த உபயோகமாயினும் பெயிண்ட் ஆர்டர் செய்யும்பொழுது அவ் உபயோகத்தை தெரியப்படுத்தவும்

ஷாலிமார்
பெயிண்ட்கள்

ஷாலிமாரின் எல்லாவித பெயிண்ட்களின் முழு விவரங்களுக்கு ஷாலிமார் ரெடி ரெபரன்ஸ் கிப்லெட்டை, தபால் பெட்டி 68, கல்கத்தா-1 க்கு கேட்டு எழுதவும்.



SPW 360

SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO. PRIVATE LTD.



பொருளாதாரமும் பொதுமக்களும்

போக்குவரத்து சாதனங்கள்

க. சந்தானம்

எந்த நாகரிகத்துக்கும் போக்குவரத்து சாதனங்கள் இன்றியமையாதவை. இயற்கைப் பொருள்களும், செயற்கைப் பொருள்களும் உற்பத்தியாகும் இடத்திலேயே முற்றிலும் உபயோகிக்கப்படுவதில்லை. தேவையான இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். க்ஷேத்திராடனத்துக்கும், பஞ்ச காலங்களில் உணவு தேடிச் செல்வோருக்கும், போர்க் காலங்களில் சைனியங்களும் அவைகளுக்கு வேண்டிய தளவாடங்களும் போவதற்கும் ரஸ்தாக்களும், தங்குமிடங்களும், குதிரை, மாடு, ஒட்டகம், கழுதை முதலிய வாகனங்களும் எல்லா நாடுகளிலும் பழக்கத்திலிருந்து வந்தன. ரோம சாம்ராஜ்யத்தில் ஐரோப்பா முழுதும் நல்ல ராஜபாட்டைகளும், பாலங்களும் அமைக்கப்பட்டன. நமது நாட்டிலும் ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஹரித்துவாரத்திலிருந்து கன்னியாகுமரி வரையில் ஓயாமல் போக்குவரத்து இருந்து வந்திருக்கிறது.

இயற்கைச் சக்திகளை வசப்படுத்தியதின் முதல் புரட்சி போக்குவரத்து சாதனங்களில் ஏற்பட்டது. இங்கிலாந்தில் முதன் முதலில் ரயில் எஞ்சின் மணிக்கு 8 மைல் வேகத்தில் சென்றபொழுது ஜனங்கள் ஓர் புறம் ஆச்சரியமும், ஓர் புறம் திகிலும் அடைந்தனர். அதற்கு எதிராகப் பலத்த கிளர்ச்சியும் செய்தனர். ஆனால் அல்ப காலத்துக்குள் அதன் உபயோகத்தை உணர்ந்து, சென்ற நூற்றாண்டின் இரண்டாவது பாகத்தில் ரயில் பாதைகள் போட்டு நீராவி எஞ்ஜின்கள் மூலம் போக்குவரத்துச் சாதனங்களை ஏற்படுத்துவதே முக்கிய பொருளாதார முன்னேற்றமாக எல்லா நாடுகளிலும் கருதப்பட்டது.

ரயில் வண்டிக்குப் பின் நீராவிக் கப்பல்கள் தோன்றின. அதனால் சமுத்திரத்தின் வழியாகப் போக்குவரத்து சுலபமாகவும் துரிதமாகவும் நடைபெறத் தொடங்கியது. ஐரோப்பிய நாடுகள் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் தமது சாம்ராஜ்யங்களை வலுப்படுத்துவதற்கு மிகவும் உதவியது. அதோடு யந்திரத் தொழிற்சாலைகளில் ஏராளமாக உற்பத்தியாகும் பொருள்களை உலகெங்கும் எடுத்துச் சென்று வியாபாரம் செய்வதற்கு வசதியும் வளர்ந்தது.

இந்த நூற்றாண்டின் முதலில் பெட்ரோல் ஆவியால் செல்லும் மோட்டார் வண்டி அமைக்கப்பட்டது. அதனால் ஜனங்களின் போக்குவரத்தும், சாமான்களின் வியாபார வசதிகளும் மிகவும் பெருகின. எல்லா இடங்களிலும் லாபகரமாக ரயில் போட முடியாது. சாலைகள் அமைத்து மோட்டார் போக்குவரத்து ஏற்படுத்துவது சுலபம். மோட்டார் வண்டி வேகமாகச் செல்வதற்கு முதலில் கப்பி ரோடுகளும் பின்னர் தார், சிமெண்ட் சாலைகளும் போடப்பட்டன.

முதல் உலக மகா யுத்தத்தில் ஆகாய விமானங்கள் சிறிதளவு உபயோகப்படுத்தப்பட்டன. அது முடிந்தவுடன் விமானத் தொழில் தேர்ச்சியடைந்து, இப்பொழுது தூரப் பிரயாணத்தின் முக்கிய சாதனமாகி விட்டது. டில்லியிலிருந்து, பம்பாய், கல்கத்தா, மதராசுக்கு நாலைந்து மணி நேரத்தில் போகலாம். லண்டனுக்கு 24 மணி நேரத்திலும், வாஷிங்டனுக்கு 48 மணி நேரத்திலும் போகக்கூடுமானால் இத் துறையில் ஏற்பட்டிருக்கும் புரட்சியைக் கண்டு பிரமிக்காமலிருக்க முடியாது.

தந்தி, டெலிபோன், டெலிபிரிண்டர், வானொலி, விமானத் தபால் முதலிய சாதனங்களாலும் தூரத்தில் இருப்பவர்களுக்குள்

பரஸ்பர சம்பந்தங்களும், பொருளாதார ஒத்துழைப்பும் கலப்பமாகி விட்டன. போக்குவரத்து சாதனங்களின் இப் பெருக்கால் மனிதன் காலத்தையும், தேசத்தையும் வென்று விட்டான் என்று கூறுவது மிகையாகாது.

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவின் போக்குவரத்து சாதனங்களைப் பெருக்கத் தீவிர முயற்சிகள் செய்து வந்தது. பிரிட்டிஷ் வியாபாரத்தை விருத்தி செய்யவும், நாட்டைத் திறமையாக ஆளுவதற்கும் அவை இன்றியமையாதவையாக இருந்தன. எண்ணம் எப்படி யிருந்தாலும், ஆசியா கண்டத்தில் இந்தியா போக்குவரத்து சாதனங்களில் முன்னேறியிருப்பதை நாம் நன்றியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆயினும், ஐரோப்பிய நாடுகளைவிட மிகவும் பிற்போக்கானதாகவே பாரதம் இருப்பதைப் பின்வரும் புள்ளி விவரங்கள் தெளிவாக்கும்.

1954 புள்ளி விவரங்கள்

1 கிலோ மீட்டர் = ·62 மைல்

	இந்தியா	அமெரிக்க ஐக்கிய நாடு	பிரிட்டன்	கானடா	ஆஸ்திரேலியா
பிரயாணிகள் கிலோமீட்டர் (கோடி)	6043	4719	3333	460	1137
சாமான் டன் கிலோமீட்டர் (கோடி)	4823	80593	3612	8476	181
மோட்டார் (உல்லாசக் கார் 1000)	1,68	4,83,24	31,28,	26,82,	13,47
வாடகை மோட்டார் (1000)	1,36,	95,52,	11,06	924	650
வாடகைக் கப்பல் (1000 டன்கள்)	513	27344	19014	1610	833
விமான யாத்திரை (லக்ஷம் கிலோ மீட்டர்)	319	10939	934	638	857
விமானமூலம் பிரயாணிகள் (லக்ஷம் கிலோ மீட்டர்)	4404	330199	24387	16242	16018
விமான மூலம் சாமான் (லக்ஷம் டன் கிலோ மீட்டர்)	219	5442	518	192	645
விமானத் தபால் (லக்ஷம் டன் கிலோ மீட்டர்)	64	1814	291	117	132

1 பிரயாணி 1 கிலோமீட்டர் சென்றால் அது பிரயாணி கிலோமீட்டர் என்று கணக்கு.

1 டன் சாமான் ஒரு கிலோ மீட்டர் தூக்கிச் செல்லப்பட்டால், அது டன் கிலோமீட்டர் என்று கணக்கு.

ரயில் பிரயாணிகள் கணக்கில் இந்தியா முதல் ஸ்தானம் பெற்றிருப்பது கவனிக்கத் தக்கது. ஆனால் சாமான் போக்குவரத்தில் அமெரிக்க ஐக்கியநாட்டில் 16-ல் ஒரு பங்கும், கானடாவில் பாதியும், பிரிட்டனைவிட மூன்றில் ஒரு பங்கு அதிகமாகவும் இருக்கிறது.

மோட்டார் போக்குவரத்தில் இந் நாடு மிகவும் குறைவாக இருக்கிறது. உல்லாசக் கார்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் 483 லக்ஷம், பிரிட்டனில் 31 லக்ஷம், கானடாவில் 27 லக்ஷம், ஆஸ்திரேலியாவில் 14 லக்ஷம் இருக்க இந்தியாவில் 1 3/4 லக்ஷமே. வாடகை வண்டிகளும் இதே நிலைதான். இந்தியாவின் விமான யாத்திரை அமெரிக்க ஐக்கிய நாட்டின் யாத்திரையில் 30-ல் ஒரு பங்கும், பிரிட்டனின் கணக்கில் 3-ல் ஒரு பங்கும், கானடாவில் பாதியும், ஆஸ்திரேலியாவின் யாத்திரையில் 8-ல் 3 பாகமுமே இருக்கிறது.

பாரதத்தில் தற்சமயம் மொத்தம் 34,736 மைல் ரயில்பாதை இருக்கிறது. எல்லாம் மத்திய அரசாங்கத்தின் சொத்து. 976 கோடி ரூபாய் மூலதனம் கொண்டது. வருஷாந்திர வருமானம் 318 கோடி. செலவு. 260 கோடி. போக லாபம் 58 கோடி. இதில் மத்திய அரசாங்கத்துக்கு 36 கோடி வட்டிக்காகவும் லாபத்தில் பங்காகவும் கொடுக்கப்பட்டு, பாக்கி 22 கோடி ரயில்வே வளர்ச்சிக்குச் செலவழிக்கப்படுகிறது.

ரயில்வே அமைப்பும் எல்லாப் பிரதேசங்களி லும் சமமாகப் போடப்படவில்லை. ராஜ்ய வாரியான கணக்கு கீழே குறிப்பிடப்படுகிறது.

ராஜ்யம்	ரயில்வே மைல்
ஆந்திரப் பிரதேசம்	2807
அஸ்ஸாம்	1088
பீகார்	2923
பம்பாய்	6319
கேரளம்	467
மத்தியப் பிரதேசம்	3040
மதராஸ்	2204
மைசூர்	1677
ஒரிஸ்ஸா	838
பஞ்சாப்	2316
ராஜஸ்தானம்	3241
உத்தரப் பிரதேசம்	5261
மேற்கு வங்காளம்	1966

புதிதாக அமைக்கப்பட்ட ராஜ்ய வாரியாக மோட்டார் வண்டிகளின் புள்ளி விவரங்கள் பிரகரமாகவில்லை. சென்னை, பம்பாய், பஞ்சாப், வங்காளம், உத்தரப்பிரதேசங்களில் மோட்டார் போக்குவரத்து வளர்ச்சியடைந் திருக்கிறது. இதர பிரதேசங்களில் சரியான ரஸ்தாக்கள் குறைவாக இருப்பதால் பெருக வில்லை. தள வரிசையுள்ள ரோடுகளின் ராஜ்ய வாரி நீளம் கீழ்க் கண்டவாறு.

பிரதேசம்	மைல்
ஆந்திரப் பிரதேசம்	17641
அஸ்ஸாம்	1369
பீகார்	3827
பம்பாய்	12455
கேரளம்	5312
மத்தியப் பிரதேசம்	13640
மதராஸ்	9083
மைசூர்	7061
ஒரிஸ்ஸா	2583
பஞ்சாப்	3915
ராஜஸ்தானம்	3519
உத்தரப் பிரதேசம்	10253
மேற்கு வங்காளம்	3591
ஜம்மு காச்மீரம்	1102



கம்பெனி முதலாளி: அந்த ஒரு ஆள் மாத் திரம் அதிகமாக இருக்கிறது. அந்தப் பிழூனை வேணுமானாலும் டிஸ்மிஸ் செய்துவிடலாமா?

இந்தியக் கப்பல்களின் மொத்த கனம் 5,10,631 டன். அவற்றில் பாதி கடற்கரை யோர வியாபாரக் கப்பல்கள். மீதி வெளி நாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கின்றன. கடற்கரையோர வியாபாரத்தால் கிடைக் கும் வருஷாந்திர வருமானம் சுமார் ரூ 11 கோடி. வெளிநாட்டு வியாபாரத்தால் ரூ. 13 கோடி. ஒரு நாட்டின் வியாபாரத்தில் துறைமுகங்கள் முக்கியமான சாதனங்கள். பாரதத்தின் பெரிய துறைமுகங்களின் மூலம் செய்யப்படும் வருஷாந்திர வியாபாரத்தின் விவரம் பின்வருமாறு:

துறைமுகம்	கப்பல்களின் எண்ணிக்கை	இறக்குமதி (லக்ஷம் டன்)	ஏற்றுமதி (லக்ஷம் டன்)
கல்கத்தா	1285	34	46
பம்பாய்	2621	67	36
மதராஸ்	926	18	6
கொச்சின்	939	12	5
கண்ட்லா	82	2	1
விசாகப்பட்டினம்	492	2	11

விமானப் போக்குவரத்து முதலில் தனியார் கம்பெனிகள் மூலம் நடந்து வந்தது. ஐந்து வருஷங்களுக்கு முன் அது சர்க்காரால் எடுத் துக் கொள்ளப்பட்டது. விமானங்களின் யாத் திரை 1951-ல் 195 லக்ஷம் மைல், 1956-ல் 234 லக்ஷம் மைல்; பிரயாணிகள் 1951-ல் 4½ லக்ஷம், 1956-ல் 5½ லக்ஷம்; தூக்கப்பட்ட சாமான் 1951-ல் 876 லக்ஷம் ராத்தல், 1956-ல் 976 லக்ஷம் ராத்தல்; தபால் 1951-ல் 72 லக்ஷம் ராத்தல், 1956-ல் 125 லக்ஷம் ராத்தல். விமானத்தின் உபயோகம் வளர்ந்து வருவது உண் மையே. ஆயினும், விமானத்தில் பிர யாணம் செய்யக்கூடியவர்கள் வெகு சிலரே. சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளுமே விமானத்தில் செல்ல முடியும். இதர நாடுகளில் போல் சாதா ரண இந்திய மக்கள் விமானப் பிரயா ணம் செய்யும் காலம் வெகு தூரத்தில் இருப்பதாகத் தோன்றுகிறது.


ஜலதோஷம்
முதலியவைகளை
எதிர்ப்பதில்
முதன்மையானது
மூன்று தலைமுறைகளாக உபயோகித்தவர்கள் அமிர்தாஞ்சனம், ஜலதோஷம் முதலியவைகளை, சீக்கிரமாகவும், ஸுலபமாகவும், குணப்படுத்துகிறது என்பதை நிரூபித்துவிட்டார்கள்.
அமிர்தாஞ்சனம்
அமிர்தாஞ்சன் லிட்.,
சென்னை-4.
பம்பாய்-1.
கல்கத்தா-7.


வஸந்தத்தின் புத்துணர்ச்சி
உங்களுக்கு இன்றும்..என்றும்
மிக்க நேர்த்தி வாய்ந்த காஷ்மீர் பொக்கே உங்கள் உடலுக்கு இளவேனிற்காலை யின் புத்துணர்ச்சியளிக்கிறது... அதைக் குளிர்ச்சியாகவும் வாசனை திகழவும் வைக்கிறது.
Cashmere Bouquet
TALCUM POWDER
காஷ்மீர் பொக்கே
டால்கம் பௌடர்
ஆண்கள் விரும்பும் நறுமணத்துடன்

பதின்மூன்றும் அத்தியாயம்

அடையாறு பங்களா

தம்பி பெரிய கண்டத்துக்குத் தப்பிப் பிழைத்து உயிரோடு ஆஸ்பத்திரியிலிருந்து வந்ததும் முத்தம்மாளுக்கு அவன் மீது அன்பும் அக்கறையும் அதிகமாகி விட்டன.

"முனியம்மா! அத்தானுக்குப் பல் துலக்கத் தண்ணி எடுத்து வை. 'நாஸ்தா'வும் காப்பியும் கொண்டு போய்க் கொடு! போ! நிற்காதே!" என்று அவனை விரட்டி விரட்டி வேலை வாங்கினாள்.

"அதுதான் வெட்கப் படுதே அக்கா! நீதான் கொண்டு வந்து கொடுத்துடேன்!" என்றான் கந்தசாமி.

"என்ன வெட்கமாம்! நாளைக்கு இந்த வீட்டிலே குடித்தனம் பண்ணப் போகிறவள்

கான்ஸ்டபிள் கந்தசாமி



ஏ.கே.பட்டுசாமி

தானே!" என்று அவன் எரிச்சலைக் கிளப்பினாள் முத்தம்மாள்! அவன் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையாக இருந்தான்.

முனியம்மாள் கிணற்றடிக்குத் தண்ணீர் இழுக்கப் போன சமயம் கந்தசாமி தன் அக்காளைக் கூப்பிட்டான்.

"அக்கா, இங்கே வா!"

தம்பி அதி அன்பாகத் தன்னைக் கூப்பிட்டதைக் கண்டு அகமகிழ்ந்து அவன் அருகில் சென்றாள் அவள்.

"இதோ பாரு! மாமாவும் முனியம்மாவும் வந்த அன்றைக்கே ஒரு ஜோஸ்யக்காரனைப் பார்த்தேன். எங்க மாமன் பெண்ணைக் கட்டிக்கப் போகிறேன், பேர் ராசி பார்த்துச் சொல்லுங்கன்னு கேட்டேன் அக்கா...."

"உம்..உம்..என்ன சொன்னாரு?" என்று ஆவலோடு கேட்டாள் அக்காள்.

'' உனக்கும் அவளுக்கும் கொஞ்சம் கூடப் பொருந்தாது. கிரகம் சரியாக இல்லே. அவள் உன் வீட்டுக்குள்ளே காலை எடுத்து வைச்சால்கூட உன் உயிருக்கே ஆபத்து வரும்னு சொன்னாரு. அக்கா! இதை உங்கிட்ட சொல்லப் பயந்துக்கிட்டுச் சும்மா இருந்து விட்டேன்!'' என்று ஒரு பெரிய கல்லாகத் தூக்கிப் போட்டான்.

முத்தம்மாள் பிரமித்துப் போனாள். அவன் சொல்லுவதை நம்புவதா வேண்டாமா என்று திகைத்தாள். ஒருகால் உண்மையாகவே கிரகம் சரியில்லையோ? முனியம்மா வந்த உடனேயே அவனுக்கு ஆபத்து வந்து விட்டதே! என்னென்னவோ கோட்டை கட்டிக் கொண்டிருந்த அவளுக்கு இது பிரச்னையாகப் போய் விட்டது.

'' சரிதான். யோசிக்கலாம், தம்பி!'' என்று பெருமூச்சுடன் கூறினாள் அவள்.

அன்றிரவு சாப்பாட்டுக்குப் பிறகு, கந்தசாமி தனது பழைய நண்பர்களைச் சந்திக்க நாயரின் டீக்கடைக்குச் சென்றான். சில காலமாகச் சந்திக்காத அவர்களிடம் தன் பெருமைகளைக் கூற வேண்டும் போலிருந்தது அவனுக்கு. மேலும் முத்துப்பிள்ளை கூறிய விஷயங்களையும் வீட்டில் உட்கார்ந்தபடி தீவிரமாகச் சிந்திக்க முடியவில்லை.

கடையில் அவனது சகாக்கள் உட்கார்ந்து அரட்டையடித்துக் கொண்டிருந்தனர்.

'' என்ன சமராபுரி அண்ணே! சௌக்கியமா?'' என்றான் கந்தசாமி.

''அடேடே கந்தசாமியா? நான் பார்க்கவே இல்லையப்பா! நீ போலீசிலே சேர்ந்த பிறகு நம்மையெல்லாம் எங்கே கவனிக்கறே!''

'' வாப்பா! கந்தசாமி! வா! வா!'' என்று ஏகமனதாக வரவேற்றனர் மற்ற மூன்று நண்பர்களும்.

'' என்ன அப்படிச் சலிச்சுக்கிறீங்க...! இதோ பார் நாயர்! அஞ்சு சிங்கிள் டீ போடு! 'கரம்'மா இருக்கணும்!... ஆமாம். இப்ப நீங்க என்ன பண்ணறீங்க!'' என்றான்.

மற்றமூவரையும்விடச் சமராபுரியிடத்தில் கந்தசாமிக்கு மிகுந்த மரியாதை இருந்தது. சமராபுரி ராணுவத்தில் உத்தியோகம் பார்த்து 'பென்ஷன் பெற்றவன். வயதில் முதிர்ந்தவன். தைரியசாலி. தான் ராணுவத்தில் செய்த அசகாய சூரச் செயல்களைப்பற்றியெல்லாம் கதை கதையாகச்



சொல்லுவான். 'சமராபுரி வந்துவிட்டானென்றால் கூடவே கதை மூட்டையும் வந்துவிட்டது என்று எதிர்பார்க்கலாம்.

சமராபுரி கூறினான்:

'''இத்தனை நாளா 'அடையாத்'துலே ஒரு பங்களாவிலே உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தேன். போன வாரம் தான் அதை விட்டு விட்டேன்.''



''ஏன் விட்டுட்டீங்க?''

''அது பெரிய கதை சுந்தசாமி.'' சுந்தசாமி நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டான். ''உங்க வாயாலே கதை கேட்டு ரொம்ப நாளாச்சுங்க, சொல்லுங்க'' என்றான்.

இதற்குள் நாயர் ஐந்து கண்ணாடி டம்ளரில் தேநீரைக் கொண்டு வந்து வைத்தான். சமராபுரி டீயை ஆவலோடு உறிஞ்சிக் கொண்டே ஆரம்பித்தான்;

''நான் அந்தப் பங்களாவிலே இரவுக் காவல்காரன்! பங்களா சொந்தக்காரர் குடும்பத்தோடு பம்பாய்க்குப் போய் மூன்று மாதம் ஆகுது. நான் ராத்திரிவேளையிலே மாத்திரம் காவல் காத்தால் போதும். பகல் நேரத்துக்கு வேறே ஆள் இருக்குது. வேலை ஒண்ணும் கஷ்டமில்லை. மிலிட்டரியிலே பயப்படாமே 'ஸென்ட்ரி' பார்த்தவனுக்கு இது ஒரு பிரமாதமில்லை. பாரு, அந்தப் பங்களாவுக்கு அடுத்த பங்களா ரொம்ப வருஷமா பூட்டிக்கிடக்கு!''

கந்தசாமிக்கு விஷயத்தில் சுவாரஸ்யம் தட்டத் தொடங்கியது. மற்றவர்களும் அதை ஆவலோடு கேட்டனர்.

''வருஷக் கணக்கா பூட்டிக் கிடந்தா பூதம் காத்துப் போகாதா?'' என்றான் மற்ற மூவரில் ஒருவனான முத்துசாமி.

''அதைத்தானே சொல்ல வந்தேன். ராத்திரி பன்னிரண்டு மணி ஆயிடுச்சுன்னா, அங்கே உலாத்துகிற பேய்க்கும் பிசாசுக்கும், கணக்கு வழக்கே இல்லே.''

கந்தசாமி சிரித்தான். மற்றவர்கள் அவனை ஆச்சரியத்தோடு நோக்கினர்.

''என்ன அண்ணே! மிலிட்டரியிலே இருந்துட்டு நீயா இப்படிப் பேய் பிசாசுன்னு பேசறே! சும்மா கம்பைச் சுழற்றி மண்டை மேலே ஒண்ணு வச்சா பிச்சுக்கிட்டு ஓடாதா! இதற்குப் பயந்து கொண்டா..!'' என்று கூறியபடியே கையிலிருந்த தடியைச் சுழற்றிக் காண்பித்தான் கந்தசாமி.

''நான்கூட அப்படித்தான் நினைச்சிருந்தேன் கந்தசாமி! உன்னைப் போல் பேய் பிசாசிலே நம்பிக்கை இல்லாமல் தான் இருந்தேன்! நேரே பார்த்த பிறகுதானே தெரியுது....''

கந்தசாமி மீண்டும் நகைத்தான்.

''இதோ பாருங்க, எங்கிட்ட அந்தப் பங்களாவைக் காட்டுங்க. இன்றைக்கு ராத்திரி முழுதும் அங்கேயே படுத்து நல்லாத் தூங்கி விட்டு வருகிறேன். என்ன பந்தயம் கட்டுகிறீங்க?'' என்று சவால் விட்டான் அவன்.

''கந்தசாமி! நீ அறியாதபிள்ளை! இன்னும் கல்யாணங்கூட ஆகல்லே! ஏன் வீணாக?....''

''சும்மாப் பேசாதீங்க! எனக்கு நீங்க அந்த வீட்டைக் காண்பித்துத்தான் ஆகணும்!'' என்று பிடிவாதம் பிடித்தான் கந்தசாமி.

வான வீதியில் சிதறிக் கிடந்த கருமேகக் குவியல்கள் குளிர்ந்த காற்றின் வேகத்தில் ஒன்று சேரத் தொடங்கின. கந்தசாமி தான் கொண்டு வந்திருந்த மேல் துண்டால் உடம்பைப் போர்த்திக் கொண்டு சமராபுரியைப் பின் தொடர்ந்தான். மற்ற நண்பர்களும் கூடவே வந்தனர். இரவு பதினொரு மணிக்கு அவர்கள் அந்தப் பங்களா வாசலையடைந்து விட்டனர்.

சமராபுரி தூரத்திலிருந்தபடியே, ''இதோ பார், இதுதான் அந்தப் பங்களா! இடிந்த சுவரும், செடியும், கொடியும், இருட்டும் பார்க்கிற போதே எப்படியிருக்குது பார். வீணாக அசட்டுக் காரியம் பண்ணாதே, பயந்து விடுவாய்'' என்று எச்சரித்தான்.

விசாலமான தோட்டத்தின் நடுவேயிருந்த அந்தப் பங்களாவின் துருப் பிடித்த இரும்புக் கதவும், இடிந்து போயிருந்த மதில்சுவர்களும், அது வெகு நாட்களாகவே மனித சஞ்சாரம் இல்லாதிருக்க வேண்டும் என்பதை உணர்த்தின. பங்களாவின் கட்டடம் கண்ணுக்குத் தெரியாதபடி அதைச் சுற்றிலும் அடர்ந்து வளர்ந்திருந்த உயரமான விருக்ஷங்கள், நாற்புறமும் சூழ்ந்திருந்த இருளை அதிகரித்துக் காட்டின.

மரங்களுக்கிடையே சுட்டிக் காட்டி, ''அதோ பார்!....அங்கே!..'' என்றான் முத்துசாமி, மெதுவான குரலில்.

''ஏதோ நடமாடுகிறது மாதிரி இல்லே!'' என்றான் மற்றொருவன்.

கந்தசாமிக்கும் உள்ளூறச் சிறிது சலனம் ஏற்பட்டதென்றாலும், அவன் வெளிக்குக் காண்பித்துக் கொள்ளாமல் அலட்சியமாகவே பேசினான்.

மற்றவர்கள் விடைபெற்றுக் கொண்டனர். சுமார் பத்து நிமிட நேரம், கந்தசாமி தனியே நின்றுகொண்டிருந்தான். நிலவு அடியோடு மூடப்பட்டு விட்டது. பளிச்சிட்ட கண்ணைப் பறிக்கும் அந்த மின்னலும், இடியின் உறுமலும் கனத்த மழைக்குக் கட்டியம் கூறின. ஒருபுறம் பயமாக இருந்த போதிலும், அந்தப் பங்களாவின் அமானுஷ்யமான தோற்றம், அவனது தீரச் செயல் புரியும் உணர்ச்சியைத் தூண்டிவிடத்தான் செய்தது.

அவன், மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு கேட்டைத் திறவாமல் மதில் சுவரில் இடிந்திருந்த பாகத்தைச் சந்தடியின்றித் தாண்டிக் கொண்டு உள்ளே நுழைந்தான். எங்கே பார்த்தாலும் புதர்களும் செடி கொடிகளும் மண்டிக் கிடந்தன. தப்பித் தவறி ஏதாவது பாம்புப் புற்றில் காலை வைத்துவிடப் போகிறோமோ என்று பயந்தான் அவன். சுவர்க் கோழியின் ரீங்காரத்தையும் இடி முழக்கத்தையும் தவிர அந்த இடம் நிசப்தமாகவே இருந்தது.

அது இரண்டடுக்கு மாடிகளையுடைய கம்பீரமான கட்டடம். பங்களாவுக்குப் பின்னால் சிறிது தூரத்தில் இரண்டு சிறிய விடுதிகள் காணப்பட்டன. மோட்டார் ஷெட்டும் 'அவுட் ஹௌஸ்'ம் போலும். கந்தசாமி அந்த விடுதியை நோக்கி நடந்தான்.

இந்தச் சமயத்தில் திடீரென்று பெரு மழை பிடித்துக் கொண்டது. அவன் அந்தப் பின்புற விடுதியின் வராந்தாவில் ஓரமாக ஒதுங்கி நின்றான். வராந்தா வெங்கும் ஒரே புழுதி மயமாக இருந்தது. கூரையிலிருந்து கொடிக் கயிறுகள்

ஒவ்வொன்றின் விலை அணா 4 தான்!

லிப்கோ குறைந்த விலைச்

சிறு பதிப்புக்கள் [64]



திருக்குறள், நாலடியார், பிற்கால நீதி நூல்கள், நளவெண்பா, திருப்புகழ்(சில), பாரதியார் பாடல்கள் (சில) ஆகியவற்றின் மூலமும், திருக்குறள், நாலடியார் உரையும், நளவெண்பா, பன்னிரு ஆழ்வார்கள், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், நால்வர், இராமாயணம், பாரதம், கந்த புராணம், இராமலிங்க அடிகள், பாகவதம் போன்ற பழந்தமிழ் இலக்கியப் பெரு நூல்களின் சுருக்கங்களும் (கையடக்க அளவில்).



தமிழில் எல்லா வகைக் கடிதங்கட்கும்

லிப்கோவின்

கடிதம் எழுதுவது எப்படி?

கடிதம் எழுதும் முறைகளும், வாழ்த்து, வரவேற்பு முறைகளும், 'பாண்டு' பத்திரங்களின் மாதிரிகளும், இன்னும் பல உபயோகமான அநுபந்தங்களும், பட விளக்கங்களும் அடங்கியது.

இரண்டாம் பதிப்பு.

224 பக்கங்கள்: ரூ. 2.00; தபால் மூலம் ரூ. 2.87

ஆசிரியரின்றித் தமிழ்மூலம் ஆங்கிலம் பயில

லிப்கோ

ஆங்கில ஆசிரியன்



பொது அறிவை வளர்த்து ஆங்கிலத்தைப் பிழையின்றிப் பேசவும், எழுதவும் வல்லவராக்கும் நல்லாசிரியன் இந்நூல். பாடங்களுடன் படங்களும், பயன்தரும் அநுபந்தங்கள் பலவும் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன.

340 பக்கங்கள்: ரூ. 3.00; தபால் மூலம் ரூ. 4.00

லிப்கோவின் குழந்தை வளர்ப்புக் கலை	..	ரூ.	1.50
லிப்கோவின் மனித உடலின் விந்தைகள்	..	ரூ.	1.25
தி கிரேட் லிப்கோ டிக்ஷனரி (இங்.-இங்.-தமிழ்)	..	ரூ.	5.00
தி லிட்டில் லிப்கோ டிக்ஷனரி (இங்.-இங்.-தமிழ்)	..	ரூ.	2.75

இவை தவிர, ஆர். எஸ். மணி, ஏ. எம். மீரான், தமிழ்வாணன் எழுதிய சுவையான துப்பறியும் தமிழ் நவீனங்களும், தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, சம்ஸ்க்ருத ஆரம்ப பாடங்களும், லிப்கோ ஜெய் ஹிந்த் வாய்பாடும் கிடைக்கும்.

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, தி. நகர், சென்னை-17; எம். தாமோதரம் & கம்பெனி, அப்பா பில்டிங்ஸ், சென்னை-1; ஹிக்கின்பாதம்ஸ் (பிரைவேட்) லிமிடெட், மவுண்ட் ரோடு, சென்னை-2; ரெயில்வே ஸ்டால்கள்; மற்றும் ஏனைய புத்தகக் கடைகள்.

★ லிப்கோ நடமாடும் புத்தக ''வான்''களிலும் கிடைக்கும்.

கல்கத்தாவில் கிடைக்குமிடம்:

Shri J. B. Gopalaswamy, 8-E, Dacres Lane, Calcutta-1.

அறுந்து பாம்புகள் போல் தொங்கிக் கொண்டிருந்தன. மழை நின்றதும் பங்களாவுக்குள் நுழைந்து பார்க்க வேண்டும்; ஏதாவது திறந்த ஜன்னல்கள் இருக்குமாவென்று யோசித்த வண்ணம் நின்று கொண்டிருந்தான்.

சுமார் பதினைந்து நிமிடங்கள் வரையில் மழை ஓயவில்லை. அசைவற்று ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருந்த கண்களுக்குத் திடீரென்று தோட்டத்தின் வடக்கு மூலையில் ஏதோ வெளிச்சம் தோன்றி மறைந்தது போலிருந்தது. ஒருகால் மின்னலாயிருக்குமோ என்று எண்ணிக் கொண்டிருக்கையிலேயே அந்த வெளிச்சம் மீண்டும் தோன்றிக் கண நேரத்தில் மறைந்தது.

கந்தசாமி உற்றுக் கவனித்தான். திரும்பவும் அதே வெளிச்சம்! ஒவ்வொரு முறையும் அது ஒரு விநாடிக்கு மேல் நிலைக்கவில்லை. ஆனால் முதன் முறை வெகு தொலைவிலிருந்து காணப்பட்ட வெளிச்சம், மூன்றாவது முறை பங்களாவுக்குச் சமீபத்திலேயே தோன்றியது.

கந்தசாமியின் நெஞ்சு 'படக் படக்' என்று அடித்துக் கொண்டது. கடைசியில் சமராபுரி சொன்னதில் ஏதோ உண்மை இருக்கத்தான் செய்கிறது! இந்தப் பங்களாவில் ஏதோ பயங்கர மர்மம் அடங்கித்தான் இருக்கிறது. ஆனால் பேய்களாக இருக்க முடியுமா?

பளீரென்று வெட்டிய மின்னல் வெளிச்சத்தில் பங்களாவின் பின்புறத்தில் ஒரு கறுத்த உருவம் நிற்பதைக் கண்டான். ஒரு விநாடி நேரம் தாமதித்து விட்டு அவ்வுருவம் அவன் இருந்த தனி விடுதியை நோக்கி நகர்ந்து வரத் தொடங்கியது.

அவனது தைரியம் தளர்ந்தது. மார்பில் கையை வைத்து அழுத்திக்கொண்டான். மெதுவாக நகர்ந்து வராந்தாவின் மூலையில் போய்ச் சுவரோடு சுவராக நின்றவண்ணம் கவனித்தான்.

அந்த உருவம் இன்னும் அருகே நெருங்கி வந்து கொண்டிருந்தது. சிறிது நேரம் அவ் வராந்தாவின் எதிரே வந்து நின்றது. கந்தசாமி மூச்சைப் பிடித்துக் கொண்டு அசைவற்று நின்றான். கைகால்கள் ஒன்றுமே காணப்படாமல் ஒரே பூதாகாரமாக இருந்த அவ்வுருவம் மெதுவாக வராந்தாவுக்குள் நுழைந்து விட்டது. அவனது சப்த நாடியும் வெலவெலத்து விட்டது. கால்கள் உதறத் தொடங்கின. என்ன செய்வதென்று யோசிக்க நேரமில்லை. அடுத்த விநாடி மின்னல் வேகத்தில் அவன் தன் கைத்தடியைப் பலங்கொண்டமட்டும் சுழற்றி அந்த உருவத்தைத் தாக்கினான். ஒரு சிறிய முனகலுடன் அது தொப்பென்று தரையில் சாய்ந்தது!

கூரையிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த நீளமான கயிற்றை அறுத்து அவ்வுருவத்தைக் குண்டுக் கட்டாகக் கட்டி உருட்டினான். அதைக் கட்டும்போதே அவனுக்கு நிச்சயமாகி விட்டது: பேயுமில்லை பூதமுமில்லை — எவனோ ஒரு மனிதன்தான் என்று! தடவிப் பார்த்தான். உடம்பின் மீது மழைக் கோட்டு போன்ற எதையோ போர்த்தி யிருந்தான் அம்மனிதன்.

இப்போது அவனுக்கு வேறொரு கிலி பிடித்துக் கொண்டது. இவன் யார்? இந்த வேளையில் இவனுக்கு இந்த நிர்மானுஷ்யமான இடத்தில் என்ன வேலை? ஒருகால் யாராவது கொள்ளைக்காரனோ? கொள்ளைக்காரனென்றால் இங்கு எதைக் கொள்ளையடிக்க வந்தான்? இவன் ஒருவன்தானா? அல்லது இவனுக்கு வேறு சகாக்களும் உண்டா? உண்டானால் அவர்கள் எங்கே? இவனைத் தேடிக் கொண்டு வரமாட்டார்களா? அப்போது அவனது கதி என்ன?

அவனது மூளை தீவிரமாக வேலை செய்தது. பக்கத்திலிருந்த மோட்டார் ஷெட்டின் கதவு திறந்து கிடந்ததைக் கவனித்தான். அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அந்த ஆசாமியின் காலைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக் கொண்டு போய் அவனை ஷெட்டில் தள்ளி, கதவை இறுக மூடி விட்டான்.

பதினொன்காம் அத்தியாயம்

எதிர்பாராத சம்பவம்

'திக்திக்' கென்று அடித்துக் கொண்டிருந்த கந்தசாமியின் மனத்தில் ஒரு புறம் சந்தோஷமும் உண்டாயிற்று. அவன் முழுசாக ஒரு திருடனைப் பிடித்து விட்டான். ஹூம்! சாமானியத் திருடனா இவன்? பெரிய கொள்ளைக் காரனாகத்தானிருக்க வேண்டும்! இல்லாவிட்டால் இத்தனை பெரிய பங்களாவில் அவனுக்கு என்ன வேலை? உம், அடுத்தபடி அவன் செய்ய வேண்டிய வேலை என்ன? பங்களாவுக்குள் நுழைந்து பார்ப்பதா, வேண்டாமா? நுழைய வேண்டுமானால் எந்த வழியாக? சுமார் இரண்டு நிமிட நேரம் ஒன்றும்

தோன்றாமல் நின்றபின் மெதுவாகக் கட்டடத்தருகே சென்றான். கட்டடத்தின் பின்புறக் கதவு பூட்டப்பட்டிருந்தது. அருகிலிருந்த சன்னல்களும் தாளிடப்பட்டிருந்தன. சமீபத்தில் இருந்த விசாலமான ஆல விருட்சத்தின் கிளைகளிலொன்று கட்டடத்தின்மேன்மாடிப் பக்கமாக நீண்டு வளர்ந்திருந்தது.

அவனது மனத்தில் பளிச்சென்று ஒரு அற்புதமான யோசனை தோன்றியது. இந்தக் கட்டடத்தில் என்ன மர்மம் அடங்கியிருக்கிறது? எதற்காகக் கொள்ளைக்காரர்கள் இதைச் சுற்றி வட்டமிட வேண்டும் என்ற விவரங்களைக் கண்டுபிடித்து மறுநாளே இன்ஸ்பெக்டருக்குத் தகவல் கொடுத்து விடலாம். பிறகு அளகிரிசாமி நாயுடுவுக்கு அவன் எப்பேர்ப்பட்டவன் என்பது தெரியும்.

எவ்வளவு பெரிய கேஸ்! இத்தனை அபாயகரமான கேஸைத் தன்னந் தனியாகச் சமாளிக்கிறோம் என்பதை நினைக்க நினைக்க அவனது மனத்தில் உற்சாகம் ஏற்பட்டு உடல் பூரித்தது. மளமளவென்று ஆலமரத்தின் மீது ஏறி மாடிப் பக்கம் வளர்ந்திருந்த கிளையை அடைந்தான். அந்தக் கிளை, மொட்டை மாடிக்கு மேல் சுமார் பதினைந்து அடி உயரத்தில் இருந்தது. ஆனால் கிளையிலிருந்து குதிக்க வேண்டிய அவசியமேற்படவில்லை. கிளையிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த நீளமான விழுதைப் பற்றிக் கொண்டு இறங்கிச் சுலபமாக மாடியை அடைந்தான். ஒரு விநாடி சுற்று முற்றும் பார்த்த பிறகு சந்தடியின்றிப் படிகள் வழியாகக் கீழ்த்தளத்துக்கு இறங்கினான்.

முதல் மாடியில் ஒரு பெரிய ஹாலும் இரண்டு மூன்று அறைகளுமேயிருந்தன. எங்கே பார்த்தாலும் ஒரே புழுதியும் நாற்றமும் நிரம்பியிருந்தன. தலைக்கு மேல் துரிஞ்சில்கள் பறந்தன. வழி கூடத் தெரியாமல் கும்மிருட்டாக இருந்தது. மெதுவாகத் தடவிக் கொண்டே ஆராய்ந்து பார்த்தான். உதவிக்காக அவ்வப்போது தீக்குச்சிகளைக் கிழித்துக்கொண்டான். அறைகள் திறந்தே கிடந்தன. அவற்றில் ஒன்றிரண்டு அறைகளில் ஒடிந்தநாற்காலிகள், ஆணிகள், மரச் சட்டங்கள் இவற்றைத் தவிர வேறு பொருளொன்றுமில்லை.

அடுத்தபடியாக அதற்குக் கீழிருந்த தளத்துக்கு இறங்கி வந்தான். அதன் அமைப்பும் மேல்மாடியைப் போலவே இருந்தது. ஆனால் மற்ற அறைகளெல்லாம் திறந்து கிடக்க, வடபாகத்திலிருந்த அறை மாத்திரம் மூடப்பட்டிருந்தது. அந்த அறைக் கதவில் தொங்கிக் கொண்டிருந்த பூட்டைத் தொட்

டுப் பார்த்தான். பூட்டு ஒப்புக்காக மாட்டப்பட்டிருந்ததே ஒழிய, பூட்டப்படவில்லை. கந்தசாமி ஓசைப்படாமல் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். காலில் ஏதோ தட்டுப்பட்டது. தீக்குச்சியின் வெளிச்சத்தில் அவ்வறையில் ஏழெட்டு பெரிய பெட்டிகள் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டான். பெட்டிகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. ஒரு பெட்டியின் மேல் சுமார் ஆறங்குல நீளமுள்ள ஒரு பளபளப்பான குழாய் காணப்பட்டது. அதை மட்டும் கையில் எடுத்துக் கொண்டான்.

ஒரு பெட்டியைத் தூக்கிப் பார்த்தான். மிகுந்த பளுவாக இருந்தது. அவனுக்கு விஷயம் விளங்கி விட்டது. நிச்சயமாக அவற்றில் விலையுயர்ந்த பொருள்கள் இருக்க வேண்டும். இவற்றைக் கொள்ளையடிக்கவே திருடர்கள் வட்ட மிடுகிறார்கள். முட்டாள்கள்! இவ்வளவு சாமான்களை வைத்து விட்டு, அறையைப் பூட்டாமல் விட்டு விட்டுப் போனால் கொள்ளை போகாமல் இருக்குமா? ஹூம்! இந்தப் போலீஸ்தான் என்ன செய்கிறது!

போதுமான காற்றில்லாமல் அவனுக்கு வியர்த்துப் போய் மூச்சுத் திணறுவது போல் இருந்தது. மெதுவாகச் சுவரோரம் சென்று ஜன்னலைத் திறந்தான். குளிர்ந்த காற்று அவன் முகத்தில் வீசியது. மழை ஓய்ந்து விட்டது. ஆகாயத்தில் மேகங்கள் கலைந்து நிலா வெளிச்சம் தோன்றத் தொடங்கியிருந்தது. பங்களாவின் தென் பாகத்தில்தான் சமராபுரி வேலை பார்த்து வந்த பங்களா இருந்தது. வடபாகத்தில் விசாலமான மைதானம். அந்தப் பாகத்தில் பங்களாத் தோட்டத்துக்கு எல்லையாக இருந்த அடர்த்தியான புதர் மூடிய வேலி தென்பட்டது.

திடீரென்று எங்கிருந்தோ பேச்சுக் குரல் கேட்டது. கீழ்த்தளத்திலிருந்தா, எங்கிருந்து என்று நிச்சயிக்க முடியவில்லை. கந்தசாமி துணுக்குற்றான். வடபாகத்து வேலிப் பக்கத்திலிருந்து முதலில் கண்டது போன்ற வெளிச்சம் தோன்றி மறைந்தது. அது டார்ச் விளக்கின் வெளிச்சமாகத்தான் இருக்க வேண்டும் என்று அவன் இப்போது ஊகித்துக் கொண்டான். முதலில் வந்த ஆசாமியின் சகாவாகத்தான் இருக்க வேண்டும்! யோசிக்க நேரமில்லை. மடமடவென்று வந்த வழியே திரும்பித் தோட்டத்தில் இறங்கினான்.

மரத்தடியில் ஒதுங்கி நின்று உற்றுக் கவனித்தான். சுமார் ஏழெட்டு ஆசாமிகள் வேலியின் ஓரமாக மோட்டார் ஷெட் இருந்த திக்கை நோக்கி



வந்தவர்:—ஐயா என்ன பண்ணறாரு?

வேலைக்காரன்:—ஐயா தமிழ் காத்து வாங்கின்டு இருக்காரு; அம்மா இங்கிலீஷ் காத்து வாங்கின்டு இருக்காங்க.

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

நகர்ந்து கொண்டிருந்தனர். அவர்களது கைகளில் ஏதோ நீண்ட ஆயுதங்கள் இருந்தன. தடிகளா, கத்திகளா என்று தெளிவாகத் தெரியவில்லை. அத்தனை பேரையும் அவனால் எப்படித் தனியாகச் சமாளிக்க முடியும்? இல்லாவிடில் அவர்களைக் கொள்ளையடிக்க விட்டு விட்டு அவன் ஓடி விடுவதா? அது முடியாத காரியம். எப்படியாவது சமாளித்துவிட வேண்டும் என்ற ஒரு அசட்டுத் தீர்மானம் அவனது மனத்தில் உருவாகி உறுதிப்பட்டது.

இதற்குள் அந்த ஆசாமிகள் மோட்டார் ஷெட்டை நெருங்கி விட்டனர். அவன் ஒளிந்திருந்த இடத்துக்கும் ஷெட்டுக்கும் சுமார் இருபது கஜதூரம்தான் இருக்கும். அவர்கள் ஏதோ ரகசியம் பேசிக் கொண்டனர். இடையிடையே ஷெட்டிலிருந்து முனகல் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அவன் அடித்துப் போட்ட ஆசாமிதான் முனகுகிறான் என்று புரிந்து கொண்டான்.

வந்திருந்த ஆட்களில் ஒருவன் ஷெட்டின் கதவைக் கொஞ்சமாகத் திறந்து கொண்டு எட்டிப் பார்த்தான். பிறகு ஏதோ பேசிக்கொண்டு இருவர் உள்ளே நுழைந்தனர். சுமார் ஒரு நிமிட நேரத்துக்குப் பின் ஒருவன் மட்டும் வெளியே வந்து மற்றவர்களிடம் பேசினான்.

உடனே மற்றவர்களும் தடதடவென ஷெட்டுக்குள் நுழைந்தனர். அவ்வளவுதான்! கந்தசாமி ஷெட்டை நோக்கி 'விர்'ரென்று பாய்ந்து சென்று அதன் கதவை இழுத்து மூடி வெளிப்புறம் தாளிட்டு விட்டான்.

சிறைப்பட்ட கொள்ளைக்காரர்கள் உள்ளே கதவைத் தடதட வென்று தட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

"ஹூம்! ஒன்னும் நடக்காது. எங்கிட்டவா பலிக்கும்!" என்று கர்ஜித்துக் கொண்டே கந்தசாமி பையில் கையை வைத்தான். மாடியில் கிடைத்த குழாய் அவன் கைக்கு வந்தது. அந்த விசித்திரமான பொருளை உற்று நோக்கினான். "என்னது இது? பிகில் மாதிரியல்ல இருக்குது!" என்று கூறிக் கொண்டே வாயில் வைத்து ஊதினான். ஒரு அபூர்வத் தொனி கிளம்பியது. இன்னொரு முறை! சபாஷ்! பாண்டு வாத்தியம் கணக்கால்ல இருக்குது!"

கட்டடத்துக்குள் தடதட வென்று ஓடும் சத்தம் கேட்டது. கந்தசாமி ஆச்சரியம் அடைந்தான். அவனுக்குப் பயமாகப் போய் விட்டது! இது என்ன அவதி? அங்கே வேறு ஆசாமிகளா? ஒன்று போனால் ஒன்றா?

அவனது இருதயம் அதற்கு மேல் ஆபத்துக்களைச் சமாளிக்கும் சக்தியை இழந்தது. அப்போதுதான் அவனுக்கு எத்தகைய பயங்கரமான இடத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறோம் என்ற உண்மையான கிலி உதயமாகியது. ஆல மரத்தின் அருகில் போய் ஒடுங்கிக் கொண்டான்!

வாசற் பக்கத்திலிருந்து ஒரு கூக்குரல் கேட்டது. ஒருவன், "ஐயையோ! செத்தேன்! செத்தேன்!" என்று அலறினான். பலரது காலடிச் சத்தம். அதைத் தொடர்ந்து ஒரு மோட்டார் கார் புறப்படும் ஓசை. கந்தசாமி அசையாமல் நின்றிருந்தான். அவனுக்கு எல்லாம் ஒரே புதிராக இருந்தது.

சுமார் பதினைந்து நிமிடங்கள் கழிந்தன. பங்களாவுக்கு முன்புறம் சந்தடி அடங்கி விட்டது. ஷெட்டுக்குள்ளிருந்தவர்கள் மாத்திரம் சற்றைக்கொரு தரம் கதவை இடித்துக் கொண்டிருந்தனர். தூரத்திலிருந்த மாதா கோயில் கடிகாரம் மூன்று முறை ஒலித்தது. கந்தசாமி சரசரவென்று வேலிப் பக்கம் நடந்து அதைத் தாண்டிக் கொண்டு குறுக்கு வழியாகச் சாலையை அடைந்தான். அதன் பின்னர் மூச்சு சரியாக வரத் தொடங்கியது.

அவன் வீட்டை யடைந்தபோது கிழக்கு வெளுக்கும் சமயமாகி விட்டது. அவன் கதவைத் தட்டுவதற்கும், முத்தம்மாள் வாசலைப் பெருக்க, துடைப்பத்தை எடுத்துக் கொண்டு வருவதற்கும் சரியாக இருந்தது. (தொடரும்)


தேக ஆரோக்யத்திற்கு
இன்றியமையாதது!
ஔஷத குணம் நிறைந்த சால்மூக்ரா தைலம் கலந்து தயாரிக்கப்படும் காவேரி சூப்பர் சோப் ஒரு உன்னத ஸ்நான சோப். கையடக்கமான ஸைஸ். எப்பொழுதும் நீங்கள் கேட்டு வாங்கவேண்டிய சோப் காவேரி சூப்பர் சோப்.
காவேரி
சூப்பர் சோப்
CAUVERY
SUPER SOAP
தயாரிப்பு:
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிட்.

MC-389


அழகு மிகுந்த நீண்ட
அடர்ந்த கூந்தலுக்கு
பாமாலிவ்
பெர்ப்யூம்ட் கோகோனட் ஹேர் ஆயில்
PALMOLIVE
குடும்ப முழுவதிற்கும் மிக்க உகந்தது!
பெரிய எகானமி அளவு புட்டியினால் பணம் மிச்சமாகிறது! மூன்று விறு விறுப்பான வாசனைகளில் கிடைக்கும்.
லவண்டர்
மல்லிகை
ரோஜா

PCH/G/2



பூலோக ரம்பை

ஒரு புத்தகம் பல பதிப்புகள் வருவதால் அதன் மதிப்பு உயருகிறது. 'ஐந்தாவது பதிப்பு, ஆருவது பதிப்பு' என்று ஒவ்வொரு பதிப்புக்கும் மதிப்பை உயர்த்திக் கொண்டே போகிறோம்.

ஆனால் முன்பு ஒரு முறை வெள்ளித் திரையில் வெளியான படம், மறுமுறையும் வேறொரு படாதிபதியின் தயாரிப்பாக வெளி வருவதை யாரும் மதிப்பதில்லை.

அசோகா பிக்சர்ஸ் தயாரித்து, வெளியிட்டிருக்கும் ''பூலோக ரம்பை'' முன்பு ஏற்கனவே ஒரு முறை வெளியான படம்.

சினிமா மேல்நாட்டிலிருந்து நமக்குக் கிடைத்திருக்கும் ஓர் இணையற்ற சாதனம். அந்த அருங்கலையின் சாதனத்தினுல், நாட்டு மக்களுக்கு நலம் தரும் விஷயங்களையும், பல நுணுக்கமான கலையம்சங்களையும் படைத்து இந்தப் பூலோக வாழ்வை இன்பமயமான சொர்க்க வாழ்வாக மாற்றிவிடலாம். ஆனால் நாம் அந்தச் சாதனத்தை எவ்வளவு தூரம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்? அந்தக் கலையில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம்?—

இந்தக் கேள்விகளுக்கு நம் நாட்டுப் படங்கள் பதில் அளிக்கச் சக்தியற்றவை.

நம் நாட்டுச் சலன சித்திரங்களின் மூலம் நாம் மக்கள் உள்ளங்களில் சஞ்சலத்தையே உண்டுபண்ணியிருக்கிறோம்; சந்தோஷத்தை அல்ல. இதைஒப்புக்கொள்ளத்தான்வேண்டும்.

விறு விறுவென அடுக்கடுக்காக வரும் நிகழ்ச்சிகளும், உணர்ச்சி மயமான கதை அம்சமும் கொண்டு வேகமாக இயங்கவேண்டிய சாதனமாகிய சினிமா நம் தமிழ்ப் படாதிபதிகளின் கைவசம் அகப்பட்டுக் கொண்டு தளர் நடை போடுகிறது. அதுதான் இன்றையத் தமிழ்ப் படங்களின் நிலை.

பழைய கதைகளுக்குப் புத்துயிர் அளித்துப் படமாக்குவதை விட்டால் படத்துக் கேற்ற கதையே இல்லையா? பழைய பாத்திரங்களின் ஒட்டைகளை சயப்பற்று வைத்து அடைத்து உபயோகப் படுத்தி வந்தால், புதுப் பாத்திரங்களுக்கு அப்புறம் இடம் ஏது?

ஏராளப் பொருட் செலவில் ''பூலோக ரம்பை''யின் காட்சிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக நம் தியேட்டர்களில் அமைக்கப் பட்டிருக்கும் ஆசனங்களில் அமர்ந்து பார்க்கக்கூடிய படம் அல்ல இது. சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு பார்க்கவேண்டிய படம்! பஸ் ஸ்டாண்டில் நமக்கு வேண்டிய பஸ்ஸை எதிர்பார்த்துத் தவங் கிடக்கும் போது நாம் எத்தகைய பொறுமையைக் கையாளுவோமோ அதைப் போல நாலு பங்கு பொறுமையையாவது கையாள வேண்டும், ''பூலோக ரம்பை'' படம் பார்க்க.

நான் இந்தப் படத்தைப் பார்க்கப் போன போது தியேட்டரில் என் பக்கத்தில் அமர்ந்திருந்த ஒருவர், ''ஏன் ஸார், இந்தக் கதை எந்தக் காலத்தைச் சேர்ந்தது?'' என்று கேட்டார்.

''திரைக் கதையின் காலம் கஷ்ட காலம். அது நமக்குப் போதாத காலம்!'' என்றேன்.

''கணவனே கண்கண்ட தெய்வம்'', ''மணாளனே மங்கையின் பாக்கியம்'' என்னும் படங்களில் வந்த கதாநாயகன்தான் இந்தப் படத்திலும் வருகிருன். ஒரு பேரழகியின் காதலை எதிர்பாராத விதமாகப் பெறுகிருன். உடனே அவளை இழந்து தவித்துப் பலவிதமான கஷ்டங்களுக்கு ஆளாகிருன். மேற்கூறிய படங்களில் வருவதைப் போலவே, நாகப்பாம்பு, பாதாள மாளிகை எல்லாம் வருகின்றன; மாய ஜாலங்கள், மைவேலை முதலிய மந்திர தந்திரங்களும் வருகின்றன.

அந்தப் படங்களில் கதாநாயகனை நடித்து அநுபவப்பட்ட ஜெமினி கணேசன்தான் இந்தப் படத்திலும் கதாநாயகன். ஆகவே, இந்தப் படத்துக்காக அவர் எவ்விதமான சிரமமும் மேற்கொள்ள அவசியமில்லை. சிரமப்பட்டவர்களெல்லாம் படம் பார்க்கிறவர்கள்தான்!

மேற்படி படங்களில் கதாநாயகியாக நடித்த அஞ்சலிதேவிதான் இந்தப் படத்திலும் கதாநாயகியின் பாகம் ஏற்றிருப்பதால், அவருக்குப் புதிதாக நடிக்கும் சிரமம் ஏதும் இருக்கவில்லை.

ஜெமினி கணேசனின் நண்பன் சிகாமணியாக வரும் எம். என். நம்பியார் வழக்கம் போல் அயோக்கிய சிகாமணியின் பாகம்

ஏற்கவில்லை. நல்லவனாக நடிக்கிறார். நகை வியாபாரியாக நடிக்கும்போது அவர் முக பாவங்கள் நன்றாயிருக்கின்றன. கடைசியில் உணர்ச்சிப் பிரவாகமாகப் பேசிக் கல்லாக மாறவும் அவருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது இந்தப் படத்தில்.

ஓர் இளவரசன், அவன் தோழன் இருவருமாக வேட்டைக்குச் சென்றபோது, ஓர் இளவரசி (பூலோக ரம்பை)யையும் அவள் தோழியையும் சந்திக்கின்றனர்; முறையே இளவரசிக்கும் இளவரசனுக்கும் காதல் உண்டாகிறது; தோழனுக்கும் தோழிக்கும் காதல் பிறக்கிறது. (காதல் பிறப்பதன் காரணத்தை யறிய முற்பட்டால் கதையில்லை!)

அந்த இளவரசியின் தோழியும் ஓர் இளவரசி தான் — வேறு நாட்டு இளவரசி. அவள் பெயர் மேகலை. பூலோக ரம்பையின் தோழியாகவே படைக்கப்பட்டு, அவள் காதலனின் தோழனையே காதலித்து, கதாநாயகியின் கஷ்டங்களில் பங்கு பெற்றுத் தானும் கஷ்டப்பட்டுக் காரியத்தைச் சாதிப்பவள். (திரைக்கதை இவ்வளவு தெரிந்தால் போதுமானது. அதற்குமேல் தெரிந்தாலும் தெரியா விட்டாலும் ஒன்றுதான்!)

மேகலையாக நடிப்பவர் ராஜசுலோசனா. தளபதி வீரகேசரியின் பிடியிலிருந்து தப்பி ஆற்று வெள்ளத்தில் குதித்து, முகத்தில் கரியை அப்பி, உருவத்தை மாற்றிக் கொண்டு தெருவில் நடனமாடித் தன் தோழி பூலோக ரம்பையைத் தேடுகிறாள். (அதிர்ஷ்டசாலி! அவர் தம் முகத்தில் தாமே கரியைப்பூசிக் கொண்டார். ஆனால் படாதிபதி படம் பார்ப்பவர் முகங்களி லெல்லாம் கரியைப் பூசி விட்டார்!)

தங்கவேலுவும் அவர் தோழர் கருணாநிதியும் ஈ. வி. சரோஜாவும் பூலோகரம்பையைத் தேடுகின்றனர். விஜயபுரியின் தளபதியாக நடிக்கும் வீரப்பா தேடுகிறார்; நாகாசுரன் தேடுகிறான்; சூன்யக்காரி வெங்கம்மா தேடுகிறாள்; ஜெமினி கணேசனும், நம்பியாரும் தேடுகின்றனர்; மேகலை தேடுகிறாள். ஆனால் படம் பார்ப்பவர்கள் படத்தின் முடிவைத் தேடுகின்றனர்!

திரைக்கதை பல இடங்களில் முற்றுப் பெறத் தன்னால் இயன்ற மட்டும் முயன்று பார்த்தும் முயற்சி பலன் அளிக்க வில்லை. (படாதிபதியோ, டைரக்டரோ கதையை முடிக்க விரும்பாத போது அந்தக் கதை தற்கொலை செய்து கொள்ளுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் அதுவும் குற்றம் ஆகிவிடுமே!)

இப் படத்தின் பாடல்களை இயற்றும் பொறுப்பை ஒன்பது பேர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

''கண்ணாளர் இங்கு வருவார், கவி வான இன்பம் தருவார்'' என்னும் பாடல் நன்றாக அமைந்திருக்கிறது. அதை இயற்றியவர் கோவி மணிசேகரன். அவருக்கு நம் பாராட்டு உரியது.


அடுத்தபடி என்னைக் கவர்ந்தது திருவில்லிபுத்தன் இயற்றிய ''உன் கண்ணிலாடும் ஜாலம் யாவும் கருத்தின் ரகசியம்......'' என்னும் பாட்டு. சுசீலாவும், ஏ. எம். ராஜாவும் குரல் கொடுத்திருக்கின்றனர். செவியில் நிறையும் சுவையுள்ள பாட்டு.

திரைக்கதை வசனத்தை அரு. ராமநாதனும், விருதை ந. ராமசாமியும் அழகாக அமைத்திருக்கின்றனர்.

ஹாஸ்ய நடிகர் தங்கவேலுவும், கருணாநிதியும் ராஜா—மந்திரியாக வந்து கூத்தடிப்பது ரஸிக்கவில்லை. ''பாக்கியவதி''யில் பல கட்டங்களில் உணர்ச்சி யூட்டும் விதத்தில் நடித்து ரஸிக்க வைத்த தங்கவேலு ''பூலோக ரம்பை''யில் ''பூ! இவ்வளவுதானா!'' என்ற சொல்லுக்கு இடம் வைத்துக்கொண்டு விட்டார். சினிமாத் துறையிலும் நடிப்புக் கலையிலும் நாம் முன்னேறுவதாக நினைத்துக் கொண்டு நம்மையும் அறியாமல் பின்வாங்கிக்கொண் டிருப்பது சரியல்ல என்ற எண்ணத்தில் இதை எழுதுகிறேன்.

இப்படத்தில் வரும் ஆர்ப்பாட்ட நடனங்களையெல்லாம் மறந்துவிடுவது நல்லது. ஆனால் ஒரே ஒரு நடனம் நினைவில் வைக்கலாம். அதுதான் வள்ளி இசை நாடகம். ராஜசுலோசனாவும் ஈ. வி. சரோஜாவும் ஆடுகின்றனர். சுருக்கமாக நன்றாயிருக்கிறது.

சுமார் பத்தொன்பதாயிரம் அடி நீளமுள்ள படத்தோடு நகர்ந்து விட்டு உடல் சோர்ந்து உள்ளம் சோர்ந்து வந்திருக்கும் என்னால் இதற்குமேல் படத்தைப் பற்றி அபிப்பிராயம் சொல்ல முடியாததற்கு வருந்துகிறேன்;







பார்த்தால் மகாலக்ஷ்மி மாதிரி தோன்றுகிறதல்லவா? ஆம், உண்மையிலேயே மகாலக்ஷ்மிதான். ஸ்ரீமதி அஞ்சலிதேவி மகாலக்ஷ்மியாகத் தோன்றிக் கேட்ட வரமெல்லாம் தருகிறாராம், பி. ஏ. எஸ். புரொடக்ஷன்ஸாரின் "செஞ்சு லட்சுமி"யில். இதே படத்தில் தங்கவேலு நாரதராகத் தோன்றி எல்லோரையும் சிரிக்கப் பண்ணுகிறார்.

★


எதிர்ப்பக்கத்தில் பளபள காட்சியளிப்பவர்கள் சகஸ்ரநாமமும் பண்டரிபாயும் என்று சினிமா நேயர்களுக்கு நாம் சொல்லவேண்டியதில்லை. எம். எம். புரொடக்ஷன்ஸாரின் "அல்லி பெற்ற பிள்ளை"யில் இவர்கள் தோன்றி அபாரமாக நடிக்கிறார்களாம்.


★

கண்கள் வாட்டமுடன் சுழல, கைகள் என்னமோ காட்ட நாட்டியமாடுகிறாரே இவர் யார் தெரியுமா? சினிமா நேயர்களுக்குத் தெரிந்திருக்க முடியாது. நாவல் பிலிம்ஸாரின் "மகனே கேள்!" என்ற படத்தில் தோன்றும் புது முகம் குமாரி பிரியதர்சினி. கவர்ச்சியுடன் தோன்றும் இவர் எல்லோரையும் கவர்ந்துவிடுவார் என்று தோன்றுகிறது. திரைக் கதை, வசனம் திரு அரங்கண்ணல் எழுதியிருக்கிறாராம்.

★

எம். ஆர். ஆர். புரொடக்ஷன்ஸாரின் தயாரிப்பான "ஆனைப் பிறந்தவன்" என்ற படத்தில் முக்கியபாகம் ஏற்றிருக்கும் எம். ஆர். ராதா இப்படிக் காட்சிதருகிறார். இந்தப் படத்தில் எம். ஆர். ராதாவின் நடிப்பும் பேச்சும் 'பளிச் பளிச்' என்று மின்னுகின்றனவாம். உணர்ச்சியுடன் உரை நடையை வழங்கும் கட்டம் போதும்!







1. அண்மையில் நடந்த காங்கிரஸ் பொருட்காட்சியை, சென்னையின் புதிய கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி பார்வையிட்டார். நகராண்மைக் கழகத்தின் வரவு செலவுக் கணக்கு இலாகாவை, கமிஷனர் ஸ்ரீ டி. பாலசுந்தரம் கவர்னருக்குக் காட்டுகிறார். நகராண்மைக் கழகப் பிரதம கணக்கு அதிகாரியான ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி கடினமான புள்ளி விவரங்களை எல்லோரும் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் ரஸமாக விளக்கி யிருந்தார்.

2. சென்னை சர்க்கார் காதி இலாகா அதியற்புதமான கதர் நெசவுகளைக் காட்சிச் சாலையில் வைத்திருந்தனர். பாரத நாட்டின் பழந் தொழிலான நெசவுத் தொழிலின் மேன்மைகளை யெல்லாம் காதி போர்டு டைரக்டரான ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி அவர்கள் அங்கு மகோன்னதமான முறையில் சோபிக்கச் செய்திருந்தார்.

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

47. சில மருந்துகள்

க்ஷீரபலா தைலம் என்ற சிற்றுமுட்டித் ; தைலம் — அதிலும் ஆவர்த்தித க்ஷீரபலா என்ற மடக்குச் சிற்றுமுட்டித் தைலம்—பிறகு மாஷ தைலம் என்ற உளுந்துத் தைலம் இவற்றின் உபயோகத்தைச் சொல்லிவிட்டு, அவற்றைச் செய்யும் முறையை விளக்காமல் இருந்தால் நன்றாயிருக்குமா?

தைலவருக்கச் சுருக்கம்—தைலவருக்கப் பெருக்கம் என்ற இரண்டு அரிய நூல்களைத்'தேவர்க்கமுதம் தந்த தேரையன்' இயற்றியுள்ளார்.

இந்தச் சித்தர் இலக்கணத்தில் கரை கண்டவர். யாப்பு இவருக்குத் தண்ணீர் பட்டபாடு. அரிய விஷயங்களைக் குருநாதனிடம் கற்க வேண்டுமென்பதற்காக மறை பொருளில் சொல்லி யிருக்கிறார்.

மூத்திரப் பரீட்சையினால் வியாதியை நிச்சயித்தல் வியாதியின் சாத்தியா சாத்தியத்தைத் தெளிதல் ஆகிய விஷயமாக ''நீர் நிறக்குறி நெய்க்குறி சாஸ்திரம்'' என்னும் வியக்கத்தக்க நூலையும் இவர் இயற்றியுள்ளார்.

நாட்டு வைத்தியம்"படித்தேன். சித்த வைத்தியம் படித்தேன். படித்துத் தேர்ச்சி பெற்றேன். தேர்ச்சி பெற்றுப் பயின்று வருகிறேன் என்று சொல்லும் பெரியோர்களில் எத்தனை பேர்கள் தமது அன்றாடப் பயிற்சியில் இச்சாஸ்திரத்தைக் கையாண்டு வருகின்றனர்?

தேரையர் கரிசல் என்ற நூல்......

இந்த ஆராய்ச்சி யெல்லாம் நமக்கு எதற்கு? வாருங்கள், விஷயத்துக்கு வருவோம்.

சிற்றுமுட்டியின் வேரைத்தான் எடுக்க வேணும். கடுக்காயின் காயின்மேல் தோலைத்தான் எடுக்க வேணும். கரிசாலையின் இலையைத்தான் எடுக்க வேணும். வாயுவிடங்கத்தில் விதையைத்தான் எடுக்க வேணும் என்று வைத்திய நூல்கள் கூறுகின்றன.

தாவர சாஸ்திரம் விஞ்ஞான சாஸ்திரங்களில் அடிப்படைத் தத்துவங்களை விளக்கும் Fundamental Science என்னும் பிரிவைச் சேர்ந்தது. வைத்திய சாஸ்திரம் விஞ்ஞான சாஸ்திரங்களில் Applied Science என்னும் பிரிவைச் சேர்ந்தது. இவை இரண்டுக்கும் ஒரு இன்றியமையாத தொடர்பு உண்டு.

இவற்றை நம் நாட்டு முறைப்படி பயின்றோமானால். எந்த மூலிகையில் வேரை உபயோகிக்கிறோம்......ஏன்? எதில் காயை உபயோகிக்கிறோம்......ஏன்? எதில் விதையை உபயோகிக்கிறோம் .... ஏன்? என்பது போன்ற கேள்விகளைக் கேட்கவே தோன்றுது. அப்படித் தோன்றினாலும் விடை எளிதில் கிடைக்கும்.

விருத் - விருக்ஷம் - தரு - வனஸ்பதி - ஒஷதி - லதா - பிரதானு - ஸஸ்யம் என்றெல்லாம் தாவரங்களைப் பிரித்துத் தொகுத்து விளக்கியுள்ளதைப் படிக்கும்பொழுது இந்தச் சாஸ்திரத்தில் இவ்வளவு முன்னேற்றம் அந்நாளிலேயே அடைந்துள்ளோம் என்பதைக் கண்டு பெருமிதம் அடைவோம்.

*　　*　　*

க்ஷீரபாலா [சிற்றுமுட்டித்] **தைலம்**:- பலாமூலம் என்பது சிற்றுமுட்டி வேர். இக்குத்துச் செடியின் வேரைத்தான் மேலே சொல்வதுபோல் முக்கியமாக மருந்துக்கு எடுத்துக் கொள்வார்கள்.

நன்றாய் இடித்துப் பெருந் தூளாக்கிய சிற்றுமுட்டியின் வேர் இருபது தோலா [அரை ராத்தல்]. இதை 8 படி ஜலத்தில் இட்டுச் சிறு தீயால் காய்ச்சி இரண்டு படி கஷாயமாக்கிக் கொள்ளவும். மருந்தைக் கசக்கிப் பிழிந்து களைந்து விட்டு, கஷாயத்தை வடிகட்டி எடுத்துக்கொள்ளவும்.

இக்கஷாயத்துடன் நல்லெண்ணெய் 1 வீசையைக் கூட்டிச் சிற்றுமுட்டியின் வேர் பத்து தோலாவை வெண்ணெய் போல் அரைத்துக் கல்கமாக்கிக்கொண்டு நாலுபடி பாலும் சேர்த்துக் காய்ச்சவும்.

கல்கம் கையில் ஒட்டாமல் திரிபோல் வரும்பொழுது இறக்கி, தைலத்தை வடிகட்டிக் கொண்டு கல்கத்திலுள்ள தைலத்தையும் கிட்டி கட்டிப் பிழிந்து எடுத்துக் கொள்ளவும். இதுதான் க்ஷீரபலா தைலம்.

இத்தைலத்தை, மறுபடியும் சிற்றுமுட்டி வேரின் கஷாயம், கல்கம், பால்

தர்மம் !



இவற்றுடன் கூட்டி இவ்விதமே காய்ச்சினுல், அது மடக்கிக் காய்ச்சிய சிற்றுமுட்டித் தைலம் எனப்படும். இப்படியே மறுபடியும் மறுபடியும் மடக்கிக் காய்ச்சினுல் இந்தத் தைலத்தின் குணம் அதிகரிக்கும்.

நூற்றெரு தரம் மடக்கிக் காய்ச்சிய க்ஷீரபலா தைலத்தில் சில துளிகள் வீதம் உள்ளுக்குக் கொடுப்பதும், நஸ்யமாக மூக்கில் உறிஞ்சுவதும் உண்டு; இவ்வகை உபயோகங்களைப் பற்றிச் சந்தர்ப்பம் ஏற்படும்போது தெரிவிக்கிறேன். ஏற்கெனவே தெரிவித்தும் இருக்கிறேன்.

மாஷ தைலம் [உளுந்து தைலம்].

சிற்றுமுட்டியின் வேர் இரண்டு ராத்தலைப் பதினறு படி ஜலத்தில் நாலு படி கஷாயமாகக் காய்ச்சிக் கொள்ளவும். மருந்தைக் கசக்கிப் பிழிந்து களைந்து விட்டுக் கஷாயத்தை வடிகட்டிக் கொள்ளவும்.

உளுந்து இரண்டு ராத்தலை மேற்சொன்னவிதமே கஷாயமாக்கிக் கொண்டு, இரண்டு கஷாயங்களையும் ஒன்றாய்க் கலந்து கொள்ளவும். அத்துடன் ஒரு வீசை நல்லெண்ணெயும் சேர்த்துக் கொள்ளவும். இத்துடன் நிலப் பூசணிக் கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, நிலப் பனங்கிழங்கு, அமுக்கிரான் கிழங்கு, நாய்வேளை, நல்ல வேளைகளின் வேர், சதகுப்பை, சித்தரத்தை, இந்துப்பு, அதிமதுரம், பூனைக்காலி விதை, சுக்கு, மிளகு, திப்பலி, நெருஞ்சில்முள் ஆகிய பதினைந்து சரக்குகளை வகைக்கு அரைப் பலம் வீதம் அரைத்துக் கல்கமாகக் கூட்டிக் கொள்ளவும். இத்துடன் பசுவின் பால் ஒரு படியும் சேர்த்துக் காய்ச்சி—கல்கம் மணல் பாகத்தில் வரும்போது எண்ணெயை இறக்கிவடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

சித்தர் நூலில் காணும் உளுந்து தைலமும் அநேகமாக மேற்சொன்னதைப் போலவே தானிருக்கிறது. ஆயினும் ஒரு சில முக்கியமான வேறுபாடும் காண்கிறோம்.

உதாரணமாக....இதில் சிற்றுமுட்டியின் கஷாயம் சேருவதில்லை. பசுவின் பாலுக்குப் பதில் வெள்ளாட்டுப் பாலைக் கூட்டும்படியும் — காய்ச்சி வடிகட்டிய தைலத்தைப் பத்து நாட்கள் தான்ய புடம் வைத்திருந்து பிறகு உபயோகிக்கும்படியும் தெரிவித்திருக்கிறார் தேரையர்.



இலக்கியச் செல்வம் 52



பானைகள் மகாநாடு

பேராசிரியர் அ.சீநிவாசராகவன்

போன வாரம் பானை ஒன்று கவிஞரிடம் பேசியதைக் கேட்டோம். இன்று பானைகள் மகாநாட்டிலிருந்து செய்தி வந்திருக்கிறது. அதைப் பார்க்கலாம்.

இந்த மகாநாடு சுமார் 900 ஆண்டுகளுக்கு முன் பாரசீகத்தில் நிஷாப்பூர் என்ற ஊரில் நடந்தது. மகாநாட்டுக்கு நமது நிருபராகச் சென்றவர் உமர் கையாம் என்பவர்.

யார் இவர் என்று கேட்கிறீர்கள். 'கையாம்' என்றால் கூடாரத்துக்குத் துணி தைப்பவர் என்று பொருள். ஆனால் உமர்கையாம் துணி எதுவும் தைத்ததாகத் தெரியவில்லை. ஒரு சமயம், அவருடைய மூதாதையர் அந்தத் தொழிலைச் செய்ததால், 'கையாம்' என்பது குடும்பப் பெயராக அமைந்திருக்கலாம். ஆகவே உமர் என்பவர் உமர் கையாம் ஆனார். இவருடைய பெயர் முழுவதையும் சொன்னால் கொஞ்சம் மூச்சுத் திணறும். எங்கே சொல்லிப் பாருங்கள் : கியாசுத்தீன் அபுல் பத் உமர் பின் இப்ராஹீம் அல் கையாம். கொஞ்சம் மூச்சு விட்டுக் கொள்ளுங்கள். இனிமேல், இங்கே இந்தப் பெயர் முழுவதையும் சொல்ல நேரிடாது. உமர் கையாம் என்று சொன்னாலே போதும். அதுவே இன்று உலகப் பிரசித்தி பெற்றுள்ள பெயர்.

ஆமாம் துணிதான் தைக்கவில்லை, பின் அவருடைய தொழில்? சிந்தனைக் கூடாரத்துக்குச் செல்லாமல் வடிவம் அமைக்கும் கவிதைத் தொழிலே உமர் கையாமின் தொழில். அவர் காலத்தில்-அதாவது கி. பி. பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியில்-பாரசீகத்தில் அவர் சிறந்த விஞ்ஞானியாகவும், கணிதப் புலவராகவும், வான நூல் விற்பன்னராகவும், தத்துவ ஆசிரியராகவும் விளங்கினார். ஆனால் இன்று அவருக்கு உலகமெங்கும் புகழ் தேடித் தந்துள்ளது அவருடைய கவிதையே. இந்தப் பாரசீகக் கவிஞரை இன்று சந்திக்கிறோம். அவர் முதலில் தரும் செய்தி இது :

ஒரு நாள், மாலை மயங்கும் வேளையில், கவிஞர் உமர் கையாம் நிஷாப்பூர் கடைத் தெருவிலே நின்றார். பக்கத்திலே குயவன் பட்டறை ஒன்று. அங்கே குவிந்து கிடந்த களிமண்ணில் நீர் ஊற்றி, அந்த மண்ணைக் கையாலும் காலாலும் குத்தி மிதித்துப் பதமாக்கிக் கொண்டிருந்தான் குயவன். களிமண் துவண்டது. வேதனை தாங்காமலோ என்னவோ நெளிந்து துடித்தது. சரேலெனப் பிதிர்ந்து குயவன் பிடியிலிருந்து தப்பி ஓடப் பார்த்தது. குயவன் விடவில்லை, மிதித்தான், பிசைந்தான், அடித்தான். 'ஐயோ, இந்த மண் என்ன பாடுபடுகிறது!' என்று நினைத்தார் கவிஞர். 'இதற்கு வாய் மாத்திரம் இருந்தால் அழாதா ?' என்று அவர் எண்ணுவதற்கு முன், அழிந்து போன தன் நாக்கை நீட்டி, அந்தக் களிமண் ஏதோ பேசியது. குயவனைப் பார்த்து, 'அப்பா இவ்வளவு ஓங்கி அடிக்காதேயடா ! தாங்க வில்லை.

அன்பா, கொஞ்சம் மெல்ல மிதி, மெல்ல, மெல்ல' என்று களிமண் முனகியது கவிஞர் காதில் விழுந்தது. இந்தச் செய்தியைச் சொல்கிறார் உமர்கையாம்:

என்றே ஒருநாள் சந்தையிலே
இரவு படரும் வேளையிலே
நின்ற குயவன் களிமண்ணை
நெருடுங் காட்சிதனைக் கண்டேன்
'அன்பா, ஐயோ, மெல்ல அடா'
என்றே அழிந்த நாநீட்டி
நொந்த ஊமைக்களி முனகி
நுவன்ற துயரைக் கேட்டேன்யான்.


இந்தக் களிமண்ணின் துயரக் குரலுக்கும், வாழ்க்கையில் பலபடியாக உதைபட்டு, அடிபட்டு, மோதுண்டு கலங்கும் மனிதனுடைய குரலுக்கும் வித்தியாசம் ஒன்றும் இல்லை என்றே அவருக்குத் தோன்றியது. களிமண்ணை எப்படியெல்லாமோ துவைத்துப் பக்குவமாக்குகிறான் குயவன் என்றால், அப்படித்தானே உலகைப் படைத்த பெருங் குயவனும் மனிதனை இன்ப துன்பங்களுக்குள்ளே இடுக்கிப் பிசைந்து வடிவாக்குகிறான்! வடிவாக்குகிறான் என்று சொன்னேன்? அப்படித்தான் யாரும் சொல்லுகிறார்கள், நம்புகிறார்கள். ஆனால் உமர்கையாம் என்ற இந்தப் பாரசீகப் புலவர் அப்படி நேரடியாகச் சொல்லவில்லை. குயவன் கையிலே களிமண் படுகின்ற பாட்டைவிடக் கொடுமையானதுதான் இங்கே மனிதன் படுகின்றபாடு என்பதை உமர்கையாம் சொல்லுகிறார். ஆனால் பிரபஞ்சத்தைப் படைத்த குயவன் யார்? அப்படி ஒருவன் இருக்கிறானா? இருந்தால் ஏன் உயிர் என்ற பானையை வனைய வேண்டும், பிறகு அதை உடைக்க வேண்டும்? உண்மையில் தான் படைத்த உயிரைத் தானே அழிப்பதால் அப்பெருங் குயவனுக்கு என்ன பயன்? இக்கேள்விகளுக்கு உமர்கையாம் சொல்கின்ற பதில் ஒன்றுதான்:

'தெரியாது, அப்பனே, தெரியாது.'

'தெரியாதா?'

'ஆமாம், தெரியாது.'

இங்கே இந்தப் பேருலகில்
எப்படி வந்தேன் யாரறிவார்?
எங்கேயிருந்து புனலைப் போல்
இழிந்து வந்தேன் யாரறிவார்?



எங்கும் பரந்த பெரும் பாழில்
ஏதோ வீசும் காற்றைப் போல்
இங்கே வந்தேன் விரைகின்றேன்
எங்கே என்பதை யாரறிவார் ?

'நல்லது கவிஞரே, உமக்குத் தெரிய வில்லை என்ருல் ஒருவருக்குமே தெரியாதா? பெரியவர்களை அணுகிக் கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடாதா?'

கவிஞர் உமர் கையாம் கசப்போடு சிரிக்கிருர். சொல்கிருர்:

'தம்பீ! உன்னைப் போல் நானும் ஒரு காலத்தில் இளைஞனகத்தான் இருந்தேன். என்னுடைய அறிவில் எனக்கு இருந்த நம்பிக்கை கொஞ்சமென்று நினைக்கிருய்? ஞானம் படைத்தவர்கள், மெய்யுணர்வு பெற்ற தத்துவ தரிசிகள் என்று என் காலத்தில் உலகம் போற்றிய பெரியவர்களை நான் போய்க் கண்டு அவர்கள் அறிவுரைகளை யெல்லாம் பெற நான் முயலவில்லை என்று எண்ணுகிருய்? போனேன், அப்பா, போனேன். ஆனல் போன வழியே, வெறுங் கையோடு திரும்பி வந்தேன்.'

ஞானியர் பலரைத் தத்துவத்தை
நன்ருய்க் கரைத்துக் குடித்தவரை
நானும் உனைப் போல் சிறுவயதில்
நாடிச் சென்றேன் ஓயாமல்.


வானம் வரையில் நெடுநாக்கு
வளைந்து வளைந்து சுழன்றநடா
போன வாசற்படி வழியே
போனபடியே வந்தேன் யான்

'நீர் சொல்வது விசித்திரமாக இருக்கிறதே! ஏன் பிறந்தோம், எங்கிருந்து வந்தோம், எங்கே போகிறேம், பிரபஞ்சத்தின் மூல காரணம் எது, இவற்றைப் பற்றிப் பலர் இன்றும் திட்டவட்டமாகப் பேசுகிருர்களே, தத்துவங்களைத் தூக்கி எறிந்து அம்மானை ஆடுகிருர்களே?'

'ஓ, அவர்களைச் சொல்கிருயா? நானும் அவர்களைக் கண்டிருக்கிறேன். அவர்கள் நிலை என்ன தெரியுமா? போன மாசம் பானைகள் மகாநாடு கூடின. போயிருந்தேன். அங்கே சில பானைகள் பேசின. ஆமாம், ஆரவாரத்தோடு கொட்டு முழக்கோடு பேசின. அத்தனையும் காதில் விழுந்தன. நீ குறிப்பிடுகின்ற அறிஞர் அனைவரும் இந்தப் பானைப் பேச்சாளரைப் போலத்தான்.'

'பானைகள் மகாநாடா? அதென்ன, வேடிக்கை?'

'சொல்லுகிறேன், கேள்' என்று தொடங்குகிருர் கவிஞர். (தொடரும்)




விசித்திரச் சலங்கை
- கதை -
வாண்டு மாமா
படம் ..... பாபு
8
தயங்கிய தேவதத்தனை ஏரிக் குள் தள்ளி விடுகிறான் கிழவன்.
அதோ! கத்தியை நெருங்கி விட்டான். கரையேறியதும் காலன் காத்திருக்கிறான் பயலுக்கு!
போகாவிடில் கொன்று விடு வதாகப் பயமுறுத்துகிறான்
கத்தியுடன், சதுரங்கன் நிற்கும் கரைக்கு நீந்திச் செல்லாமல் எதிர்க்கரையை நோக்கி நீந்துகிறான் தேவதத் தன். கிழவன் உறுமுகிறான் கத்தியவாறு!
எதிர்க்கரையிலோ... ஜெயன் கைக் கோட்டை அதியன் சோமகேது என்ற ராட்சத னால் சிறையில் வைக்கப்பட் டிருக்கும் கலிங்க நாட்டு இளவரசி சுந்தர வல்லியை மீட்கும் முயற்சியில் மந் திரக் கத்தியை அடையும் மார்க்கம் தெரியாது ஏக் கமே வடிவாக நாட்டு இளவரசன் உட்கார்ந்திருக் கிறான். அதிர்ஷ்டம் தேவ தத்தன் உருவில் அவனைத் தேடிப் போகிறது!


மண்டபம் தான் அந்த மாயக் கத்தியைக் கொடுக்கும்.
தொடரும்



வைசாக நாட்டின் மன்னன் தன் அருமை மகள் அமலாவின் மீது அளவற்ற பாசம் வைத்திருந்தான். அமலாவுக்கு அழகுத் தேவதை தன் பூர்ண சௌந்தரியத்தை அள்ளி வழங்கி யிருந் தாள். அரசகுமாரி அமலா மணப் பருவத்தையடைந்ததும் தன் திருமண சம்பந்தமாக ஒரு நிபந்தனை விதித்தாள்.

யார் தன்னை முழு மனத்துடன் நேசிக்கிறானோ, அவனையே அவள் மணப்பதாக முடிவு செய்தாள். ஆனால் இதை எப்படிக் கண்டு பிடிப்பது? அதற்காக அவள் ஒரு அதிசய சோதனைக்கும் ஏற்பாடு செய்து விட்டாள்.

அரண்மனையின் அந்தப் புர வாசல் தூண் அருகே இருந்த அலங்கார மேசை



அதிசய சோதனை

யில் ஒரு பளிங்குக் கிண்ணம் வைத் திருந்தாள் அதில் குளிர்ந்த தண் ணீர் நிரம்பியிருந்தது. யார் அவனை விரும்புகிறானோ அவன் அந்த மேஜைக்கு அருகில் நின்று அவள் காதலை வேண்டிக் கீதம் இசைக்க வேண்டும். அந்தக் கீதம் உண்மை யாகவே உள்ளன்போடு பொங்கி எழுந்தால் அந்தப் பளிங்குக் கிண்ணத்திலுள்ள நீர் கொதித்துக் கிண் ணத்தில் நிரம்பி வழியும். பிறகு அரசகுமாரி எதிரில் வந்து நிற்கும் பொழுது அந்த நீருள்ள கிண்ணத்தை அப்படியே கவிழ்த்து விட வேண்டும்! யாராவது இதைச் செய்யாவிட்டால் அவர்கள் கண் குருடாகிப் போய்விடும்.

நாட்கள் வேகமாகக் கடந்தன. அரசகுமாரர்களும், வீர வாலிபர்களும் எத்தனையோ பேர்கள் இந்த அதிசய சோத னையை நிறைவேற்ற முன்வந்தனர் ஆனால் ஒருவராவது இந்தச் சோதனையில் வெற்றி பெறவில்லை.

அரசனுக்கு மிகுந்த கவலையாகப் போய் விட்டது. தன் அருமைப் பெண் ணுக்கு மணமாகாமலே போய்விடுமோ என்று பயந்தான். அரசகுமாரியும் கவலையுற்று ஒரு தன் அழகிய சித்திரத்தைப் புறாவின் கழுத்தில் கட்டி அனுப்பி னாள். தொலை தூரத்திலுள்ள எந்த வாலிபராவது தனக்கு மணவாளனாக வரவேண்டும் என்ற விருப்பம் அவளை அவ்வாறு செய்யத் தூண்டியது.

புறா தன் கழுத்தில் தொங்கிய அரச குமாரியின் சித்திரத்தோடு நீண்ட தூரம் பிரயாணம் செய்தது. கடைசியில் களைத்துப் போய் ஒரு பூங்காவில் இறங்கியது. அங்கே

கவிஞன் ஒருவன் இயற்கையின் வனப்பிலே மூழ்கியிருந்தான். 'உஸ்' என்ற சத்தத்துடன் ஒரு புறா சோர்ந்து போய்க் கீழே விழுந்ததைக் கண்டு திகைத்தான் அவன். அதன் கழுத்திலுள்ள ஓவியம் கவிஞனின் உள்ளத்தைத் திகைப்படையச் செய்தது. அவன் நீண்ட நெடுநாட்களாகக் கனவு கண்ட அந்தக் கற்பனைக் காதலியின் ஓவியத்தைக் கண்டதும் அவன் உள்ளம் ஆனந்தத்தால் நிரம்பி வழிந்தது. அவள் வைசாக நாட்டின் அரண்மனையில் இருக்கிறாள் என்று அறிந்ததும் உடனே அவன் புறப்பட்டு விட்டான்.

கவிஞன் நீண்ட நாட்கள் பிரயாணம் செய்து அரசகுமாரியின் நாட்டுக்கு வந்து சேர்ந்தான். ஆனால் தலைநகருக்கு வந்ததும் அரசகுமாரி விதித்துள்ள சோதனை அவனுக்குத் தெரிய வந்தது. தன் உள்ளத்தில் நிறைந்த அந்த அரசகுமாரியை அடைவதற்கு அந்தச் சோதனையில் பங்கு கொள்ள முனைந்தான்.

அந்தப் பனிமலைக் கிண்ணத்தை அடைந்ததும் தன் அளவில்லாக் காதலை கீதமாகப் பொழிந்தான். அவ்வளவுதான்; அவன் உள்ளத்திலிருந்து எழுந்த அந்தக் கீதத்திலே பனிமலைக் கிண்ணத்திலுள்ள நீர் கொதித்துப் பொங்கி விழுந்தது. அரசகுமாரி தன் சோதனையில் ஒருவாலிபன் வெற்றி பெற்று விட்டான் என்று அறிந்ததும் அளவில்லா மகிழ்ச்சியுடன் ஓடோடி வந்தாள். அடுத்த கணம் அந்தக்கவிஞன் 'ஐயோ!' என்று அலறினான். 'என்ன! என்ன!' என்றாள் அரசகுமாரி அமலா.

"நீ யார்? நான் எங்கே இருக்கிறேன்?" என்றான் கவிஞன்.

"ஆ! என் அதிசய சோதனையில் வெற்றி பெற்றும் உங்கள் கண்கள் குருடாகி விட்டனவா?" அரசகுமாரி விம்மி விம்மி அழுதாள்.

"அரசகுமாரி! நான் குருடன். நீ பேரரசனின் மகள். உனக்கு நாடும் செல்வமும் வேண்டும். என்னை நீ மறந்துவிட வேண்டும். இங்கிருந்து போய்விடு! நான் போய் வருகிறேன்."

"இல்லை. நீங்கள் இங்கேதான் இருக்க வேண்டும். உங்களைத்தான் நான் மணக்கப் போகிறேன்" என்றாள் அரசகுமாரி அமலா, கண்ணீர் பெருக்கியபடியே.

இருவர் உள்ளத்திலும் எழுந்த துக்கத்தில் நேரம் போனதே தெரியவில்லை. இருட்டி விட்டது. குருட்டுக் கவிஞனுக்குப் பழங்களும் உணவும் கொண்டு வந்து கொடுத்தாள். அவனுக்கு இரவு தங்குவதற்காக ஒரு அழகிய அறையில் படுக்கை வசதி யளித்தாள்.


மறுநாள் காலையில் குருட்டுக் கவிஞனைக் காணவில்லை. தன்னை முழு மனத்துடன் விரும்பியவன் கவிஞன் ஒருவன்தான்; அவனையே அடைய வேண்டும் என்று எண்ணியிருந்த இளவரசி அமலாவுக்கு அவள் ஆசை நிராசையாகிவிட்டது. அவன் அவளைப் பிரிந்து சென்று விட்டான்.

★

அரசகுமாரி அமலா நாடும் நகரமும் பல இடங்களில் குருட்டுக் கவிஞனைத் தேடி அலைந்தாள். பல நாட்கள் அன்ன ஆகாரமின்றி அவன் நினைவாகவே எங்கும் தேடிப் பார்த்தாள்.

கடைசியில் காட்டில் ஒரு குகையில் அவனைக் கண்டு விட்டாள். அவள் தேடக் கிடைக்காத மாணிக்கத்தை அடைந்து விட்டவள் போல், "என் பிரிய அன்பரே! என் முயற்சி பலனளித்து விட்டது. உங்களை அடைந்து விட்டேன். இனி என் துயரம் நீங்கி விட்டது" என்று குதூகலித்தாள்.

'ஹா, யார்! எங்கேயோ கேட்ட குரலாக இருக்கிறதே? நீ யார் என்று விவரித்துச்



சொல்'' என்றான் அந்தக் குருட்டுக் கவிஞன்.

''நான்தான் வைசாக நாட்டு மன்னனின் மகள் அமலா. அதற்குள் என்னை நீங்கள் மறந்து விட்டீர்களா ?''

''அமலாவா? குருட்டுக் கவிஞனை நாடி வந்து விட்டாயா! ரொம்ப சந்தோஷம்! அமலா! உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் குருட்டுக் கவிஞனைக் காப்பாற்றுவது ரொம்பக் கஷ்டம். உன்நாட்டையும் நகரத்தையும் துறந்து இங்கே இருப்பது உனக்கு முள்ளின்மேல் இருப்பது போலத்தான் தோன்றும்...''

''இல்லை. உங்களுக்குப் பணிவிடை செய்வதுதான் என் ஆனந்த வாழ்க்கை'' என்றாள் அமலா.

''சரி! எனக்கு உணவு தயாரித்துக் கொண்டு வா. நான் அதற்குள் சிறிது கண்ணயர்கிறேன்.''

அரசகுமாரி அமலா மிகுந்த மகிழ்ச்சியோடு குடிசையில் உணவு தயாரித்துக் கொண்டு வந்தாள். அப்பொழுது ஒரு பெரிய தேள் கவிஞனின் படுக்கை அருகே நெளிந்தது.

''ஆ, பெரிய தேள்! ஒதுங்குங்கள். உங்களைக் கடித்துவிடப் போகிறது. நான் அடித்து விடுகிறேன்.''

''வேண்டாம், வேண்டாம்! இதோ பார், அது படும் பாட்டை'' என்று கூறித் திரும்பித் தன் கையிலிருந்த கோம்பினால் சரியாக அதன் தலையில் ஒரு போடு போட்டான்கவிஞன். அது தன் உயிரைஇழந்தது.

''எப்படி இவ்வளவு சரியாக அதை அடித்தீர்கள்? நீங்கள் அதை அடிக்கும்போது உங்கள் கண்கள் ஒளி விட்டதைக் கண்டேன்...''

''ஆம், அமலா! அன்று போட்டியில் உண்மையாகவே எனக்குக் கண் குருடாக வில்லை. நீ எப்படி என்னைச் சோதிக்க விரும்பினாயோ, அதைப்போல் நானும் 'உனக்குத் திரண்ட செல்வமும் நாடும் வேண்டுமா? அல்லது ஏழைக் கவிஞன் வேண்டுமா?' என்று அறிந்துகொள்ளக் குருடனாக நடித்தேன். உனக்கு இவ்வளவு துன்பத்தை அளித்ததற்கு மன்னித்துவிடு...''

அமலா தன் அருமைக் கணவர் குருடரில்லை என்று அறிந்ததும் ஆனந்தக் கூத்தாடினாள். அந்த ஆனந்தத்தில் கவிஞன் இசைத்த இசை அளவற்ற இன்பத்தைச் சொரிந்தது. அந்தக் குடிசை அப்பொழுது அவர்களுக்கு வைசாக நாட்டின் அரண்மனையை விட இந்திரபுரியாகக் காட்சியளித்தது. —பி. எஸ். மணி

[ஆதாரம்: நாடோடிக் கதை]

காந்தி மகான்!

மனிதருக் குள்ளே ஒருமனிதன்;—அவன்,
மாபெரும் தெய்வப் பெரும்புனிதன்!
இனி(து)அருட் சேவைக்கே ஈசனவன்;—உயிர்க்(கு)
எலாம்கரு ணைப்பிர காசனவன்!

தியாகத் தழலில் புடமானவன்;—ஐயம்
தீர்ந்தபண் பாட்டுக்(கு) இடமானவன்!
வியாபக மாய்நின்ற ஐயனவன்;—நாட்டின்
விடுதலை நல்கிய துய்யனவன்!

உண்மையொன் றுக்கே உயிரானவன்;—மாந்தர்
உரிமை புணர்வுக்கே பயிரானவன்!
மண்மீ(து) அறம்வென்ற புண்யனவன்;—தவ
மகாத்மா காந்தினனும் கண்யனவன்!

அன்பே உருவான ஞானியவன்;—வான்
அடங்காப் புகழ்த்திரு மேனியவன்!
என்பும் உயிரும் நமக்கானவன்;—ஆயின்,
எண்ணில்துன் பங்கள் தமக்கானவன்!

போத நபி,யேசு, புத்தனவன்;—ஒரு
புதுமைக்கும் புதுமையாம் சித்தனவன்!
சோதனைக் குன்னொளி சேர்ந்தமகான்;—சத்ய
சோதனை யாய்வாழ்ந்த காந்திமகான்! —தமிழழகன்

நல்லவர் கெடுவதில்லை

"உங்களுக்கு நடந்த கதையெல்லாம் நினைப்பிருக்குதா? உங்க அண்ணன் என்ன பாடு படுத்தினாரு; அதுக்கு இதுதான் பதில் உபகாரமா? நினைச்சுப் பாருங்க. இது நல்லதுக்குக் காலமில்லே."

செங்கோடன் தலை மறைந்ததும், அன்னம்மாள் கத்த ஆரம்பித்தார். அன்னம்மாள் கத்துவதன் அர்த்தம் பரிபூரணமாக நெல்லையப்பருக்குத் தெரியும். அவர் என்ன சிறு பிள்ளையா? உலகம் தெரியாதவரா? வயசும் ஐம்பதைத் தாண்டி விட்டது; அவர் வாங்கிய வயலும் ஐம்பதைத் தாண்டி விட்டது. இனி அவர் நிலம் வாங்கக்கூடாது என்று முடிவு கட்டியிருக்கிறார். ஊரிலே இவ்வளவுதான் நிலம் வைத்துக் கொள்ளலாம் என்ற கட்டுப்பாடு வந்தால் கஷ்டம் என்பதற்காக அவர் நிலம் வாங்குவதை நிறுத்துகிறார்; இப்போது ஊருக்குத் தெற்கே ஒரு எலும்பு மில்லுக்கு அஸ்திவாரம் போட்டு வருகிறார்; ஊரிலே ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டம் நடைபெற்று வருவதில் அதிகமாகப் பயன் பெறுகிறவர் அவர்தான்.

"போயிட்டுப் போகிறான்! சின்னப் பயல் வந்து பல்லைக் காட்டுகிறான். நாம் என்ன அந்த நாலு வயல் குத்தகை வந்துதானா உலை ஏத்தப் போறோம்?" என்று அவர் தமது பைக்குள்ளிருந்து கத்தை நோட்டுக்களை எடுத்து அன்னம்மாள் முன் வைத்தார். அன்றைக்கு ஒரு கட்டு நோட்டு கண்முன் இல்லாது போயிருந்தால் அன்னம்மாள் ஆகாயத்துக்கும் பூமிக்கும் குதித்திருப்பாள்; அவர்களுக்குள் பெரிய மனஸ்தாபம் விளைந்திருக்கும். பணத்தைக் கண்டதும் எடுத்து உள்ளே இரும்புப் பெட்டிக்குள் கொண்டு வைக்கப்போனாள்.

"பணத்துக்கு உனக்கு ஏதாச்சும் நகைநட்டு வேணுமின்னாலும் வாங்கலாம். இனிமேல் நமக்குச் சொத்து சுகம் எதற்கு? செத்தால் சர்க்கார்தான் எடுத்துக் கொள்ளும்."

"புதுசாத்தான் அண்ணன் மகன் வந்து குழையுறானே" என்று மீண்டும் தன் எரிச்சலைச் சொன்னாள் அன்னம்மாள்.

"கிடக்கிறான் போ. சின்னப் பயல் கஞ்சித் தண்ணிக்குக் கஷ்டம் என்று கண்ணைக் கசக்கினான். 'போடா, இரண்டு வயலில் வாழை போட்டுக்கொள். நீ ஒன்றும் வாரம், தர வேண்டாம்' என்று சொல்லிவிட்டேன். இவனிடம் அறுபதுக்கு நாற்பது வாங்கித்தானா நிறையப் போகுது! என்ன இருந்தாலும், உடன்பிறந்த ரத்தம் துடிக்குது.

"துடிக்குமே என் வயிற்றெரிச்சலைக் கொட்டாதீங்க" என்று ஒரு பொட்டுக் கண்ணீர் வடித்துப் பட்டாடை கொண்டு துடைக்கவும் செய்தாள்.

"அட என்றைக்கோ நடந்த காரியம்" என்று கணவன் அசட்டையாகச் சொன்னாலும் இன்றும் அன்னம்மாள் மனசில் பகைமையாகத்தான் இருக்கிறது. தன்னையும் தன்னுடைய கணவனையும் என்றோ ஒரு காலத்தில் "இறங்குங்கள்! வீட்டை விட்டு உடனே போக வேண்டும்" என்று கத்திய குரல் அவள் காதில் ஒலிக்க ஆரம்பித்தது. ஆண்களைப் போல் பெண்கள் நல்லதை மறந்தாலும் மறப்பார்கள்; ஆனால் பொல்லாத காரியத்தை மறக்கவே மாட்டார்கள்.

நட்ட நடுநிசியில் 'வெளியேற்றப்பட்ட காட்சி நினைவில் வந்தது.' சொத்து முழுவதையும் அபகரித்துக் கொண்டு கடன் தொகைக்கு வழி சொல்ல வேண்டுமென்று அவள் போட்டிருந்த நகையையும் கழற்றி வாங்கியது, உடுத்திய துணியோடு வெளியே துரத்தியதும் ஒவ்வொன்றாக நினைவுக்குவந்தன. ஊரார் வந்து நியாயம் சொன்னதும் பெற்ற தாயே மகன் காலில் விழுந்து கெஞ்சியும் கொடூரமாக மறுத்து விட்டதும் அவள் நினைவில் ஓடிக்கொண்டிருந்தன.

சொத்து, சுகம் இல்லாமல், வெறும் கையோடு அவளும், நெல்லையப்பனும்—இளம் வயதாக இருந்த இருவரும்-நடுத்தெருவில் நின்றார்கள். அவர்களுக்கு



ஆறுதல் சொல்லவே ஊராருக்குப் பயம். அத்தனை முரடன் செங்கோடன் தகப்பன். தம்பி ஏதோ சொன்னதைக் கேட்கவில்லை யென்ற கோபத்தில் திட்டினான். போதாக் குறைக்கு, ''கலியாணமான ஜோர் எதிர்த்துப் பேசச் சொல்லுதாடா ஏலே!'' என்றும் திட்டினான். இதனால்தான் சண்டை வலுத்தது. முடிவிலே அவர்கள் கூலிக்காரர்கள் போன்று வெளியே போய்க் கஷ்டப்பட்டு, நகரத்துக்குள் வந்து சிறுகச் சிறுக வாழ்ந்து கடை, வியாபாரம் என்று வளர்ந்து காசு, பணம் சேர்த்தது ஒவ்வொன்றும் தனிக் கதை.

தம்பி நெல்லையப்ப முதலியாருடன் அவர் அண்ணன் கூட்டு வியாபாரம் செய்ய வந்த போது அன்னம்மாள் அதைத் தடுத்து விட்டாள். பின்னர் அண்ணன் சொத்துக்களை அரைகுறையாக விற்ற காலத்தில், தம்பியே அதிகவிலை கொடுத்துப் பூர்வீகச் சொத்துக்கள் அனைத்தையும் வாங்கினார். மேலும் மேலும் கடலை வியாபாரம், எண்ணெய் வியாபாரம் என்று பெருகியது. கடையை நடத்தச் சொல்லி



விட்டுக் கிராமத்துக்குள்ளே வந்து விவசாயம் செய்ய ஆரம்பித்துக் 'கிடுகிடு' வென்று முன்னுக்கு வந்து விட்டார்.

அண்ணன் செத்துப் போன காலத்தில் நெல்லையப்பர் அந்தக் குடும்பத்துக்கு ஓரளவு பொருள் உதவி மனைவிக்குத் தெரிந்தும் தெரியாமலும் செய்து வந்தார். நாலு வார காலமாகக் காலில் விழுந்து தமது வயலைக் குத்தகைக்குக் கேட்டபோது செங்கோடனுக்காக மனம் இரங்கி, பயிர் வைத்துக் கொள்ளச் சொல்லிவிட்டார். இதற்கு எவ்விதமான அடமானச் சீட்டும் கிடையாது. வாய் வார்த்தையாகக் கொடுத்தார்.

ஊரார் முழுக்க முழுக்க நெல்லையப்ப முதலியார் தமது அண்ணன் மகனுக்குச் செய்துள்ள உதவியைப் பாராட்டினார்கள். கொஞ்சம் கொஞ்சமாக, அன்னம்மாளும் இந்த உதவியைக் கண்டிக்கும் எண்ணத்தைக் கூட மறந்து போய் விட்டாள்.

* * *

நெல்லையப்ப முதலியார் கோபமாக வந்து திண்ணையில் உட்கார்ந்தார். எலும்புத் தூள் மில்லுக்குப் பக்கமாகத் தண்ணீர் கால்வாய் வெட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார் பக்கத்து ஊர்ப் பணக்காரர். அவரும் எட்டின உறவுதான். மில்லுக்கு வேண்டிய பங்குகள் போடுவதாகச் சொல்லிவிட்டு, லாபம் வராது என்ற எண்ணத்தால் பின்வாங்கியவர் மில்லில் நல்ல லாபம் வருவதைக் கண்டு பங்குகள் கேட்டார். நெல்லையப்ப முதலியார் மறுத்து விட்டார். வேலாயுத முதலியாருக்குப் பக்கத்துக் குளத்தில் பெரும் பகுதி சொந்தம். அவர் அங்கே இருந்து சொந்தச் செலவில் மில்லின் காம்பவுண்டுச் சுவரை ஒட்டிக் கால்வாய் வெட்டத் தொடங்கினார். எலும்பு மில்லுக்குத் தண்ணீர்க் கசிவு வரக்கூடாது. இதை ஆட்சேபணை செய்தார், மில்லின் சொந்தக்காரர். ஒருவர்மீது ஒருவர் பிராதுகள் தாக்கல்செய்து விசாரணையில் இருந்தது. அந்தக் கவலையில் வந்து உட்கார்ந்தபோது, அவருக்கு வேறு ஒரு அதிர்ச்சி வீட்டுக்குள் காத்திருந்தது.

''தெரியுமா? உங்க மகன் செங்கோடன் இருக்குதே, அதுக்கு நம்ம வேலாயுத முதலியார் தமது மகளைக் கொடுக்கப் போகிறார்.''

அவர் காதில் யாரோ சொன்னது தான். நிச்சயமாக நடக்கும்என்று அவர் எதிர் பார்க்கவில்லை.

அருகில் நின்ற வேலையாளைவிட்டு, ''கூட்டிவா செங்கோடனை'' என்றார். செங்கோடன் சிறிது பொழுதில் வந்தான். வரும்போது வாய் நிறையச் சிரிப்பு. மனசிலே குதூகலம். சின்னப்பாவும் அடுத்த ஊர்ப் பணக்காரரும் மோதப் போகத் தனக்கு வந்த யோகத்தை எண்ணிச் சிரித்துக் கொண்டு வந்தான்.

''டேய், எனக்குப் பிள்ளை குட்டி இல்லை என்பது தெரியுமல்லவா?''

''இரைஞ்சு பேசாதீங்க. சித்தியம்மாள் காதிலே விழுந்தால் கோபத்தில் சீவிப்போடும் உங்கள் நாக்கை.''

''அன்னம்மாள் இதைக் கேட்டுக் கொண்டு தான் இருந்தாள்.

''கேளுடா, என் ஆயுளுக்கு அப்பாலே உனக்கு இந்தச் சொத்து அனைத்தும் எழுதி வைக்கப் போகிறேன்.''

''அடேயப்பா! பெரிய தாராளந்தான். சித்தப்பா! இரண்டு வயலை வாழைக் கொல்லை போடக் கேட்டதும் போதும்; சித்தி அம்மா என்னைத் திட்டறதும் போதும். உங்க சொத்து எனக்கு வேண்டாம். அப்படியே

கொடுத்தாலும் எங்க மாமனார் சொத்தை விடவா உங்க சொத்து பெரிசு?''

நெல்லையப்ப முதலியாருக்கு ஆண்டவன் நெற்றிக் கண்ணைப் படைத்திருந்தால், அண்ணன் பையன் நிச்சயம் சாம்பலாகப் போயிருப்பான்.

''டேய், இன்னும் சம்பந்தம் போடலை. அதுக்குள்ளே எவன்டா மாமன் மச்சான்? சொல்வதைக் கேள். என் சொத்து முழுதும் சுய சம்பாத்தியம்.''

''வேண்டாம். அவர் பெண் என்னைக் கட்டிக்கொள்ளச் சம்மதம் சொல்லியாச்சு. நானும் சரியென்று சொல்லி விட்டேன்.''

''யாரிடம் கேட்டுச் சரியென்று சொன்னாய்? நன்றிகெட்டவனே?''

''எதுக்காக உங்களிடம் கேட்கவேணும்? கட்டப் போகிறவன் நான். கொடுக்கப் போகிறவர் அவர். அப்படியிருக்க உங்களிடம் எதற்காகக் கேட்க வேண்டும்?''

''உனக்கு நான் இரண்டு வயல் தந்து குத்தகைச் சீட்டுக்கூட எழுதிக் கொடுக்காமல், வேண்டிய உதவி செய்யவில்லையா?''

''செய்தால்? அதற்காக எனக்கு நல்ல இடத்துப் பெண் வருகிற போது நான் மறுக்க வேண்டுமா என்ன?''

''அவன் உனக்குப் பெண் தருவதாக வாக்குக் கொடுத்திருந்தால், அது பொய். நமக்குள் பகையை வளர்க்க இது ஏற்பாடு.''

''அதைப்பற்றிக் கவலை இல்லை. அவரோட மருமகன் என்ற பெருமை எனக்கு வந்தால் என் கஷ்டம் விடிஞ்சு போகும்.''

''முழுக்க யோசித்துப் பார். உனக்கு அதை விட நல்ல இடத்தில் பெண் கட்டி வைக்கிறேன். சொத்தும் தருகிறேன். அவன் உறவு மட்டும் உனக்கு வேண்டாம்.''

''நாளைக்கு வருகிறேன், சித்தப்பா!''

செங்கோடன் போனவன் போனவனே. அவன் வரவில்லை. எப்படி வருவான்? அவனுக்குத்தான் வேலாயுத முதலியார் நன்றாகப் போதனை செய்து வைத்திருக்கிறாரே! அவன் வராது போகவே கூப்பிட்டு அனுப்பினார். வீட்டில் இருந்துகொண்டு 'வரமுடியாது. வேண்டுமானால் இங்கே வரச்சொல்' என்று சொல்லி விட்டான். தன் தமையன் பிள்ளை வீடுதானே என்பதற்காக நெல்லையப்ப முதலியார் அங்கே போனார். செங்கோடன் கொம்பில் முளைத்தவன் போன்று பேசினான். கொஞ்சம் ரோக்கம் அவன் கைவசம் கொடுக்கப்பட்டிருந்தது. பெண்ணும் தனக்கு வரப்போகிறது என்ற அகம்பாவம். சித்தப்பனை மதிக்கவில்லை. நிற்கவைத்துப் பேசினான்.

கெஞ்சியது அத்தனையும் வீண் போயிற்று.

''டேய்! உனக்குப் பெண்ணைத் தர மாட்டான். உன்னுடைய தயவினால் இந்த ஊரில் கலாட்டா செய்ய உன்னைக் கையாளாக விலைக்கு வாங்கப் பார்க்கிறான்.''

''என் குடும்ப விவகாரத்தில் நீங்கள் தலையிட வேண்டாம்.''

''சரி! பேசிக் கொள்ளுகிறேன்'' என்று கோபமாகப் போனார். அவர் தம்மையும் மறந்து குளத்தங்கரைப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தார். ஜிலுஜிலுவென்று காற்றடித்தும் பசுமையான பயிர்களைக் கண்டும் அவர் மனம் கொதிப்பு அடங்கவில்லை. பகவும்



கன்றுமாகப் பல விளையாடிக்கொண்டிருந்தன. அந்தச் சூழ்நிலையிலும் அவர் மனம் ஆறுதல் கொள்ளாமல் கொப்புளித்துக் கொண்டிருந்தது. தண்ணீருக்குள் காலைத் தொங்கப் போட்டபடியே மதகடியில் உட்கார்ந்திருந்தார். சின்னஞ்சிறிய மீன்கள் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. யாரோ வயலுக்குத் தண்ணீர் விலகும் போது தொலைவில் ஆனந்தமாகத் தெம்மாங்கு பாடிக் கொண்டிருந்தான். அவர் மனமோ செங்கோடன் தமக்குச் செய்து விட்ட துரோகம், எதிரிக்குக் கையாள் என்ற சிந்தனை வெடித்து எரிமலையாகக் கொந்தளித்தது.

ஆட்டுக்காரன் அருகாக உள்ள உடை மரத்தில் குழை அதக்கிப் போட்டுக் கொண்டிருந்தான். அவன் கையிலுள்ள அரிவாள் பளபள வென்று மின்னியது.

“டே, லே! வாடா இங்கே.”

பணக்கார முதலாளி கூப்பிடுகிறார். பயந்து கொண்டு போனான். அவன் கையிலுள்ள அரிவாளை எட்டிப் பிடுங்கினார். பையன் பயந்து போனான். அவர் மறுகணம் பித்தம் பிடித்தவராக வரப்பு வழியாக ஓடினார்; ஓடினார்; ஓடிக் கொண்டே இருந்தார்.

செவ்வாழையின் நிறம் விம்மிப் புடைத்து இன்னும் இரண்டு மூன்று வாரத்துக்குள்ளே அத்தனையும் பூவும் குலையுமாகத் தன்னும் பொதிப்பட்டம. அவருக்கு இருந்த ஆத்திரம் அனைத்தும் வாழைத் தோட்டத்தின் மீது பாய்ந்தது. ஒரு பக்கக் கன்று கூடப் பாக்கி இல்லாமல் அவ்வளவு பயிரையும் தரைமட்டமாக ஆக்கி விட்டார். எப்படித்தான் அசுர பலம் இருந்ததோ! அரைமணி நேரத்திலே பசுமை கொழித்த இடம் பாழ் நிலமாகக் காட்சியளித்தது.

அவர் வீட்டுக்குள் வந்து, “அன்னம்! நீ சொன்னது சரியாகப் போய்விட்டது. இந்தப் பயல் திமிர் அடங்கி விட்டது. இனி சோற்றுக்கு லாட்டரி” என்று தமது வெற்றியைப் பெருமிதத்துடன் சொன்னார்.

“போனால் போகிறான். அதற்கு வாழைக் கொல்லையை ஏன் வெட்டினீங்க?”

“அந்த மகசூல் அவனுக்குக் கிடைக்காது. கிடைக்கக் கூடாது. நமக்கு எதிரியாகப் போன வேலாயுத முதலியாரோடு இந்தப் பயலுக்கு என்ன உறவு?”

வழக்கும் வளர்ந்து கொண்டிருந்தது; செலவும் வலுத்துக் கொண்டிருந்தது.

செங்கோடனே தான் பயிரிட்ட வாழையைத் தன் அனுமதியின்றி நிலத்துக்குச் சொந்தக்காரர் நெல்லையப்ப முதலியார் அக்கிரமமாக வெட்டி விட்டார் என்று தாவா தொடர்ந்தான்; எதிரி மகசூல் நஷ்டம் ரூபாய் நாலாயிரம் தனக்குத் தரவேண்டுமென்று வழக்காடினான். நெல்லையப்ப முதலியார், ‘நிலமும் தமக்குச் சொந்தம். பயிரும் தமக்குச் சொந்தம். செங்கோடனுக்குக் குத்தகைச் சீட்டு கிடையாது. வழக்காடுவது பொய். என் எதிரியின் கையாளாக வாழைக் கொல்லையை அழித்து விட்டான்’ என்றார். நெல்லையப்ப முதலியாரிடம் மற்ற வயல்களுக்குக் குத்தகைச் சீட்டு இருந்தது; மற்றப் பண்ணையாட்கள் எழுதியும் கொடுத்திருந்தார்கள். செங்கோடனுக்கு இவ்வாறு இல்லாமற் போகவே வழக்கு கொஞ்சம் தொய்வு விழுந்தது.


வேலாயுத முதலியார் எதிர்பார்த்த முதல்வெற்றிக்கே தானம்போடவே, தமது கால்வாய் வெட்டுக்கும் கஷ்டம் வருமென்று எண்ணினார். ஆகவே பாதி விசாரணையில் விலகிக் கொண்டார். வக்கீல் பீஸ், சாட்சிகளின் செலவு என்று செங்கோடனுக்குக் கஷ்டம் வந்தது. போதாக்குறைக்கு வேலாயுத முதலியார் மகன் ஒரு கடிதம் எழுதியிருந்தான். அதுதான் எல்லாவற்றுக்கும் மேலாக விஷ ஊற்றாகப் போய் விட்டது.

திருவாளர் செங்கோடன் அவர்களுக்கு,

தாங்கள் என்னுடைய தகப்பனார் பேச்சைக்கேட்டுப் புதிய வம்புக்குப் போயிருக்கிறீர்கள். அதுவும் தங்களுக்கு நாலு வருஷங்களாக இனமாக அத்தனை மகசூலையும் எடுத்துக் கொள்ளச் சொன்ன சித்தப்பாவுக்கு விரோதமாகப் போய் விட்டீர்கள். தங்கள் தகப்பனாரும் வெட்டி வம்பு செய்து உங்கள் சித்தப்பாவை ஊரை விட்டுத் துரத்தியவர்கள் என்பதை என் தகப்பனாரே சொல்லக் கேள்வி. உங்கள் குடும்பத்தில் பிறருக்கு இடையூறு செய்வதே குடும்பத் தொழில்

பலே அம்பி!





பம்பாய் மின்சார இலாகாவைச் சேர்ந்த இன்ஜினியர் திரு. கே. எஸ். ராமு அவர்கள் குமாரர் சிரஞ்சீவி கிருஷ்ணன் டிஸம்பர் மாதம் 25-ந் தேதி அமெரிக்காவுக்குப் பயணமானார். நியூயார்க் ஹெரால்ட் டிரிப்யூன் பத்திரிகை நடத்தும் பள்ளிக்கூட மாணவர்களின் விவாத அரங்கில் கலந்து கொள்ள இவர் இந்தியாவின் சார்பாகச் சென்றிருக்கிறார். அவர் அமெரிக்காவில் தங்கியிருக்கும் மூன்று மாத காலத்தில் இந்திய மாணவர் சமூகத்தின் பெருமையை நிலைநாட்டுவார் என எதிர்பார்க்கிறோம்.

போதும் என்பது எனக்குத் தெரியும். நீங்களாகவே திருமணத்தை வேண்டாம் என்று சொல்லி விடுங்கள். நன்றி உடையவளாக இருப்பேன்.

— சரளா

கடிதம் வந்ததும் செங்கோடனுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. நேரே வேலாயுத முதலியாரிடம் எடுத்துக் கொண்டு போனான். அவர் இவனை வீட்டுக்குள் வர விடவில்லை. கடிதம் சம்பந்தமாகப் பேசுவதற்கு வந்ததாக எவ்வளவோ சொல்லியும் அவர் சிறிதும் முகம் கொடுக்கவில்லை.

செங்கோடன் தெருவில் நின்றபடியே இரைந்தான்; கண்டபடி திட்டினான்.

வேலாயுத முதலியார் வண்டிக்காரன் ஒருவன் செங்கோடனை நல்ல விதமாகத் தள்ளிக் கொண்டு ஊருக்கு வெளிப்பக்கம் விட்டான். மீண்டும் ஊருக்குள் திரும்பியபோது "இந்தா ஐயா நல்லபடியாகப் போய்ச் சேர். சரளாவின் அத்தான் வக்கீலுக்குப் படிக்கிறான். காதிலே விழுந்தா வந்து கட்டுப்போடுவான்" என்று எச்சரிக்கை செய்தான். செங்கோடனுக்கு உலகம் தெரிந்தது; வேலாயுத முதலியார் உள்ளம் தெரிந்தது.

*　　　*　　　*

நியாயஸ்தலத்தில் தீர்ப்பு வந்தது.

"நெல்லையப்ப முதலியாருக்குச் சொந்தமான வயலையும் பயிரையும் தனது என்று சொந்தம் கொண்டாடி மேற்படி பயிரை அழித்து நஷ்டம் உண்டாக்கியதற்காக நஷ்டஈடு ரூபாய ஐயாயிரமும், பயிர்பச்சைகளை அக்கிரமமாக அழித்ததற்காக ரூபாய் இரண்டாயிரமும் தவறினால் இரண்டுக்குமாக ஒரு வருடமும் இரண்டு வருடமும் ஜெயில் வாசம் அனுபவிக்க வேண்டும்."

தீர்ப்புச் சொன்னபோது செங்கோடன் பரிதாபமாகச் சிற்றப்பனைப் பார்த்தான். அவர் மனசில் இரக்கம் சுரந்தது. என்ன எண்ணினாரோ, எதிர்க்கட்சி வக்கீல் அருகில் போனார். ஏதோ பேசினார்.

"கனம் கோர்ட்டார் அவர்களே! என் கட்சிக்காரரை ஜாமீனில் விடுதலை செய்ய வேண்டும். அதற்குத் தாங்கள் மனசு வைக்க வேண்டும்" என்று கேட்டார் வக்கீல்.

"சரி."

"நானே ஜாமீன் கொடுக்கிறேன்" என்றார் நெல்லையப்ப முதலியார்.

"வாதிக்குப் பிரதிவாதி ஜாமீனா!" என்று கோர்ட்டார் சிரித்தனர்.

"தன் விரல் கண்ணைக் குத்தினால் வெட்டி விடுவதற்கு முடிகிறதா?" என்றார் நெல்லையப்ப முதலியார். ஜாமீன் சடங்குகள் எல்லாம் சம்பிரதாயப்படி ஆரம்பமாயின.

"அன்னம்மா யார் வந்திருக்கிறது பார்?"

அன்னம்மாள் வந்து பார்த்தாள். செங்கோடன் தலைகுனிந்தபடியே நின்றான். அவன் பார்வை பரிதாபமாக இருந்தது.

"எனக்கு நன்றாகத் தெரியும், இப்படி நடக்கும் என்று."

"எப்படித் தெரியும்?"

"அடிச்சுத் துரத்தின அண்ணனுக்கே நன்மை செய்த புத்தி, அவர் மகனுக்கும் நன்மை செய்யும். ஒருவர் மனம் என்றைக்கு நல்லபடியாக நடுநிலைமையிலே நின்றதோ அது கடைசி வரைக்கும் அப்படித்தான் இருக்கும். அதேபோல, ஒருவர் மனம் கெட்ட வழியிலே போனால், சந்தர்ப்பம் கிடைக்கும் போது அது கெட்ட வழியிலே போகும்."

"பெரிய தத்துவம் பேசுகிறாயே. நானே வாழைக் கொல்லையை நாசமாக்கி விட்டு, இவன்தான் நாசமாக்கினான் என்று வழக்காடி ஜெயித்து விட்டால் அது நியாயமாகுமா? என் தவறுக்கு இவன் ஜெயிலில் இருக்கவா?"

அன்னம்மாள் பதில் பேசாது அங்கிருந்து நகர ஆரம்பித்தபோது, செங்கோடன் அவள் காலைப் பற்றிக் கொண்டு மன்னிப்பு கேட்டான். "சிறுபிள்ளைத்தனமாக ஏதேதோ செய்து விட்டேன். பணத்தாசை என்னைப் பிடித்துக் கொண்டது. வேலாயுத முதலியாரையும் அவர் பெண்ணையும் நம்பி ஏமாந்தேன். எனக்கு உங்களைத் தவிர வேறு யாரும் இல்லை. என்னை மன்னிப்பீர்களா?" என்று கேட்டான். அவள் மனமும் இரங்கியது.

"நடந்ததை மறந்து விட்டேன், செங்கோடா! எழுந்திரு" என்று தாய்மைப் பாசத்தோடு சொன்னாள் அன்னம்மாள்.

"நான்தான் முட்டாள், செங்கோடனுக்கு நன்மை செய்து வந்திட்டேன். நீ இப்போ இந்த வார்த்தை சொல்லலாமா?" என்று கேட்டார் நெல்லையப்ப முதலியார்.

"பூவோடு சேர்ந்த நாருக்கு என்ன தெரியும்?" என்றாள் அன்னம்மாள்.

"பூப்போல இருக்கத் தெரியும்!" என்று சிரித்தார் நெல்லையப்ப முதலியார்.





பர்மாவின் தலைநகரான ரங்கூனில் அகில பர்மா தமிழர் சங்க ஆதரவில் தமிழர் திருநாள் கொண்டாடப்பட்டது. விழாவுக்கு, பர்மாப் பிரதமர் ஊ நு தலைமைவகித்தார்.
1. தலைவருக்கு விழாப் பந்தலில் தமிழ்ப் பெண்மணிகள் ஆரத்தி எடுக்கின்றனர்.
2. தமிழ்த்திருநாளில் பொன்னாடையுடன் சொற்பொழிவாற்றுகிறார் பிரதமர் ஊ நு.







மணவழகர் மன்றத்தினர் சென்னை கோகலே மன்றத்தில் ஜனவரி 15 முதல் 19ம் நாள் வரை தமிழ்விழாக் கொண்டாடினர். 3. மன்றக் காரியதரிசி திரு சிறுவை மோகனசுந்தரம் தலைவரை வரவேற்க மன்ற நிர்வாகிகளுடன் நிற்கிறார். 4. திரு ரா.பி. சேதுப் பிள்ளை பேசுகிறார்.

5. சமீபத்தில் நாகர்கோவிலில் கன்யாகுமரி மாவட்டத் தமிழ் எழுத்தாளர் சங்கம், திரு ப. தாணுலிங்க நாடார் எம். பி. அவர்கள் தலைமையில் துவங்கியது.

குமாரி ஸரஸா

ப. ராதாகிருஷ்ணன்

முனுசாமியைக் குறை சொல்லிப் பயன் இல்லை; அவன் வயிற்றைப் பிசைந்து கொண்டிருந்த பொல்லாத பசியின் குற்றம் அது. குமாஸ்தா ராஜாராமனுக்காகத் தெர்மாஸ் பிளாஸ்கில் சூடான காப்பியுடன் ஹோட்டலிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தான். "ஒரே ஒரு வாய்க் காப்பி. இப்போதைக்கு அது போதும்" என்று வழியெல்லாம் வயிறு கெஞ்சியது. பசியும் மனச்சாட்சியும் போராடத் தொடங்கின. இறுதியில் பசி வென்றது.

காரியாலயத்தின் மாடிப்படிக்கட்டின் அடியில் இருண்ட, தனிமையான ஓரிடம். அங்கு மறைந்து கொண்டு பிளாஸ்கின் மூடியைத் திறந்தான் முனுசாமி.

அவன் ஊற்றிக் கொண்டது ஒரே ஒரு வாய் தான். ஆனால் அந்த வாய் சற்றுச் சிறியதாயிராத காரணத்தால் பிளாஸ்க் அநேகமாகக் காலியாகி விட்டது. முனுசாமி விழித்தான். சற்று முன் வயிற்றைக் கிள்ளிய பசி இப்போது சற்றுத் தணிந்ததும் கவலை வந்து அவன் நெஞ்சைக் கசக்கத் தொடங்கி விட்டது. காப்பிக்குக் காசு கொடுத்து அனுப்பிய ராஜாராமன் முகத்தில் எப்படி விழிப்பது? அவனுக்கு என்ன பதில் சொல்வது? குழப்பத்துடன் மாடியேறினான்.

"என்னடா உளறுகிறாய்? பிளாஸ்கிலிருந்த காப்பி எப்படிக் கீழே சிந்தும்?" என்று ராஜாராமன் அதட்டினான். காப்பியில்லாவிட்டால் அவனுக்கு ஒரு வேலையும் ஓடுவதில்லை.

"ஏதோ ஆகிவிட்டது, சார்!" என்றான் முனுசாமி ஈனஸ்வரத்தில். இதற்குமேல் அவனது கற்பனா சக்தி வழிகாட்டவில்லை. ராஜா பைக்குள் கையை விட்டுத் துழாவிப் பார்த்தான். இன்னொரு கப் காப்பிக்கு அங்கே சில்லறையைக் காணோம்.

"என்னிடம் இருந்த இரண்டணாவையும் வாங்கிக் கொண்டு போய் என் தலையில் கல்லைப் போட்டு விட்டாயோ, இல்லையோ? சரி, தொலை" என்று அலுப்புடன் கூறியபடி திரும்பினான். கணப்பொழுதில் அவனுடைய கண்கள் வியப்பினால் மலர்ந்துவிட்டன.

அள்ளிச் செருகிய கூந்தலுடன் ஓர் அழகுத் தேவதைபோல் அவன் மேஜையருகே நின்றாள் குமாரி சரஸா. அவள் கரத்தில் இன்னொரு பிளாஸ்க் - அவளது சொந்தப் பிளாஸ்க் - காணப்பட்டது. "இதிலிருக்கும் காப்பியை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள், மிஸ்டர் ராஜாராமன்!" என்று ஓர் மோகன முறுவலுடன் அதை அவனிடம் நீட்டினாள்.

மானேஜரின் காரியதரிசி அவள். ராஜாராமனுக்கும் முனுசாமிக்குமிடையே நடந்த சம்பாஷணையை அறையினுள் இருந்தபடி கேட்டு விட்டுத்தான் அவள் அவனுக்கு உதவ விரைந்திருக்க வேண்டும்! அதிலும் சரஸா அவனுடன் பேசுவது இதுவே முதல் தடவை!

"அடடா! காப்பியை எனக்குக் கொடுத்து விட்டால் அப்புறம் நீங்கள்..." என்று தொடங்கினான் ராஜாராமன். சுபாவத்தில் சங்கோசியான அவனுக்குச் சற்றுக் கூச்சமாகவே இருந்தது.

"அதனால் பரவாயில்லை. உங்களுக்குக் காப்பி எவ்வளவு இன்றியமையாததென்று எனக்குத் தெரியும்" என்ற சரஸா கண்ணாடி தம்ளரில் பிளாஸ்கைக் கவிழ்த்தாள். அவளுடைய பொற்கரத்தையும் தளிர்விரல்களையும் கண்ணிமைக்காது நோக்கினான் அவன். அந்தப் பானம் அவன் நாவில் தேவாமிருதம் போல் ருசித்தது. இடையே ஓர் பெரும் வியப்பு. காப்பி விஷயத்தில் தன் பலவீனத்தைப் பற்றி இவள் எப்படித் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறாள்?

"மெத்த வந்தனம் அம்மா!" என்றபடி அவன் காலி தம்ளரைக் கீழே வைத்தான். அவள் இன்னொரு புன்னகையுடன் தலையசைத்து விட்டுப் பிளாஸ்கின் மூடியைத் திருகத் தொடங்கினாள்.

அப்போதுதான் காரியாலயத்துக்கு வந்து சேர்ந்திருந்த மானேஜர் விசுவநாதன் அவர்கள் இருவரையும் விறைத்துப் பார்த்துக் கொண்டு சென்றார். அதை அவர்கள் கவனிக்கவில்லை.

* * *

ஆரம்பத்திலிருந்தே மானேஜர் விசுவநாதனுக்குக் குமாஸ்தா ராஜாராமனைப் பிடிக்காது போயிற்று. அவனது இளம் வயதும் கவர்ச்சிகரமான தோற்றமும் அவர் இதயத்தில் பொறாமைக் கனலை மூட்டி வளர்த்தனவோ, என்னவோ! 'வேண்டாத பெண்டாட்டி கைபட்டால் குற்றம், கால்பட்டால் குற்றம்' என்ற விதமாக அவனை நடத்தி வந்தார். ஆனால் அவன் காட்டி வந்த பொறுமையோ...!

"மானேஜர் ஐயா கூப்பிடுகிறாங்க" என்று சேவகன் வந்து சொன்னதும் ராஜாராமன் நிதானமாகக் கிளம்பினான். அவனது சக பாடிகள் தத்தம் கைவேலையை அப்படி அப்படியே போட்டு விட்டு மானேஜர் அறையினுள் நடப்பதை ஒட்டுக் கேட்கச் சித்தமாயினர். பலிபீடத்துக்கு இட்டுச் செல்லப்படும் ஆட்டின் தயக்கம் ராஜாராமனது நடையில் இல்லை. ஏனென்றால் மானேஜரின் உருட்டல் மிரட்டல்களெல்லாம் அவனுக்குப் பழகிப் போன விஷயங்கள்.


"என்ன ஐயா ராஜாராமன், நீர் இன்று எத்தனை மணிக்கு ஆபீசுக்கு வந்தீர்?" என்று கடுகடுத்த முகத்துடன் முதல் கேள்வியைப் போட்டார் விசுவநாதன்.

"ஒன்பதரை மணிக்கு வந்தேன், ஸார்!" என்று பதில் சொன்னான் ராஜாராமன்.

"பத்துமணிக்குத்தானே ஆபீஸ் தொடங்குகிறது. நீர் எதற்காக முன்னால் வரவேண்டும்?" என்று ஓநாய் ஆட்டுக்குட்டியிடம் முறைத்தது.

"சிறிது வேலை பாக்கி விழுந்து விட்டது, ஸார்! அதை முடித்து விடலாமென்றுதான் வந்தேன்..." என்றான் ராஜாராமன்.

''ஏன், பாக்கி விழும்படி வைத்துக் கொள்வானேன்? இதிலிருந்தே உமது சோம்பேறித்தனம் வெட்ட வெளிச்சமாகத் தெரியவில்லையா? சரி, அப்படியே சிக்கிரமாக வந்தீர். வந்த வேலையைக் கவனிக்காமல் கவனிப்பதை விட்டுச் செப்பந்திகளோடு என்ன வம்புப் பேச்சு? அதுவும் ஸ்திரீ ஊழியர்களிடத்தில்?...'' அருகே இன்னொரு மேஜையடியில் அமர்ந்து 'டைப்' செய்து கொண்டிருந்த சரஸாவின் பக்கம் ஒரு பார்வையை வீசினார் அந்த மஹானுபாவன். இது சரஸாவுக்கே ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டுமென்பது அவர் கருத்து. ராஜாராமன் திடுக்கிட்டான். ஆனால் அவன் முகத்தோற்றத்தில் மாறுதல் எதுவும் காணோம். மெல்ல மேஜையை விட்டெழுந்து வந்தவள் மானேஜரை நோக்கி, ''ஸார்! தவறு அவருடையதல்ல. நானேதான் வலியச் சென்று அவரிடம் பேசினேன்'' என்றாள்.



பெரியவர் உடனே அடங்கி விட்டார். ''ஓ அப்படியா?'' என்ற இரண்டே வார்த்தைகள் தான் அவரால் பேச முடிந்தது. ஆயினும் அவரது முகத்தோற்றத்தில் அதிருப்தி நிரவிக் கிடந்தது. சரஸா தன் மேஜைக்குத் திரும்பினாள். அவளது துணிச்சல் அவரைக் கலக்கி விட்டது போலவே ராஜாராமனையும் தான் பிரமிக்க வைத்துவிட்டது.

அடுத்தாற்போல மேஜை டிராயரிலிருந்து ஓர் பெரிய காகிதக்கட்டை வெளியில் எடுத்தார் விசுவநாதன். அதைப் பார்க்கும்போதே ராஜாராமனின் வயிற்றில் புளியைக் கரைத்தாற்போல ஒரு உணர்ச்சி. ஆயிரம் திட்டுக்களை வாங்கிக் கட்டிக் கொள்வது ஒரு பிரமாதமல்ல. ஆனால் இந்த மானேஜர் சிக்கலான வேலைகளையெல்லாம் தன் தலைமீது சுமத்திவிடுவதுதான் அவனுக்குப் பிராணவஸ்தையாக இருந்தது.

''இந்த 'ஸ்டேட்மெண்ட்'டைப் பூர்த்தி செய்து நாளைக் காலையில் என்னிடம் தர வேண்டும். தெரிந்ததா?'' என்று கட்டை நீட்டினார் அவர். அவன் அதை வாங்கிப் பார்த்தான். எதிர்பார்த்தபடியே அது தலைகால் புரியாத விஷயமாகத்தான் இருந்தது.

* * *

விசுவநாதனுக்கு வேலையே ஓடவில்லை. ராஜாராமன் கையில் காகிதக் கட்டை ஒப்படைத்து அனுப்பிய பிறகு அவர் மனத்தில்

பலவிதமான சம்சயங்களும் அச்சங்களும் நிழலாடத் தொடங்கின. கருமமே கண்ணாயிருந்த சரளாவைத் தம் விழிகளின் ஓரத்தால் பார்த்தார். அவளது அபூர்வ லாவண்யத்தைப் பார்வையால் அள்ளிப் பருகினார். டைப் மெஷின்மீது ஓடும் அத்தளிர் விரல்கள் அவர் உள்ளத்திலும் நர்த்தனம் செய்து இனிய நாதங்களை எழுப்பின.

நீண்டதொரு பெருமூச்சு அவர் நெஞ்சின் ஆழத்திலின்று எழுந்தது. ''இவளை நான் என் வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றால்...'' என்ற ஆசையின் விளைவு அது.

விசுவநாதன் தாரம் இழந்தவர். இப்போது அவருக்கு வயது நாற்பது இருக்கலாம். முதல் மனைவி காலமாகிய பின் இந்தப் பத்து வருஷங்களை 'மறுமணம் வேண்டாம்' என்ற விரக்தியோடு கழித்து விட்டார். ஆறு மாதங்களுக்கு முன் இந்த ஸ்தாபனத்தின் மானேஜராக நியமனப் பொறுப்பேற்றதுமே அவரது உறுதி ஆட்டங் கண்டு விட்டது.

காரணம்—கட்டழகி சரளாதான் என்பது கூறாமலே விளங்கும்.

அவள் ஏழை. வயது சென்ற பெற்றோருக்கு ஆதரவு தருவதற்காகத் தான் உழைத்து வருகிறாள் என்பது அவருக்குத் தெரியும். அவளது இந்த வறுமை நிலையைப் பயன்படுத்திக் கொண்டு இருமணப் பேச்சு தொடங்கி வெற்றி பெறுவது கடினமல்ல. ஆயிரம் ரூபாய் சம்பளக்காரன் மாப்பிள்ளையாக வருவதென்றால் அப் பெற்றோர் வேண்டாமென்று மறுப்பார்களா, என்ன? ஆனால் அவளது சொந்த விருப்பம் எப்படியிருக்குமோ என்று தான் இத்தனை காலம் தயங்கிக் கொண்டிருந்தார் விசுவநாதன்.

இனியும்தயங்குவது உசிதமல்ல என்று இப்போது அவருக்குப் பட்டது. காலையில் சரளா ராஜாராமனோடு சிரித்துப் பேசிக் கொண்டிருந்தகாட்சி; சற்று முன் துணிந்து முன் வந்து உண்மையை தானே ஒப்புக்கொண்ட செய்கை —இவை நல்ல சூசனைகளாகத் தோன்றவில்லை. இவர்கள் இருவரும் இளம் பிராயத்தினர். தோற்றத்திலும் நல்ல பொருத்தமான ஜோடி. இந்த நட்பு முதிர்ந்து விட்டால் பிறகு தம் ஆசைக் கோட்டைகளெல்லாம் வெறும் பகற்கனவாய் முடியும் என்ற உணர்வு அவரை ஓர் முடிவுக்கு வரச்செய்தது.

அன்று மாலை சற்றுத் தாமதமாக வீடுசென்ற சரளா, தெருவில் நுழையும் போதே தன் வீட்டெதிரேயிருந்து கிளம்பிக் கொண்டிருந்த விசுவநாதனின் காரைக் கண்டு விட்டாள். அது தன்னைத் தாண்டிச் செல்லும் வரையில் ஓர் சந்தில் பதுங்கிக் கொண்டு அவர் கண்களுக்குப் படாமல் தப்பினாள். விசுவநாதனின் உண்மை நோக்கம்பற்றி ஏற்கெனவே அவளுக்குச் சந்தேகம் இருந்தது. எனவே இன்று தன் வீட்டுக்கு அவர் வந்து போனது பற்றி அவள் அதிசயப்படவில்லை.

'என்னநேர்ந்தாலும் மனிதத் தன்மையற்ற இவரை மணப்பதில்லை' என்ற உறுதி அவள் உள்ளத்தே தலை தூக்கி நின்றது.





ராஜாராமனை ஏற இறங்கப் பார்த்தார் விசுவநாதன். ''என்ன! அதற்குள் வேலையை முடித்து விட்டாயா?'' என்ற அவரது கேள்வியில் அவநம்பிக்கையும் ஏமாற்றமும் தொனித்தன. வேலை முடியாதிருந்தால் தானே அவனைத் திட்ட முடியும்?

''வேலை முடிந்து எல்லாம் தபாலுக்குச் சித்தமாயிருக்கின்றன, ஸார்!'' என்று ராஜா ராமன் ஸ்டேட்மெண்டை நீட்டினான். அவன் உள்ளம் மாத்திரம் அச்சத்தால் 'திக்திக்' என்று அடித்துக் கொண்டிருந்தது.

''ராஜாராம்! என்ன வேடிக்கை இது? பாதிக்கு மேல் உம் கையெழுத்தில் இல்லையே. வேறு யார் உமக்கு உதவி செய்தது?''

''ஏன், நான்தான்'' என்றாள் சரளா.

விசுவநாதன் திடுக்கிட்டுப் போனார். ஏது, இவள் துணிவுக்கு எல்லையே இராது போல் இருக்கிறதே!

''நான் உன்னை அவனுக்கு உதவச் சொல்ல வில்லையே...?'' என்றார் சமாளித்துக்கொண்டு.

''நீங்கள் சொல்லாவிட்டால் என்ன? ஆபீஸ் நேரத்துக்கு வெளியே நானாகத்தான் உதவினேன். அதில் என்ன தவறு? உங்களுக்கு வேலைதானே முக்கியம்?''

இந்தக் கேள்விகளுக்கு விசுவநாதனால் பதில் சொல்ல முடியவில்லை. மேலும் தற்சமயம் சரளாவுடன் தர்க்கம் செய்யும் விருப்பமும் அவருக்குக் கிடையாது. ஏதோ சொல்லிச் சிரித்து மழுப்பினார். ராஜாராமனை அனுப்பினார். அவரும் சரளாவும் தனியாயினர்.

மௌனமாகத் தன் வேலையைத் தொடங்க இருந்தாள் அவள். குழைந்த குரலில், ''சரளா!'' என்று அழைத்தார் விசுவநாதன்.

''என்ன ஸார்!'' என்று உணர்ச்சியற்ற குரலில் பதில் வந்தது.

''நேற்று மாலை நான் உன் வீட்டுக்கு வந்திருந்தேனே, அதைப்பற்றி உன் பெற்றோர்கள் சொன்னார்களோ?''

''சொன்னார்கள்.''

''அவர்கள் விருப்பப்படி எதுவும் நடத்துவதற்கில்லை. உன் சம்மதந்தான் முக்கியம் என்று உன் அப்பா தெரிவித்தார். நீ என்ன சொல்லுகிறாய்? என்னை மணக்க உனக்கு விருப்பமுண்டா?''

''இல்லை ஸார்!''

''எனக்குத் தெரியும். இந்தப் போக்கிரி ராஜாராமன்......'' என்று ஆத்திரத்தோடு ஆரம்பித்தவரைக் குறுக்கிட்டாள் சரளா:

''ஸார்! அது எப்படியேனும், யாராக வேணும் இருந்து விட்டுப் போகட்டுமே? உங்களுக்கு ஏன் கவலை?''

விசுவநாதனின் முகம் சிவந்தது. சாதாரணமாகவே ரத்தக்கொதிப்பு வியாதியுள்ளவர் அவர். பல காலமாகக் கட்டிவந்த மனக் கோட்டைகள் பெயர்ந்து தரைமட்டமானதும் அவர் அதிர்ச்சியடைந்துவிட்டார்.

முதற் காட்சி சினிமா பார்த்து விட்டுக் காரைத் தாமே ஓட்டிக்கொண்டு வீடு திரும்பியபோது ஆபீஸில் பூர்த்தி செய்யாது விட்டு வந்த ஓர் முக்கிய அலுவல் விசுவநாதனுக்கு நினைவு வந்தது. வண்டியைத் திருப்பிக் கொண்டு அங்கு சென்றார். மானேஜர் என்ற ஹோதாவில் காரியாலயத்தின் வெளிச்சாவி அவர் வசம் இருந்தது. தம் அறையில் சில நிமிஷங்கள் தங்கி அலுவலை முடித்துக் கொண்ட பின் வெளியே நடந்தார். ராஜா ராமனது மேஜையைத் தாண்டிச் செல்லும் போது காலில் ஏதோ தட்டுப்பட்டது. அவர் குனிந்து நோக்கினார். பளபளவென்று மின்னியது அந்த இரும்புப் பெட்டியின் சாவி!

காரியாலயத்தின் பணம் கொடுக்கல்-வாங்கல் பொறுப்பு ராஜாராமனிடம் ஒப் படைக்கப் பட்டிருந்தது. மிகத் தொல்லை பிடித்த, ஆபத்தான வேலையென்று கண்டு தான் அதை அவன் தலைமீது கட்டியிருந்தார் விசுவநாதன். இன்று அவன் சற்று அஜாக்கிரதையாகச் சாவியை இங்கே நழுவ விட்டுப் போயிருக்கிறான். இதைவிட நல்லதொரு வாய்ப்பு வேண்டுமா? அவரது மூளை துரிதமாக வேலை செய்தது. சாவியைப் பொறுக்கினார்; இரும்புப் பெட்டியைத் திறந்தார். அடுக்காக வைத்திருந்த நோட்டுக் கற்றைகள் தரிசனம் தந்தன. கூசாமல் அவற்றை வாரித் தம் கைக்குட்டையில் கட்டிக் கொண்டார்.

ஒரே நிமிஷ வேலை! 'தொலைத்தேன் அவனை' என்று அவர்உள்ளம் ஆர்ப்பரித்தது. மீண்டும் கதவைப் பூட்டிச் சாவியை அது கிடந்த இடத்திலேயே போட்டார்.

கார் பறந்தது. வேண்டுமென்றே சுற்று வழியில் மெரினா ரோட்டில் செலுத்தினார். கடற்காற்று ஜிலுஜிலுவென்று வீசி அவர் உடலைக் குளிர்வித்தது. அவர் மனக்கண் முன்பாகச் சில காட்சிகள் ஓடின.

போலீஸார் ராஜாராமன் கரங்களில் விலங்கு பூட்டுகிறார்கள். சரளா தன் ஆசைக் காதலனுக்கு நேர்ந்த துர்க்கதியைக் கண்டு கலங்கிக் கண்ணீர் வடிக்கிறாள். இறுதியில் விசுவநாதனிடமே சரண் புகுகிறாள். தம்மை மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறாள்..

''ஏய், வண்டியை நிறுத்து'' என்றது ஓர் அதிகாரக் குரல். பதறிக் கொண்டு பிரேக் போட்டார் விசுவநாதன். தன் கழுத்தில் கைகளை ஊன்றிய வண்ணம் பின் சீட்டின் புறம் ஓர் உருவம் நிற்பது தவிர அவருக்கு வேறொன்றும் தெரியவில்லை.

''திரும்பிப் பார்க்காதே. அந்த மூட்டையை இப்படிக் கொடு.''

நிர்மானுஷ்யமான மெரீனாவின் இருண்ட ஓர் பகுதி. இந்தப் பயங்கர மனிதன் எப்போது வண்டியில் ஏறி ஒளிந்து கொண்டானோ, தெரியவில்லை.

பரம கோழையான அவர் நடுக்கத்துடன் நீட்டிய மூட்டையை அவன் வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டான். கதவைத் திறந்து கொண்டு வெளியே குதித்தவன் கணப்பொழுதில் இருளோடு இருளாக மறைந்துவிட்டான்.

'இந்தப் பணம் பறி போனால் பரவாயில்லை. ராஜாராமனைச் சூழ்ந்திருக்கும் ஆபத்து விலகி விடப் போகிறதா, என்ன?'' என்று தம்மைத் தாமே சமாதானம் செய்துகொண்டு புறப்பட்டார் அவர்.

* * *

கழுத்தை அறுத்து விட்டுக் கை கழுவும் தோரணையில் பேசினார் விசுவநாதன்.

''மிஸ்டர் ராஜாராமன்! உங்களது உண்மைக் குணத்தைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. நாம் இருவரும் சொற்பக் காலந்தான் பழகி யிருக்கிறோம். நேற்று மாலை கணக்குப் பார்த்தபோது பணம் சரியாக இருந்தது என்கிறீர்கள். இன்று காலைக்குள் இரண்டாயிரம் ரூபாய் எப்படி மறையும்? சாவியை ஆபீஸிலேயே நழுவ விட்டதாகச் சொல்கிறீர்கள். இதில் எனக்கு நம்பிக்கையில்லை. யார்தான் நம்புவார்கள்? நாளை கோர்ட்டில் இந்தப் பதிலைச் சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியும் என்று நினைக்கிறீர்களா?'' என்றார்.

ராஜாராமன் பேசாதிருந்தான். ஆனால் இந்த வார்த்தைகளைக் கேட்டுப் பேதை சரளாவின் இதயம் துடித்ததுடிப்பு! 'கோர்ட்' என்ற அந்த ஒரு வார்த்தையின் பயங்கரமே போதாதா? அடுத்து வருவது—சிறை! விசுவநாதன் சொல்லாமலேயே தனது ஆசைக் காதலனின் விதியை அவளால் புரிந்துகொள்வதற்கு முடிந்தது.

ஆனால், இது என்ன! இவர் எப்படிக் கவலையையே அதிகம் காட்டிக் கொள்ளாமல் கல்லுளிமங்கன் போல் உட்கார்ந்திருக்கிறார்! நிலைமையின் கடுமை முழுவதும் இவருக்கு விளங்கவில்லையா என்ன?

இதோ, முதலாளி வந்துகொண்டிருக்கிறார்! சாதாரணமாக அவர் காரியாலயத்துக்கு வருவதில்லை. இன்று ராஜாராமன் பணத்தைக் கையாடிய விஷயம் 'போனி'ல் அவருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஓர் மூலையில் நின்றபடி கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த சரளாவை விசுவநாதன் கவனித்துக் கொண்டுதானிருந்தார். 'நன்றாய் வேண்டும் உனக்கு' என்று அவர் மனம் கறுவியவாறு இருந்தது.

முதலாளி நிதானமாக விவரங்களைக் கேட்க ஆரம்பித்தார்: ''என்னப்பா ராஜாராமா! உன்னை ரொம்ப நல்ல பிள்ளை என்று நினைத்திருந்தேனே. இப்படிச் செய்துவிட்டாயே?'' என்றார் அவனை நோக்கி. அவரது பெருந்தன்மை அங்கு பிரசித்தமானது. ஆனாலும்?...

''ஏதோ நிலைமையின் நிர்ப்பந்தம் அப்படி இருந்தது; குற்றம் செய்துவிட்டேன் சார். எப்படி இஷ்டமோ அப்படி என்னைத் தண்டித்துக் கொள்ளுங்கள்'' என்றான் அவன். சரளாவுக்கு இன்னுமோர் அதிர்ச்சி ஏற்பட்டது. இதுவரையில் தமக்கு ஒன்றுமே தெரியாது என்று சாதித்தவர் இப்போது குற்றத்தை ஒப்புக் கொள்கிறாரே! அப்படியானால்...

''மிஸ்டர் விசுவநாதன்! என்ன செய்யலாம் இப்போது?'' என்றார் முதலாளி.

''செய்வதென்ன? இரும்புக்காப்பு மாட்ட வேண்டியதுதான். குற்றம் சாதாரணக் குற்றமா?'' என்று கூறிப் போனைக் கையில் எடுத்தார் விசுவநாதன்.

''சற்றுப் பொறுங்கள். போலீஸ் வந்து உங்கள் கையிலும் விலங்கு பூட்ட வேண்டியிருந்தால்?... ..''

விசுவநாதன் பதறி விட்டார். ''ஏன்? எதற்கு?'' என்று உளறினார்.

''நீங்கள்தானே நேற்றிரவு இங்கு வந்து அந்த இரண்டாயிரம் ரூபாயைக் கிளப்பிக் கொண்டு போனது?'' என்றார் முதலாளி.

''என்ன விளையாட்டு இது. அவன் தான் தன் குற்றத்தை ஒப்புக்கொள்கிறானே, சார்!''

''அது வேறு குற்றத்தை. இந்தப் பணத்தை நீர் அமுக்கிக் கொண்டு போகும்போது மெரீனா ரோட்டில் உம்மை மிரட்டி அதைப் பிடுங்கிக் கொண்ட குற்றம். இப்போது விளங்கிற்றா?'' என்று கூறி, ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய அந்தக் கைக்குட்டையை எடுத்துப் போட்டார்.

விசுவநாதன் வாயடைத்துப் போனார். இத்தகைய பயங்கர வெடிகுண்டை அவர் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்?

முதலாளி தொடர்ந்து சொன்னார். ''சட்டைப் பையில் இரும்புப் பெட்டியின் சாவியைக் காணாமல் தான் அதைத் தேடிக் கொண்டு ராஜாராமன் ஆபீஸ் பக்கம் வந்தான். நீர் காரில் வந்திறங்கி உள்ளே போனதையும் அடுத்தாற் போலச் செய்த அக்கிரமச் செயல்களையும் ஜன்னல்மூலம் கவனித்தான். அந்தச் சமயத்தில் தனக்குத் தோன்றிய விதமாகச் செய்தான். அதில் தவறொன்றுமில்லை. இன்று காலை என்னிடம் வந்து எல்லா விஷயங்களையும் சொன்னான். நானும் அவனுமாகச் சேர்ந்து இந்தக் குட்டி நாடகம் நடிக்க வேண்டியதாயிற்று.

''மிஸ்டர் விசுவநாதன்! இந்த வாலிபன் மீது நீர் அநியாயமான முறையில் பழி வாங்க முயன்றிருக்கிறீர். உங்கள் பகையின் காரணமும் எனக்குத் தெரிந்ததுதான். அந்தச் சூழ்ச்சி பலித்திருந்தால் அநியாயமாகச் சிறைக்குள் தள்ளப்பட்டிருப்பான் இவன். அந்தப் பாவத்தில் எனக்கும் பங்கு உண்டு. ஏனென்றால் உம்மைப் போன்ற ஒரு வஞ்சக மனிதரை இந்தப் பதவியில் அமர்த்தியது நானேதானல்லவா?

''இத் தவறுக்குப் பிராயச்சித்தமாக இப்போது உம்மைப் பதவியிலிருந்து விலக்குகிறேன். அதே பதவியை நிரபராதியான ராஜாராமனுக்கு அளிக்கிறேன்.''

அங்கு கூடியிருந்த சிப்பந்திகள் கரகோஷம் செய்யாத குறையாகத் தத்தம் மகிழ்ச்சியைக் காட்டினர். அனைவரிலும் அதிக மகிழ்ச்சியுற்றது சரளாதான் என்பதைக் கூறத் தேவையில்லையே!


மழமழப்பான
சுகமான
க்ஷவரத்திற்கு...
வாழ்வில் வெற்றி கண்டவர்கள் வேறெந்த தயாரிப்பையும்
நாடாமல்
பாமாலிவ்
ஷேவிங் க்ரீமைத்தான் உபயோகிக்கிறார்கள்
PALMOLIVE
BRUSHLESS
PALMOLIVE
LATHER
நுரையுடனோ அல்லது பிரஷ் இல்லாமையோ நீங்களே தேர்ந்தெடுங்கள்
பாமாலிவ் என்றாலே உயர்ந்த ரகம்!


ஆரோக்கியம் அளிப்பவை
அனைவரும் விரும்புபவை
TSR
ஊறுகாய்கள் : எலுமிச்சை, மாங்காய்
மற்றும் கதம்ப காய்கறி ஊறுகாய்கள்
ரோஜாப்பூ குல்கந்து
ASSORTED
VEGETABLE
PICKLES
T.S.R & CO.
டி. எஸ். ஆர். & கோ
வாசனைத் திரவியங்கள் தயாரிப்பவர்கள்
கும்பகோணம் (S. India)

தமிழ் கூறும் நல்லுலகம்

ஹைதராபாத் பாரதி சங்கத்தி லும் பொங்கல் தினம் ஹிமாயத் நகரில் கே. என். அனந்தராமன் ஐ. ஸி. எஸ். அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. திரு எம். ஜே. சுப்பிரமணியம் ஒரு அருஞ் சொற்பொழிவாற்றினார். அதை அடுத்து நடந்த முத்துலக்ஷ்மி மாதவன் இசை விருந்தையும் மக்கள் பெரிதும் விரும்பி ரசித்தனர்.

★

காசி இந்து சர்வகலாசாலையில் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் சங்கத் தலைவர் டாக்டர் விசுவநாதன் அவர்கள் தலைமையில் பொங்கல் விழா மிகவும் சிறப்பாக 14-1-58 ல் கொண்டாடப்பட்டது. சுமார் இருநூறு தமிழர்கள் பங்கு கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். அச்சமயம் பலவித சங்கீத நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. சொற்பொழிவுப் போட்டியும் சங்கீதப் போட்டியும் விமரிசையாக நடைபெற்றன. சங்கச் செயலாளர் நன்றி கூறலுடன் எல்லோருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது.

★

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஜபல்பூர் நடிகர்கள் சங்கத்தினர் '' காலச் சுழல் '' என்னும் தமிழ் சமூக நாடகத்தை 14-1-58 அன்று மாலை ஆறு மணிக்குத் தேபேந்திர வங்காளி கிளப்பில் சிறப்பாக நடித்தனர். அதுசமயம் மேற்படி சங்கத்தின் காரியதரிசி டி.எம். இராகவலு அவர்கள் ஜபல்பூரில் இருக்கும் தமிழர்கள் அனைவரும் வருடா வருடம் வரும் பொங்கல் விழாவைச் சிறப்பாக நடத்துமாறு கேட்டுக் கொண்டு, வந்தனோபசாரம் கூறி, நாடகத்தை முடித்து வைத்தார்.

★

தில்லித் தமிழ் மக்கள் பொங்கல் திருநாளை விஞ்ஞான மேதை டாக்டர் கே. எஸ். கிருஷ்ணனின் தலைமையில் வெகு கோலாகலமாகக் கொண்டாடினார்கள். தில்லித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நடந்த இவ்விழாவில் தலைவர் பொங்கல் வாழ்த்துக் கூறிப் பேசுகையில், தமிழ் மக்கள் மேன்மேலும் பிற மொழி மக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார். மத்திய அரசாங்கத்து உணவு இலாகா துணை மந்திரி திரு எம். வி. கிருஷ்ணப்பா உள்பட திரளான மக்கள் கூடியிருந்தனர்.

ஸ்ரீமதி மணி கிருஷ்ண சுவாமியின் இன்னிசை விருந்தும், பூர்ணம், உமாகிருஷ்ணமூர்த்தி ஆகியோர் அற்புதமாக நடித்த ஹாஸ்ய நடைச் சித்திரமும் முக்கியமான கலை நிகழ்ச்சிகளாக அமைந்திருந்தன.

★

திருவனந்தபுரத்தைச் சேர்ந்த தைக்காடில் ஸ்ரீ தியாகராஜ உத்ஸவம் ஜனவரி 9, 10, 11 மூன்று நாட்களும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. 9-ம் தேதி திரு வைத்தியநாதய்யர் அவர்களால் துவக்கப்பட்டு, 10-ம் தேதி காலை ஆறு மணியிலிருந்து பஜனை, லட்சார்ச்சனை வைபவங்களும் மிகவும் விமரிசையாக நடந்தன. 10-ம் தேதி இரவு பத்தரை மணிக்குமேல் சுவாமிகள் படத்தை அலங்கரித்து அம்பலப்புழை சகோதரர்கள் நாதஸ்வர இசையுடன் ஊர்வலம் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. இம்மூன்று நாட்களும் மாலை நான்கு மணியிலிருந்து இரவு பன்னிரண்டு மணி வரையில் எல்லா வித்துவான்களும் விதுஷிகளும் கச்சேரி செய்தார்கள்.

இவ்வைபவத்தில் மிகவும் உற்சாகத்துடன் உழைத்துப் பாடுபட்டவர்கள் திரு கேதாரநாதனும், நெல்லை திரு கிருஷ்ணமூர்த்தியும் ஆவர்.

★

பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில், ஜனவரி 11, 12, 13, 14 தேதிகளில் சங்க மணி மண்டபத்தில், யோகி சுத்தானந்த பாரதியாரின் தலைமையில் தமிழ் விழா கொண்டாடப் பெற்றது. நான்காவது நாளாகிய பொங்கல் தினத்தன்று, சங்கத்தின் பெண் அங்கத்தினர்களால், 'பூவா தலையா' என்ற தமிழ் நாடகம் நிகழ்த்தப் பெற்றது.

நாடகம் பிரபல கதாசிரியை திருமதி கே. சுந்தராம்பாள் அவர்களால் எழுதப்பட்டது. கலையார்வத்துக்கும், செயல் திறனுக்கும் பெயர்போன தமிழ்ச் சங்கப் பெண்மணிகள் நிகழ்த்தும் நாடகம் என்பதோடு, பெண்மணிகளே முழுதும் பங்கு கொண்டு அரங்கேற்றும் அமெச்சூர் நாடகம் என்பதாலும், திரளான பம்பாய் ரசிகர்கள் மண்டபத்தில் குழுமி நாடகத்தை அமோகமாக ரசித்தனர்.



துறவியின் தோல்வி

இதிகாச காலம்!

பிரும்மாண்டமான நதியின் கரையில் அமைந்திருந்தது ஒரு சிறு ஆசிரமம். எங்கும் இருள். பிரபஞ்சம் முழுவதுமே மோனத்தில் ஆழ்ந்திருந்தது. சகல ஜீவராசிகளும் உறங்கிக் கிடந்தன. ஆனால், இரண்டு ஜீவன்கள் மாத்திரம் மனத்தில் சாந்தியற்றுத் தவித்தன.

துர்வாசருக்கு உறக்கம் வரவில்லை. தம் நினைவகற்றி, நிஷ்டையில் ஆழ்ந்து விடத் துடித்தார். மனம் ஒரு நிலைப்பட்டால் தானே நிஷ்டை சித்திக்கும். மனம் சுழன்றது. தாம் செய்துவிட்ட காரியத்துக்காகக் கழிவிரக்கம் கொண்டார். சற்றுத் தூரத்திலிருந்த குடிசையை நோக்கினார்.

குடிசையினுள் வெளிச்சம் தெரிந்தது. சகுந்தலை இன்னும் தூங்கவில்லை. ஒரு பலகையைத் தலைக்கு அடைகொடுத்துச் சரிவாகப் படுத்திருந்தாள். இதயத்தில் குமுறல். வலி பிழுந்த கோபம். வேதனையால் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

துர்வாசரின் மனக்கண்ணில் இந்த நிலை தோன்றியது. சகுந்தலையின் கண்ணீர் அவர் நெஞ்சைச் சுட்டது.

அந்த இரண்டு ஜீவன்கள் அந்த நேரத்தில் உறக்கமில்லாமல் மன உளைச்சலோடு தவித்துக் கொண்டிருந்தன.

ஒருவர் உலகைத் துறந்து, புலன்களை அடக்கி, ஆண்டாண்டுகளாகச் சிந்தையொடுக்கி, மோனத் தவமிருந்து, மெய்ப்பொருள் கண்ட முனிவர். பற்றற்றுப் பரமனை நாடும் பணியில் ஈடுபட்டிருந்தாலும், மனம்அவரைப்பற்றிக்கொண்டிருந்தது.

இன்னொருத்தி, அநாதையாகப் பிறந்து, ஆசிரமத்தில் வளர்ந்து, ஆறுதலுக்கு வந்த துஷ்யந்தனை இழந்து, வயிற்றில் ஒன்பது மாதக்கருவைத்தாங்கி அபவாதத்தோடு எதிர்காலத்தை நோக்கி நின்ற பேதை.

இருவர் எண்ணங்களும் இரு வேறு திசைகளில் ஆடிக் கொண்டிருந்தன.

அன்று மாலைதான் துர்வாசர் அந்த ஆசிரமத்துக்கு வந்தார். அங்கு சகுந்தலையிருக்கிறாள் என்பது அவருக்குத் தெரியாது. நதிக் கரையில் ஒரு பாறையின் மீது நிஷ்டையில் அமர்ந்திருந்தார் துர்வாசர். ஏதோ சத்தம் கேட்கவே நிஷ்டையிலிருந்து விழித்தார். கோபத்தினால் அவர் கண்கள் சிவந்தன. நிஷ்டை கலைந்து விட்டதனால் ஏற்பட்ட சினம். ஒருமுறை சகுந்தலையைக் கூர்ந்து பார்த்தார். அவள் அவருடைய கமண்டலத்தில் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள்.

''ஏன் கமண்டலத்தின் தண்ணீர் ஊற்றுகிறாய்? அதில் தண்ணீர் இருந்ததே'' என்றார் அவர் கடுமையாக.

''மன்னிக்க வேண்டும். கமண்டலத்தில் இருந்த நீரை அந்த மான் குட்டி விளையாடுத்தனத்தால் கொட்டி விட்டது. அந்த ஜீவன் தங்களின் கோபத்தால் துன்புற



கூடாதே என்பதற்காக நான் இந்தப் பணியைச் செய்கிறேன்'' என்றாள் சகுந்தலை.

''உனக்கு ஏன் அவ்வளவு அக்கறை?''

''நான் இந்தமாதிரி ஜீவன்களோடும், செடி கொடிகளோடும் சேர்ந்து வளர்ந்தவள். இறைவன் படைத்திருக்கும் எல்லா ஜீவனிடத்திலும் எனக்கு அன்பு உண்டு; அக்கறை உண்டு'' என்றாள் சகுந்தலை.

சகுந்தலையின் பேச்சு துர்வாசரின் நெஞ்சைச் சுட்டது.

''அப்படி என்றால் அந்த மானை இந்தப் பக்கம் வராமல் தடுத்திருக்கலாமே?'' என்றார். கோபம் சொல்லில் துள்ளியது.

''தடுத்திருக்கலாம். ஆனால், நான் முதலில் அதைக் கவனிக்கவில்லை. கவனித்திருந்தால், மனிதர்கள் எல்லோரும் ஒன்றுபோல் இருக்க மாட்டார்கள்; எல்லோர் இதயத்திலும் அன்பு பெருகுவதில்லை என்ற உண்மை அந்த மானுக்குத் தெரியாது என்பதை உணர்ந்து அதை இந்தப் பக்கம் வராமல் தடுத்து நிறுத்தியிருப்பேன்.''

துர்வாசருக்கு நெஞ்சில் சுரீர் என்றது. தம்மை அன்பற்றவன், அருளற்றவன் என்றல்லவா சுட்டிக் காட்டுகிறாள் என்று உணர்ந்தார். கோபம் பொங்கியது.

''பெண்ணே! யாரிடம் பேசுகிறாய், என்பது தெரியாமல் பேசுகிறாய். நீ யார்?''

''சுவாமி! மன்னிக்க வேண்டும். தங்கள் அருள் பெற்ற சகுந்தலை நான். தாங்கள் யார் என்பதைத் தெரிந்துதான் பயந்து, அந்த மான் குட்டியைக் காப்பாற்ற இந்தக் கமண்டலத்தை நீரால் நிரப்பினேன்.''

''ஓ, சகுந்தலையா! கண்வரின் வளர்ப்புப் பெண்ணா? விசுவாமித்திரருக்குப் பிறந்தவள் அல்லவா நீ! அதற்குத் தகுந்த குறும்பு இருக்கிறது'' என்றார் துர்வாசர்.

சகுந்தலைக்குத் தன் பிறப்பின் நினைவு வந்துவிட்டது. தாங்க முடியாத வேதனையால் கண்ணீர் சிந்தியபடியே அந்த இடத்தை விட்டு அகன்றாள். அவள் மறையும் வரையில் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார் துர்வாசர் வியப்புடன்.

கடந்துபோன சம்பவங்கள் அவருடைய மனக் கண்முன் தோன்றின.

* * *

ஆறுமாதங்களுக்கு முன் அந்தி மயங்கும் நேரம். கண்வரின் ஆசிரமத்துக்குச் சமீபமாகத் துர்வாசர் வருகிறார். அவரை அந்த நேரத்தில் வரவேற்க யாரும் இல்லை. இரைந்து கூப்பிடுகிறார். சற்றுத் தூரத்தில் ஆசிரமப் பணியில் ஈடுபட்ட பெண்களின் காதில் விழுகிறது. துர்வாசரின் குரல் அல்லவா? விழுந்தடித்துக் கொண்டு ஓடி வருகிறார்கள். அவர்களை முந்தி விடுகிறது துர்வாசரின் கோபம். கண்களில் பொறி பறக்கச் சுற்றுமுற்றும் பார்க்கிறார். வெகு சமீபத்தில் ஒரு மரத்தடியில் தலை குனிந்த வண்ணம் சகுந்தலை உட்கார்ந்திருக்கிறாள். தன்னை அவள் அலட்சியம் செய்து வரவேற்காமல் இருக்கிறாள் என்று நினைக்கிறார். மறுகணம் வார்த்தைகள் இல்லை. அக்னிப் பிழம்புகள் உதிர்கின்றன.


''நீ யாரை நினைத்து என்னை அவமதித்தாயோ, அவன் உன்னை மறக்கட்டும்'' என்று சபித்து விட்டு வேகமாகச் சென்றுவிடுகிறார். சற்றுத் தூரத்தில் ஓடிவரும் தோழிகளுக்கு விஷயம் தெரிந்து துர்வாசரைச் சாந்தப்படுத்த விரைகின்றனர். தோழிகளின் உபசரணைகளில் திருப்தியடைந்து அவர்களின் வேண்டுதல்களுக்காகச் சாப விமோசனமும் கொடுக்கிறார்.

சகுந்தலைக்குத் துர்வாசர் வந்தது தெரியாது. கூப்பிட்டதும் தெரியாது. சாபம் இட்டதும் தெரியாது. அவளது சிந்தனையெல்லாம் துஷ்யந்தனிடமே இருந்தது. 'சீக்கிரம் வந்து அழைத்துப் போகிறேன் என்று சொல்லிப் பிரிந்தவன் இன்னும் வரவில்லையே. வயிற்றில் கருவும் வளர்கிறதே. ஆசிரமத்துக்கு அபவாதம் வந்துவிடக் கூடாதே' என்றெல்லாம் எண்ணிப் புழுங்கித் தன் நிலை மறந்திருந்தவளுக்குத் துர்வாசர் வந்ததும், போனதும் எப்படித் தெரிந்திருக்க முடியும்?

* * *

இந்தச் சம்பவம் துர்வாசரின் நினைவிலிருந்து மறைந்துவிட்டது. அந்தப் பெண் சகுந்தலைதான் என்பது அப்போது





ர.சு.நல்லபெருமாள்

அவருக்குத் தெரியாது. சாபம் [illegible]வது எதுவாயிருந்தாலும் சரி, அவருக்குக் கவலையில்லே. கோபம் கொண்டார், சாபம் கொடுத்தார். அது அவருக்கு விளையாட்டு. பிறகு அதையே மறந்து விட்டார்.

ஆனால் அதன் விளைவு ?

தூர்வாசரின் மனத் திரையில் அந்தச் சம்பவம் தோன்றி மறைந்தது. மனம் ஊசலாடியது. இந்த முறைதான் தம் கோபத்தின் தராதரத்தை நிர்ணயிக்க முயன்றார்.

'எவ்வளவு எளிதில் சாபம் கொடுக்கப்பட்டது. அதற்கு ஏற்பட்ட காரணம் ஏற்றதுதானு? கோபம் நீதியை மறைத்து விட்டதே! பெண்ணின் மன இயல்பு தெரியாமல் கோபம் எழுந்ததே. சாபத்தைப் பற்றிய விவரம் அவளுக்குத் தெரிந்தபோது தம்மைப் பற்றி என்ன நினைத்திருப்பாள்?'

துறவு பூண்டு மனித சஞ்சாரமில்லாத காட்டிலேயே வாழ்ந்து தவத்திலேயே இருந்து உடலோடு உள்ளத்தையும் இரும்பாக்கிக் கொண்டிருக்கும் முனிவருக்கு ஒரு பெண்ணின் மனப்போக்கு எப்படிப் புரியும்? அன்பு, பாசம், ஆசை இவைகளால் வேலி கட்டி ஐம்புலன்களுக்கும் வழி வகுத்து, உணர்ச்சிகளின் சுழலிலே இன்பம்காணும் சாதாரண மனித வர்க்கத்தை முற்றும் துறந்த முனிவரால் எப்படிப் புரிந்துகொள்ளமுடியும்? புரிந்திருந்தால் சகுந்தலைக்கு அந்த அநீதி நேர்ந்திருக்குமா ?



தூர்வாசருக்கு இப்போது புரிய ஆரம்பித்தது. மன உணர்ச்சிகளை எண்ணிப் பார்த்து உணர்ந்து கொண்டார். சகுந்தலை மீது இரக்கம் தோன்றியது. சாபத்துக்கு விமோசனம் கொடுத்து விட்டாலும், அந்த அபலை எவ்வளவு வேதனைகளை அனுபவித்து விட்டாள். இந்த நினைவினுல் தூர்வாசரின் மனத்தில் ஈரம் தட்டியது.

அவள் பிறப்பே வேதனை நிறைந்ததுதானே! அவளுடைய பிறப்பின் ரகசியம் அவருடைய மனத்தில் வட்டமிட்டது.

விசுவாமித்திரரின் நினைவு வந்தவுடன், தூர்வாசரின் உதட்டில் புன்னகை நெளிந்தது. அடர்த்தியாக வளர்ந்திருந்த தம் வெண்மையான தாடியை வருடி விட்டுக் கொண்டார்.

அந்த இரண்டு முனிவர்களும் அசாதாரணப் பிறவிகள். இரண்டு பேரும் துணிச்சலையே துணையாகக் கொண்டு கிடைத்தற்கரிய அந்தப் பெரும் பேறை அடைந்தவர்கள். விசுவாமித்திரரின் வீழ்ச்சிப் படலம், தூர்வாசரின் சிந்தனையில் படர்ந்தது...

* * *

பல வருடங்களுக்கு முன் ஒரு நாள் அந்தி வேளை. நதிக் கரையில் தவம் இருந்தார் விசுவாமித்திரர். கருட்டையான கறுத்து அடர்ந்த தாடி. மோனத்தில் மூடியிருந்த கண்கள். எத்தனையோ பருவங்கள் வந்து வந்து போயின. வெய்யில் காய்ந்தது. புழுதி படிந்தது. பனி பெய்தது. மழை கொட்டியது. உணர்வற்றுக் கல்லாக அவர் தபசில் ஆழ்ந்திருந்தார்.

இந்திரனின் ஆணைக்கு இணங்கி, விசுவாமித்திரரை நாடி வந்தாள் மேனகை. பாதசரம் ஒலிக்க முனிவரின் முன் வந்து நின்ருள். நெருப்பின் பக்கத்தில் நிற்கும் பயம் அவளுக்கு. தொட்டு நிஷ்டையைக் குலைக்கக் கையை நீட்டினுள். ஆனல் நெருப்பு சுட்டு விட்டால்? கையை எடுத்துக் கொண்டாள். நடனமாடினுள். தாளத்துக்கு இசையப் பாதசரத்தில் தோன்றிய இனிய ஒலி, முனிவரின் செவியில் விழவில்லே. மேனகையும் விடவில்லே. ஆடினுள், ஆடிக் கொண்டே இருந்தாள். கடைசியில் தாளக் கட்டுக்கோப்புக்குள் அமைந்த ஒலியில், அந்த முனிவரின் புலன்களில் உணர்வு தட்டியது. அவர் உள்ளத்தையும் தீண்டி விட்டதோ என்னவோ !

மேனகையின் மருண்ட பார்வை, அகன்று சுழன்று சாய்ந்து நோக்கி ஆசையோடு வெறியை ஊட்டும் கண்கள் எல்லாவற்றையும் கண்களாலேயே விழுங்கிக் கொண்டிருந்தார் முனிவர்.

தவம் இருந்தவர் கண்களைத் திறக்கும்போது, தெய்வம்தான் தோன்ற வேண்டும். ஆனல்...?

இதுவும் அழகுத் தெய்வம்தானே !

பல வருடங்களுக்கு முன் பாறையாகிவிட்ட இதயம் நெகிழ்ந்தது. யோகத்தின் சக்தியால் புலன் உணர்ச்சிகளை ஆங்காங்கே உதறி விட்டுக் கட்டையாகி விட்ட உடலில் இப்பொழுது உணர்ச்சியின் சனனம் தோன்றியது.

அந்தி மயங்கிய அந்த வேளையிலே விசுவாமித்திரர் தன்மதி மயங்கிவிட்டார். இயற்கை வெற்றியடைந்தது. நிலவு துணை இருந்தது.

விசுவாமித்திரரின் வீழ்ச்சி சகுந்தலையைத் தோற்றுவித்தது.

குழந்தையை ஏறெடுத்தும் பார்க்க மறுத்தார் ராஜரிஷி. குழந்தையோடு தேவலோகம் செல்லப் பயந்தாள் மேனகை. மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு குழந்தையை வனத்திலேயே போட்டு விட்டு, வனத்தில் மறைந்து சென்று விட்டாள் மேனகை.

அனாதையாகக் கிடந்த குழந்தை, கண்வ மகரிஷியிடம் வளர்ந்தது. பெற்றவள் இருந்தும், அவள் முகம்கூடத் தெரியாமல் வளர்ந்தவள் பேதையான சகுந்தலை.

* * *

தூர்வாசருக்கு இதயத்தைப் பிழிவது போன்ற வேதனை. பிறக்கும் போதே துன்பத்தைத் துணையாகக் கொண்ட சகுந்தலைக்கு, அவராலும் இப்படி ஒரு துன்பமா ?

போர்ஹான்ஸ் டூத்பேஸ்டை பல் வைத்தியர்கள் ஏன் சிபார்சு செய்கிறார்கள் என்பதற்கான விஞ்ஞான முறை காரணங்கள்



போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட்


❶ **போர்ஹான்ஸ் ஈறுகளை ஆரோக்கியத்துடன் வைக்கிறது :** உங்கள் ஈறுகள் அரிக்கப்பட்டு, ஆரோக்கியமில்லாமல் இருந்தால், உங்கள் பற்கள் விழுந்துவிடும் என்று பல் வைத்தியர்கள் சொல்லுவார்கள். ரத்தம் கசியும் ஈறுகள், வீங்கிய ஈறுகள், புண்ணானதும், கூசும் ஈறுகள் இவைகளுக்கு போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் கொண்டு இலேசாகத் தேய்க்கவேண்டும். அவைகள் உடனேயே கெட்டியான ஆரோக்கிய நிலைக்கு வந்துவிடும். போர்ஹான்ஸ் டூத்பேஸ்டில் மட்டுமே, டாக்டர் ஆர். ஜே. போர்ஹான்ஸ் பக்குவப்படுத்திய பல நோய்களிலிருந்து விசேஷ பாதுகாப்பு அளிக்கும் துவர்ப்பு பொருள்கள் சேர்ந்துள்ளன. இதனால்தான் போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட், ஈறுகள் சம்பந்தமான கொடிய நோய்களிலிருந்து சிறந்த பாதுகாப்பு அளிக்கும்.

❷ **போர்ஹான்ஸ் பல் சொத்தையை அகற்றுகிறது.** விசேஷ துவர்ப்பு பொருள் கொண்ட போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் கொண்டு அன்றாடம் பல் விளக்கினால், சொத்தைக்குக் காரணமான கிருமிகள் முற்றிலும் அழிந்துவிடும். இந்தியாவில் சமீபத்தில் நடைபெற்ற போர்ஹான்ஸ் போட்டியில், முற்றிலும் திடமாயும் ஆரோக்கியமாயும் பற்களுள்ள 45-லிருந்து 93-வயதிற்குட்பட்டவர்களும்கூட கலந்து கொண்டனர். தங்களுடைய பற்களின் சிறப்பிற்கு, தாங்கள் அன்றாடம் தவறாமல் போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட உபயோகித்து வருவதே காரணமென, அவர்கள் யாவரும் கூறினர்.

❸ **போர்ஹான்ஸ் எனாமல் சிதைவைத் தடுக்கிறது :** போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட், பற்களின் எனாமல் சிதையவிடாமல், பற்களை அவைகளின் இயற்கை நிலையில் வைப்பதுபோல், சுத்திகரிக்கும் குணம் வாய்ந்த வழுவழுப்பான டூத்பேஸ்டாகும். பற்களின் ஆரோக்கியத்தைத் தவறாமல் பேணிவருவதன் மூலம், உங்கள் புன்னகையை ஒளி வீசச் செய்யலாம். போர்ஹான்ஸ் டூத்பேஸ்டை அன்றாடம் தவறாமல் உபயோகியுங்கள்.

❹ **போர்ஹான்ஸ் கிருமிகளை அழிக்கிறது :** போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட், வாய் நாற்றத்தை அகற்றி, உங்கள் வாயை முற்றிலும் சுத்தமாக வைக்கும். வாய்க்கு நறுமணமூட்ட, உங்கள் நாக்கும், மேல்வாயும்கூட சுத்தமாக இருக்கவேண்டுமென்பதை ஞாபகத்தில் வையுங்கள். உங்கள் நாக்கின் மீது சிறிது போர்ஹான்ஸ் டூத்பேஸ்டை வைத்து ஒரு டூத் பிரஷ் அல்லது விரலினால், மிருதுவாய் குழப்பவும் போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் உணவுத் துணுக்குகள் மற்றும் கிருமிகளை விரைவில் அகற்றும்.

ஒரு பல் வைத்தியரால்
தயாரிக்கப்பட்டது



GEOFFREY MANNERS & CO.
PRIVATE LTD.

H. 115

அன்பை நாடிய அவளுக்கு அன்பனாக வந்த துஷ்யந்தனையுமா பிரித்துவிட வேண்டும்? எவ்வளவு கொடுமை?

தர்மம் தம்மை மன்னிக்காது என்ற பயம் துர்வாசரைச் சூழ்ந்து கொண்டது. கண்களை மூடிக் கொண்டார். துஷ்யந்தனின் சபைக் கூடம் மனத்தில் தோன்றியது.

சபை நடுவே சகுந்தலை கர்ப்பிணிக் கோலத்தில் நின்றாள். துஷ்யந்தன் அவளைத் தெரியாது என்று மறுத்தவுடனே, சகுந்தலை நடுங்கி விட்டாள்.

துஷ்யந்தனுக்குப் பல சம்பவங்களை ஞாபகமூட்டினாள்; பயனில்லை. ஒரேயடியாக மறுத்து விட்டான். பிறர் அறியாது-அறியக் கூடாததால் -இரகசியமாக அவனும் அவளும் சந்தித்த சம்பவங்களையும் பேசிய பேச்சுக்களையும், வெட்கத்தை விட்டுப் பலர் முன்னிலையில் கூற வேண்டிய நிர்ப்பந்தம் வந்து விட்டதே! இதைவிட வெட்கக் கேடுவேறு என்ன?

சாட்சி வைத்துக் கொண்டா காந்தர்வ மணம் புரிவது? துஷ்யந்தன் அசட்டுத்தனமாக அப்படித்தானே 'சாட்சி இருக்கிறதா?' என்று கேட்டு விட்டான்.

சாட்சி யார்? நிலவும், செடி கொடிகளும், கலைகளும் சகுந்தலையோடு வளர்ந்த மானினங்களும்தானே! அவை வந்து சாட்சி சொல்லுமா?

தன் நிலையை எண்ணினாள். எண் சாண் உடம்பும் கூனிக் குறுகி விட்டது. அவமான உணர்ச்சி தாங்கமாட்டாமல் கண்ணீர் சிந்தினாள். அன்று பெற்றவள் வெறுத்தாள்; இன்று கொண்டவன் மறுத்தான். அத்தனை பேர் முன்னிலையில் தன் வயிற்றில் இருக்கும் கருவின் கர்த்தாவை நிரூபிக்க முடியவில்லையே என்று ஏங்கினாள்; துடித்தாள். பிரபஞ்சம் முழுவதுமே பற்றி எரிவதுபோன்ற உணர்ச்சி. ''அம்மா!'' என்று அலறினாள்.

அத்தனை வருடங்களாக மகளை மறந்து வானுலக மயக்கத்தில் இருந்த மேனகைக்கு, அந்தக் குரல் அடி வயிற்றைப் போய்த் தாக்கியது. நெஞ்சு கரந்தது. உடனே துஷ்யந்தன் சபைக்கு வந்து, மயங்கி விழுந்த மகளைத் தூக்கிச் சென்று விட்டாள்.

* * *

துர்வாசரின் கண்களில் நீர் பெருகிக் கொண்டிருந்தது. சாபத்தின் விளைவு இலேசானதா? என்ன விமோசனம் கொடுத்து என்ன செய்ய? சபை நடுவே அவள் இழந்த மானம், ஒரு பெண்ணால் தாங்கக் கூடியதா? இதைவிடத் துஷ்யந்தன் இறந்து விடட்டும் என்று சபித்திருக்கலாமே?

சகுந்தலைக்குத் தான் செய்துவிட்ட அநீதிக்குப் பிராயச் சித்தம் காணத் துடித்தார் துர்வாசர். கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டார்.

சகுந்தலையின் குடிசையில் வெளிச்சம் தெரிந்தது. பாவம், இன்னும் அவள் தூங்கவில்லை.

அவள் கேட்ட வரத்தைக் கொடுக்க வேண்டும் என்ற ஆசை கொண்டார் துர்வாசர். சகுந்தலையின் மனம் குளிர்ந்து விட்டால், தாம் செய்த அநீதிக்குப் பிராயச் சித்தம் கிட்டும் என்று நினைத்தார்.

சகுந்தலையின் குடிசை வாசலில் வந்து நின்றார். அப்போது நடுநிசி!

''சகுந்தலை!'' என்று அழைத்தார். குரல் கனத்திருந்தாலும் கனிவு இருந்தது.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தாள் சகுந்தலை. துர்வாசரை வரவேற்று உட்கார வைத்தாள்.

''குழந்தாய்! உலகத்தில் நடப்பவை எல்லாவற்றுக்கும் தெய்வம் ஒன்றுதான் காரணம். நடப்பவைகளுக்கு யார் மீதும் பழி கூறமுடியாது. நடக்க வேண்டியவைகளை எப்படியும் எந்த முறையிலாவது எவர் மூலமாவது ஈசன் நடத்தி விடுவான். உன் வேதனைகள் சீக்கிரம் மறைந்து விடும். துஷ்யந்தனைச் சீக்கிரமாய்ச் சந்திப்பாய்.''

சகுந்தலை ஒன்றும் பேசவில்லை.

''சகுந்தலை! உனக்கு என்ன வரம் வேண்டும்? எது வேண்டுமானாலும் கேள், தருகிறேன்'' என்றார். குரல் கெஞ்சியது. மறுத்து விடுவாளோ என்ற பயம்.

''எனக்கு வேண்டியது ஒன்றும் இல்லை. அனுபவிக்க வேண்டிய வேதனைகள் அனைத்தையும் அனுபவித்து விட்டேன். இதற்குமேல் கொடுமையான துன்பம் ஒன்றும் இருக்காது. இனி எந்த வேதனையும் என்னை வாட்டப்போவதில்லை'' என்றாள் சகுந்தலை விரக்தியுடன்.

''சோகத்தால் இப்படிப் பேசுகிறாய். உனக்கு என்மீது கோபம்.''

''இல்லை சுவாமி, யார்மீதும் நான் கோபம் கொண்டு என்ன பயன்? என்னால் சபிக்க முடியுமா?'' என்றாள் சகுந்தலை.

துர்வாசரைச் சாட்டை கொண்டு அடிப்பது போலிருந்தது. அவருள் அடங்கிய சினம் அவரையே சுட்டது.

''உனக்கு வரம் கொடுக்கவே வந்திருக்கிறேன். எது வேண்டுமானாலும் கேள்.''

''எனக்கு வேண்டுவது ஒன்றுமே இல்லை'' என்றாள் சகுந்தலை. அவள் கண்களில் வைராக்கியம் தெரிந்தது.

துர்வாசர் புரிந்து கொண்டார். தம்மிடம் வரம் கேட்டுப் பெற அவளுக்குப் பிரியமில்லை. ஆனால், அவளுக்கு வரம் கொடுக்காவிட்டால் தம்முடைய மனம் அமைதி பெறாது. தர்மம் மன்னிக்காது என்று எண்ணித் தவித்தார்.

''ஏதாவது கேட்டு வாங்கிக் கொள். மறுக்காதே!'' என்று மன்றாடினார்.

''எனக்கு ஏதாவது தேவையிருந்தால் அல்லவா நான் உங்களிடம் கேட்பதற்கு?'' என்றாள் சகுந்தலை.

துர்வாசரின் கர்வம் அவிந்து விட்டது. அவர் முகத்தில் தோன்றிய களை மங்கியது. தலையைக் குனிந்து கொண்டார்.

''சகுந்தலை! நீ கேட்காவிட்டாலும் நானாக உனக்கு வரம் தருகிறேன். உனக்குப் பிறக்கும் புத்திரன் கடல் சூழ்ந்த பூமியைப் புகழோடு ஆண்டு, என்றுமே அழியாத புகழைப் பெறுவான். அவன் ஆளப் போகும் நாடு அவனுடைய பெயரைக்கொண்டு 'பாரதம்' என்று அழைக்கப்படும்'' என்று கூறிவிட்டு வேகமாக வெளியேறினார். மனத்தில் நிறைவில்லை. சகுந்தலையின் வைராக்கியம் அவரைத் தோல்வியடையச் செய்தது. இருந்தாலும், ஒரு வரம் கொடுத்து விட்டோம் என்ற போலி நிறைவுடன் வேகமாக நடந்தார்.

நல்ல தேநீர் தயாரிக்க
தேயிலை ஊறும் நேரத்தைக்
கணக்கிடுங்கள்



படித்துப் பாருங்கள்

மால்கோஷ்

பாத்தியிலே பல விதைகளைத் தெளித்து நீர் பாய்ச்சி வந்தால், அநேகமாக எல்லாமே முளைவிட்டுக் கிளைக்கத்தான் செய்கின்றன. சிற்சில கொஞ்சம் முன்னது. பின்னதாக முளைக்கலாம்.

நவீன காலத்தில் இலக்கிய ஆர்வம் உதித்த பொழுது, மற்ற மொழிகளுக்கெல்லாம் சற்று முன்னதாகச் செழித்த மொழி வங்க மொழியாகும். அதைப் பின்பற்றி, அதனுடன் போட்டி போட்டுக் கொண்டே பல மொழிகள் வளம் பெற்று வளர்ச்சியுற்று வந்திருக்கின்றன.

உலகத்திலே பேசும் மொழிகள் பலவாயினும் உணர்ச்சிகள் ஒன்றுதானே? பிறமொழிகளிலே உள்ள இலக்கிய ரசத்தைப் பருகும் ஆசை உள்ளத்தில் வரும்பொழுதுதான் மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது.

வங்கமொழியின் இலக்கிய வளத்தைத் தமிழ் நாட்டுக்கு நல்கிய பெருமையில் பெரும் பங்கு திரு த. நா. குமாரசாமியைச் சாரும்.

பல பிரபல வங்க ஆசிரியர்களின் சிறந்த படைப்புகளைப் பொறுக்கி 'மால்கோஷ்' என்னும் கதைத் தொகுதியை உருவாக்கியிருக்கிறார்.

ஸ்ரீ அவனீந்திரநாத் டாகுர் எழுதிய 'ஹீராகுணி' என்னும் கதை தாய்மையின் உணர்ச்சியை அற்புதமாகச் சித்திரிக்கும் சாகாவரம் பெற்ற கதையாகும்.

திரு சாதனுகர் எழுதிய 'சிறைப்பறவைகள்' என்னும் கதை சிறைத் தண்டனை அனுபவிப்பவர்களைக் காட்டிலும் சிறைச்சாலைச் சிப்பந்திகள் எப்படிச் சிறைப்பறவைகளாகிறார்கள் என்பதைத் திறம்படச் சித்திரிக்கிறது.

மகாகவி ரவீந்திரநாத் டாகுர் எழுதியுள்ள 'படித்துறை சொன்ன கதை' 'கெட்டபெயர்' என்னும் இரு கதைகளிலும் காவியமும் கற்பனையும் கூடி ஒருங்கே உள்ளத்தை உருக்குகின்றன. விலை ரூபாய் 3—50.

குறுக்குச் சுவர்

மிக மிகச் சாதாரணப் பொருள் கூட, அதைப் பேணிப் பராமரிப்பவரின் காரணமாக மெருகு பெற்றுப் பெருமையாக விளங்குகிறது. மிக மிக நல்ல பொருள் அதை வைத்திருக்கத் தெரியாதவன் காரணமாகச் சீர்குலைந்து காணப்படுகிறது. இதை நாம் அன்றாட வாழ்க்கையில் காண்கிறோம்.

நல்ல கதை, சிற்சிலசமயம் அதைக் கையாள்பவரின் திறமையின்மை காரணமாகச் சாதாரணமாக அமைந்து விடுவதும், சாதாரணக் கதை பிரமாதமாக அமைந்துவிடுவதும், கதை உலகத்தில் காணக் கிடைக்கும் ஒரு காட்சி.

பிரபல ஆசிரியரான ஸ்ரீ த. நா. குமாரசாமியின் எழுதும் திறனுக்குக் 'குறுக்குச் சுவர்' என்னும் சாதாரணக் கதை ஓர் சிறந்த எடுத்துக் காட்டு.

எல்லோரும் எதிர்பார்ப்பது போலவே, மத்தியதர வகுப்பினனான சுந்தரம், பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த உஷாவின் கரம் பற்றும் பாக்கியத்தைப் பெற முடியவில்லை. காரணம், சமூகத்தின் குறுக்குச் சுவராக நிற்கும் அந்தஸ்துதான். அவன் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமையும் மகா பாரதத்தில் வரும் சுகன்யா உபாக்கியானத்தை ஆசிரியர் கவினுறச் சித்திரித்து நேயர்களின் மனத்தைக் கொள்ளை கொண்டு விடுகிறார்.

ஆனால் உஷாவின் தம்பி சீனு மிக மிகச் சுட்டிகையான பையன். சுந்தரத்துடன் கிராமத்துக்குச் சைக்கிளில் விஜயம் செய்து, உஷாவின் கரம் பற்றும் பாக்கியத்தைப் பெற்ற கலெக்டர் பாலகிருஷ்ணனின் கார் முதன் முதலாகக் கிராமத்துக்குள் நுழையும்போதே, அதன் நம்பரை முன்பே அறிந்தவன் போல் எப்படியோ சொல்லி விடுகிறான்!

மேலே இப்படித்தான் நடக்கும், இதுதான் வரும் என்ற கற்பனையைச் செலுத்திக் கொண்டே வாசகர்கள் ஆசிரியரின் அற்புதமான நடையையும் கதை சொல்லும் திறனையும் வியப்பார்கள். முழுப் புத்தகத்தையும் படித்த பின்பே மூச்சுவிடுவார்கள்.

பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலை, சென்னை—4. விலை: ரூ. 1-75.

கைப் பந்து

ஒரு இளைஞன் தனக்கு எவ்வளவு வேலையிருந்தாலும் அவன் சிறிது நேரமாவது விளையாட்டில் கவனம் செலுத்த வேண்டும்; இல்லாவிட்டால் அவன் நாளடைவில் மந்தமாகி விடுவான். உழைத்து உழைத்து அவன் ஓடாகப் போவானே தவிர உற்சாக புருஷனாக விளங்க மாட்டான். விளையாட்டு ஒருவனுக்கேற்படும் கவலையையும் சோர்வையும் நீக்கும் ஔஷதமாகத் திகழ்கிறது.

இளைஞர்கள் அனைவருக்கும் அவசியம் தேவைப்படும் இந்த விளையாட்டுக் கலையிலே இன்று கைப் பந்தாட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. அமெரிக்காவிலே தோன்றிய இந்த விளையாட்டு இன்று உலகெங்கும் நன்கு பரவி யிருக்கிறது.

இந்த நூலில் கைப்பந்து விளையாட்டின் நுணுக்கங்களெல்லாம் சித்திர விளக்கத்தோடு ரஸமாகவும் புரிந்து கொள்ளும் முறையிலும் விளக்கப்பட்டிருக்கின்றன. சென்னை சைதாப்பேட்டை உடற்பயிற்சிக் கல்லூரியில் போதனாசிரியராகப் பணியாற்றி வரும் வி. ஹியூபட் தனராஜ் இந்த விளையாட்டுக் கலைப் புத்தகத்தை வழங்கியுள்ளார். இதைத் தமிழாக்கம் செய்து உதவியவர் திரு கி. ராஜகோபாலன் அவர்கள்.

ஒரு ஆட்டக்காரருக்குக் கைப்பந்து விளையாட்டில் திறமை இருக்கலாம். அந்த விளையாட்டின் விதி முறைகளைப் பற்றி அவருக்குத் தெரிந்திருக்காது. ஆனால் கைப் பந்தாட்டத்தின் சாஸ்திரிய முறையும் விதி முறைகளும் தெரிந்திருப்பது ஆட்டக்காரரின் திறமைக்கு மேலும் மெருகேற்றுவது போலாகும். கைப் பந்தாட்டக்காரர்களும், விளையாட்டுக் கலையில் ஈடுபாடுள்ளவர்களும் அவசியம் படித்தறிய வேண்டிய நூல்.

பிரசுரம்: ஞானோதய பிரஸ், 11, ஆண்டர்சன் தெரு, சென்னை—1. விலை: ரூ. 1—75.

சதி சாவித்திரி

சியாமா

இருபத்தைந்து வருஷங்களுக்கு முன், கல்லூரிப் படிப்பின் இறுதியில் எடுத்துக் கொண்டிருந்த அந்த 'க்ரூப்' போட்டோவை நண்பர்கள் இருவரும் உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

நாகலிங்கந்தான் முதலில் பேசினன். ''படித்து முடிந்து அந்த நாளிலேயே டில்லிக்கு வந்ததினுல், பொருளாதாரம் பற்றிய வரை நான் வெற்றி கண்டது என்னவோ உண்மைதான். ஆனல் தாய்நாட்டுக்கான ஏக்கம் என்னை எவ்வளவு வாட்டியிருக்கும் தெரியுமா? இதோ இந்தப் படத்திலிருக்கும் நண்பர்கள் எங்கே, என்ன செய்கிறார்கள் என்றறிய எத்தனை தவித்திருப்பேன்? இந்த யாத்திரை மோகம் உன்னைப் பற்றி இத்தனை தூரம் இழுத்து வந்திராவிட்டால் நம்முடைய இந்தச் சந்திப்புக்கூடச் சாத்தியமாக இருக்காது'' என்று பெருமூச்சு விட்டான்.

''நீ டில்லியிலிருப்பதும், நான் உள்ளூரில் இருப்பதும் ஒன்றுதான். எனக்கு மட்டும் பழைய நண்பர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள முடிகிறதா? இத்தனைக்கும் அதோ படத்தின் இடக் கோடியிலிருக்கும் பரமசிவம் அடுத்த வரிலேயே பஞ்சாயத்து அதிகாரியாக இருந்தான். அவனைப் போய்ப் பார்க்கக் கணக்கற்ற தடவைகள் கிளம்பி விருப்பேன். ஆனல் கடைசி நிமிஷத்தில் ஏதாவது வந்து போகவொட்டாமல் தடுத்துவிடும். திடீரென்று ஒரு நாள் மூளை ஜுரத்தில் அவன் அகால மரணமடைந்தான் என்று பத்திரிகையில் பார்த்தேன். அத்தனை பக்கத்திலிருந்தும் அவனைப் பார்க்காமல் போனேனே என்று எண்ணும் பொழுதெல்லாம் நெஞ்சு பொறுக்கவில்லை'' என்று வாய் குழறி நிறுத்தினன் ஏகாம்பரம்.


''உயிரே உருவான பரமசிவமா காலமாகி விட்டான்!'' என்று கூறியபோது நாகலிங்கத்தின் குரலில் பலவித உணர்ச்சிகள் ஒருங்கே கொந்தளித்தன.

''பரமசிவம் மட்டும்தானா? இந்தப் படத்திலுள்ள பன்னிரண்டு பேரில் ஐவர் இருந்த இடத்தில் புல் முளைத்து விட்டது; அதுவும் கிட்டத்தட்ட ஒரே வருஷத்தில். நிற்பவர்களில் பரமசிவத்தை அடுத்து, வலக்கோடியில் இருக்கும் குப்புவும், நடுவேயிருக்கும் கிட்டுவும் காலமானர்கள். உட்கார்ந்திருப்பவர்கள் இரண்டு ஓரங்களில் இருக்கும் ராமுவும், வேதாசலமும் ஒரு வாரத்தில் இன்ப்ளுயன்சா ஜுரத்துக்குப் பலியாகி விட்டார்கள்.''

''இவர்களில் ஒருவருக்காவது நாற்பத்தைந்து வயதுகூட இருக்காதே; அதுவும் ஒரே வருஷத்தில் இத்தனை பேர்களும் இறந்தார்கள் என்றல், என்னல் நம்பவே முடியவில்லையே?'' என்று இணைறினன் நாகலிங்கம்.

அப்பொழுது எதேச்சையாகக் கடிகாரத்தை நோக்கிய ஏகாம்பரம், ''சரி, சரி, நான் பஸ்ஸைப் பிடித்துப் பழைய டில்லி போய் ரயிலைப் பிடித்தாக வேண்டும். ஹரித்வாரிலிருந்து திரும்பும்பொழுது சாவகாசமாகப் பேசுவோம்'' என்று பையைக் கையிலெடுத்துக் கொண்டு விடைபெற்றுக் கொண்டான்.

ஆபீஸ் கிளம்புவதற்கு முன் வெற்றிலையைச் சுவைத்துக் கொண்டு, சாய்வு நாற்காலியில் படுத்திருந்த நாகலிங்கத்தை ஏகாம்பரம் சொல்லிச் சென்ற செய்தி ஒரு இனந்தெரியாத வேதனையில் ஆழ்த்திக்கொண்டிருந்தது.



அப்பொழுது அங்கு வந்த அவன் மனைவி சாவித்திரி, 'என்ன ஆபீசுக்கு மட்டமா? ரொம்ப நிதானமாகப் படுத்திருக்கிறீர்களே?' என்று கேட்டாள்.

அதற்கு விடையாக, ''அதோ அந்த 'க்ரூப்' போட்டோவை எடு'' என்றன் நாகலிங்கம்.

படத்தை எடுத்துவந்தவள், ''இவர்தானே உங்கள் நண்பர் ஏகாம்பரம்? எத்தனை மாறிவிட்டார்? ஆனல் நீங்கள் அப்படியொன்றும் அதிகமாக மாறிவிடவில்லை'' என்று சொல்லிக் கொண்டே படத்தைக் கணவனிடம் தந்துவிட்டாள்.

''மாறுவது, மாறுது போகட்டும். இந்தப் பன்னிரண்டு பேரில் சென்ற ஒரே வருஷத்தில் ஐவர் காலமாகி விட்டார்களாம். எக்கச்சக்கமான வயசு; பாவம், அவர்கள் குடும்பங்கள் எப்படி எங்கே நிர்க்கதியாகத் தவிக்கின்றனவோ?'' என்று நெடுமூச்செறிந்தான் நாகலிங்கம்.

படத்தில் அந்த ஐவர்கள் யார், யாரென்று அவன் தெரிந்து கொண்ட பிறகுதான், அன்று அவனுக்கு ஆபீஸ் செல்ல விடை கிடைத்தது.

சாப்பாடும், இதர வேலைகளும் முடிந்து சாவித்திரி தன் வழக்கமான குட்டித் தூக்கம் போட ஹாலுக்கு வந்த பொழுது, நடுப்பகல் பன்னிரண்டுக்கு மேலாகி விட்டது. 'அப்பாடா!' என்று சலிசேரில் சாய்ந்தவளை அந்தக் 'க்ரூப்' போட்டோதான் முதன் முதலாகக் கவர்ந்தது. எழுந்து, அதை எடுத்து வந்தவள், மீண்டும் நாற்காலியில் சாய்ந்து, படத்தில் ஒன்றி விட்டாள்.

"நாற்பத்தைந்து வயதில், ஒரே படத்தி லுள்ள பன்னிரண்டு பேர்களில் ஐவர் கால மாவதென்றால், விசித்திரமான விளைவுதான்! அதுவும் இட்டத்தட்ட ஒரே வருஷத்தில்!"

ஆபீசுக்குக் கிளம்புவதற்குமுன் இறந்தோர் குடும்பத்திடம் பரிவு காட்டித் தன் கணவன் பெருமூச்சு விட்டது அவள் நினைவுக்கு வந்தது. படத்தை மீண்டும் நோக்கினாள்.

படத்திலிருந்தவர்கள் தங்களுடைய இருப தாவது பிராயத்தில் எடுத்துக் கொண்ட புகைப்படம் அது.

படத்தில் ஏழு பேர்கள் பின் வரிசையில் நின்றுகொண்டும், ஐந்து பேர்கள் முன் வரிசை யில் உட்கார்ந்து கொண்டும் இருந்தார்கள். இறந்த ஐவர்கள் பின் வரிசையில் மூவரும், முன் வரிசையில் இருவருமாக இருந்தார்கள். பின் வரிசையின் இடக் கோடியில் தன் நாச வேலையைத் துவக்கிய காலன், வலது கோடிக் குப் போய், நடுவேவந்து, உட்கார்ந்திருந்தோ ரில் இடது கோடி ஆசாமியைக் கைபார்த்து விட்டு, வலது கோடியில் உட்கார்ந்திருந்த வேதாசலத்துடன் தன் யாத்திரையை முடித் துக்கொண்டதாகத் தன் கணவன் சொன்னது அவள் நினைவுக்கு வந்தது. இருபத்தைந்து வருஷங்களுக்கு முன், அகாலத்தில் மரணமாக இருந்த இந்த ஐவர்களை ஒன்று கூட்டி, இப்படி ஒரு புகைப்படமும் எடுத்துக் கொள்ளச் செய்த விதியின் விந்தைதான் என்ன என்று அவள் துணுக்குற்றாள். இந்தச் சிந்தனைகளால் அவளுக்கு வழக்கமாக வரும் தூக்கம் பறந்தோடி விட்டது. அந்தப் புகைப்படம் விஸ்வரூபம் எடுத்து அவள் புறத் தையும் அகத்தையும் மாறி மாறி முற்றுகை இட்டுக் கொண்டிருந்தது.

புகைப்படத்தை மீண்டும் நோக்கினாள். காலனின் கோர தாண்டவத்தில் ஏதோ ஒரு ஒழுங்கும், திட்டமும் இருந்திருப்பதாக அவ ளுக்கும் பளிச்சிட்டது. வேதாசலத்துடன் இந்தக் கண்மூடி யாத்திரை நின்றிராமலிருந் தால், காலன் அடுத்தபடியாக யாரைப் பற்றி யிருப்பான்? பின் வரிசையில் ஒரு ஓரத்தி லிருந்து இன்னொரு ஓரம் போய், நடுவே வந்தது போல், முன் வரிசையிலும் இரண்டு ஓரங்களையும் துடைத்தவன், நடுவில்தான் பாய்ந்திருக்க வேண்டும்!

உட்கார்ந்திருந்தோர் வரிசையின் நடுவில் நாகலிங்கம் அமர்ந்து, அவளை நோக்கி முறு வலித்துக் கொண்டிருந்தான்.

ஜுரத்தால் தாக்குண்டவள்போல் அவள் நடுங்கினாள். கையிலிருந்த படம் நழுவிக் கீழே விழுந்து, கண்ணாடி சுக்குநூறாகச் சிதறி விட்டது. அப்படியொன்றும் பிரமாத உய ரத்திலிருந்து அது விழவில்லை. இருந்தும் படம் சுக்குநூறாக நொறுங்கிய விந்தை அவள் மனத்தில் ஆழப் பதிந்து விட்டது.

அன்றிரவு, அவள் சில விநாடிகள் கூடக் கண் மூடவில்லை. அடிக்கடி திடுக்கிட்டெழுந் திருப்பாள், உடம்பெல்லாம் வியர்த்திருக்கும், கவலையுடன் கணவனைத் தொடுவாள். உடலில் சூடு இருப்பதைக் கண்டு அவள் இதயம் ஆறு தலால் விம்மும். இப்படிப் பல முடிவற்ற இரவுகள் அந்த முதல்இரவைத் தொடர்ந்தன.

தன்னுடைய அத்தனை குழப்பத்திலும், மனச் சோர்விலும் எது எப்படிப் போனாலும் சரி, தன்னுடைய இந்தப் பயத்தைக் கணவ ரிடம் சொல்லக் கூடாது என்ற திடமான முடிவுக்கு வந்திருந்தாள் அவள். அவள் மனம் அதனால் பலவீனப்பட்டு, ஒருவேளை நாமே அவன் மரணத்துக்குக் காரணமாகி விடு வோமோ என்ற எண்ணமே அவளை நிலை குலையச் செய்தது.

நேர இருந்த பயங்கரமான விபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தெய்வ வழிபாடுதான் சிறந்த வழி என்று அவளுக்குத் தோன்றியது. அதில் முழுமனத்துடன் தன்னை அர்ப்பணித்துக் கொண்டாள். தில்லியில் அவள் போகாத கோவில்களில்லை. பண்ணாத ஸ்நானங்களில்லை, இருக்காத உபவாசங்க ளில்லை. வீட்டிலோ விதம் விதமான ஹோமங் களும், பூஜைகளும் தவறாமல் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

திடீரென்று மனைவியிடம் ஏற்பட்ட இந்த மாறுதல் நாகலிங்கத்துக்குப் புரியாத புதி



ராக இருந்தது. அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. அதற்காகத்தான் இப்படிப் பூஜை களில் ஈடுபட்டிருக்கிறாளோ என்று நாளடை வில் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண் டான். கடுமையான உபவாசங்கள் காரண மாக, சாவித்திரி மூன்றே மாதத்தில் உருத் தெரியாமல் கறுத்து இளைத்து விட்டாள்.

அவள் புரியும் கடுந் தவத்தைப் பொறுக்க முடியாமல் ஒருநாள் நாகலிங்கம், "உன் பூஜைகளையும், நியமநிஷ்டைகளையும் பார்த் தால், நான் துறவு பூண்டு காட்டுக்கே போய் விடலாம் என்று நினைக்கிறேன்" என்று அன் புடன் கடிந்து கொண்டான்.

அந்தக் 'காட்டுக்கே' என்ற வார்த்தை அவளை என்னவோ செய்தது. முன்னொருநாள் கணவனுடன் கானகம் சென்று அங்கு எம னுடன் போராட நேர்ந்த காரிகையின் நினைவு வர, கண்ணீர் அவள் கண்களை முட்டியது. இறுதியில் அந்தக் கற்புக்கரசிக்குக் கிட்டிய வெற்றி தனக்கும் கிட்டுமா என்று விம்மினாள்.

மனைவியின் கண்ணீருக்கும் விம்மலுக்கும் காரணம் புரியாத நாகலிங்கம் அவள் போக்

யின்படியே விடுவதுதான் நல்லது என்று நிர்மானித்து. அதற்குப் பின் அவள் காரியங்களுக்குக் காரணம் கேட்பதை விட்டுவிட்டான்.

ஒருநாள் தரியாகஞ்சிலிருந்த சாவித்திரியின் பள்ளித் தோழி சரோஜா, பல மாதங்களுக்குப் பின் சிநேகிதியைக் காண வந்திருந்தாள். சாவித்திரியின் வாடி, வதங்கிய உருவம் அவளைத் திடுக்குறச் செய்தது.

அன்பும், அனுதாபமும் கொண்டு தோழி வற்புறுத்திக் கேட்கவே சாவித்திரி தான் பல மாதங்களாக உள்ளத்தில் பூட்டி வைத்திருந்த உணர்ச்சிகளை வெளிக் கொட்டிவிட்டாள். அப்புறம் ஏனோ அவசரப்பட்டு விஷயத்தை வெளியிட்டோமே என்றும் தன்னைத்தானே நொந்து கொண்டாள்.

தயங்கிக்கொண்டே ஒரு நாள் சரோஜா சாவித்திரியிடம் சொன்னாள்: "தரியாகஞ்சில் என் வீட்டுக்கு அருகில் சியாமசுந்தரலால் என்ற பிரசித்தி பெற்ற பஞ்சாபி டாக்டர் ஒருவர் இருக்கிறார். அவர் மனைவி பகவன் தேவி ஒரு தாயின் அன்புடன் என்னோடு பழகுகிறாள். எனக்கென்னவோ இப்படி இருட்டில் நாமிருவரும் தடுமாறுவதை விட அந்த டாக்டரின் உதவியை நாடலாம் என்று தோன்றுகிறது."


சாவித்திரியைக் கிலி பிடித்துக் கொண்டது. இதற்குத்தான் அவள் ஆரம்பத்திலேயே பயந்தாள். ஆச்சு, இந்தச் செய்தி சரோஜாமூலம் அந்தப் பஞ்சாபி டாக்டருக்கும் அவர் மனைவிக்கும் பரவி, கடைசியில் தம் கணவனுக்கே எட்டி விபரீதத்தில்தான் முடியப் போகிறது' என்று முடிவு கட்டி, அழுதே விட்டாள்: வேறு யாருக்கும் விஷயத்தைச் சொல்லுவதில்லை என்று ஆயிரம் சத்தியங்கள் வாங்கிக்கொண்ட பிறகுதான் அன்று அவள் சரோஜாவுக்கு விடை கொடுத்து அனுப்பினாள்.

ஆனாலும், இரண்டு வாரங்களுக்குப் பிறகு சரோஜா மீண்டும் சாவித்திரியிடம் அந்தப் பேச்சை எடுத்தாள். சாவித்திரிக்கோ இவளிடம் விஷயத்தை ஏன் சொன்னோம் என்று தன்பேரிலேயே கோபம் கொந்தளித்தது. சரோஜாவும் விடவில்லை:

"இப்படியே போய்க் கொண்டிருந்தால், உன் கணவனைக் காப்பாற்றும் வழிதான் என்ன?" என்று நேர்முகமாகத் தாக்கினாள்.

"கடவுள் என்னைக் கைவிடமாட்டார்!" என்றாள் சாவித்திரி அழுத்தம் திருத்தமாக.

"நான் அதை மறுக்கவில்லை. ஆனால், அதோடு மனித முயற்சியும் சேர்ந்தால் நல்லதுதானே? நான் சொல்லுபவர் வெறும் டாக்டர் மட்டுமில்லை; மனோ தத்துவ சாஸ்திரத்திலும் மூழ்கித் திளைத்தவராம். இவைகளுக்கிடையே, வீட்டில் பூசை, நியம நிஷ்டை வேறு வைத்திருக்கிறார். அவர் வீடே ஒரு கோயில் போலிருக்கும். என் உள்ளத்தில் அவரால்தான் உன் துக்கத்துக்கு ஒரு முடிவு காண முடியும் என்று தோன்றுகிறது. அதையுந்தான் பார்த்து விடுவோமே?" என்றாள்.



'அவர் வெறும் டாக்டர் மட்டுமில்லை. கடவுள் பக்தி உடையவர். அவருடைய வீடே ஒரு கோயில் போலிருக்கும்.'—இந்த வார்த்தைகள் சாவித்திரியின் உள்ளத்தைத் தொட்டிருக்க வேண்டும்.

* * *

ஐம்பது, ஐம்பத்தைந்து வயதுள்ள டாக்டர் சியாம சுந்தரலாலின் முகத்தில் ஒரு அலாதி கம்பீரம் சுடர் விட்டுக் கொண்டிருந்தது. வழக்கமாக டாக்டர்கள் போல்

சூட்டும், கோட்டும் போடாமல், அவர் தூய வெள்ளை வேஷ்டி உடுத்தி ஜிப்பா அணிந்திருந்தார்; அடுத்த நாள் பிற்பகல் சாவித்திரி சொன்ன விவரங்களைக் கேட்ட டாக்டர் ஒன்றுமே பேசவில்லை. மாறி மாறி அவளையும் அவள் கொண்டு வந்திருந்த புகைப் படத்தையும் பார்த்துக் கொண்டிருந்தார். அவரைச் சூழ்ந்திருந்த மூன்று பெண்களோ ஆவலுடன் அவர் வாயை நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில், அவர் பேசியபொழுது அவர் குரலில் ஒரு நிதானமும் தீர்மானமும் ஒலித்தன.

"உங்கள் கணவரை நான் பார்க்காமல் இதில் ஒன்றுமே சொல்லுவதற்கில்லை!" என்று கூறினார்.

சாவித்திரி துள்ளி எழுந்தாள்.

"அது முடியவே முடியாது. என் பயம் என் கணவருக்குத் தெரிவதால் கெடுதி சம்பவிக்குமே ஒழிய, கட்டாயம் நன்மை பயக்காது!" என்றாள் ஆவேசத்துடன்.

டாக்டரின் முகத்தில் ஒரு புன்னகை படர்ந்து மறைந்தது. "உங்கள் பயம் எனக்குப் புரிகிறது. ஆனால் கவலை வேண்டாம். உங்களைச் சந்திக்க வந்த என் மனைவிக்குத் துணை வந்தவன்போல் அங்கு வருவேன். வந்த இடத்தில் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அறிய வேண்டியதை அறிந்து கொள்ளுவேன்!" என்றார் அந்த டாக்டர் பரிவுடன்.

சாவித்திரியின் பயம் போனபாடில்லை. "அவரைப் பார்த்து நீங்கள் தெரிந்துகொள்ளப் போவதென்ன?" என்று கேட்டாள் மிகவும் பிடிவாதமாக.

"அதைச் சொல்லுவதுதான் கடினமாக இருக்கிறது. நீங்கள் எதை நம்பி என்னிடம் வந்தீர்கள்? நான் ஒரு டாக்டர் என்பதினால் தானே? அவரைப் பார்ப்பதினால் சமீப காலத்தில் அவர் உடல் நலம் பாதிக்கப்படலாமா என்பதைத் தெரிந்து கொள்ளுவேன்!" என்றார் டாக்டர்;

சாவித்திரி சிரித்தாள்......

"அவருக்கு நேரப் போகும் கெடுதி திடீரென்று விபத்தின் மூலம் நேர்ந்தால்......!"

"எனக்கு ரேகை சாஸ்திரம் தெரியும். அப்படித் திடீரென்று அவருக்கு ஏதேனும் கண்டம் ஏற்பட இருக்கிறதா என்றும் தெரிந்து கொள்ளலாமே?" என்றார் டாக்டர் நிதானமே வடிவாக.

"நீங்கள் ஒரு டாக்டர். விஞ்ஞான ரீதியில் விஷயங்களை ஆராயக் கடமைப்பட்டவர். அவர் கைரேகையிலிருந்து அவர் ஆயுளை முடிவு கட்டிவிடப் போகிறேன் என்கிறீர்களே!" என்றாள் சாவித்திரி ஏளனமாக.

"ஏன் கூடாது? இந்தப் புகைப்படத்திலிருந்து அவர் ஆயுளைத் தீர்மானிப்பதைவிட அவர் சொந்தக் கைரேகையிலிருந்து தீர்மானிப்பது விஞ்ஞான ரீதியில் இருக்கும், பாருங்கள்!" என்று கூறினார் டாக்டர் பொறுமையுடன்.

இதற்குச் சரியான பதிலொன்றும் சாவித்திரிக்குத் தோன்றவில்லை. கடைசியில் அடுத்த ஞாயிற்றுக்கிழமை மாலை நாகலிங்கத்

பிப்ரவரி மாதச் சிறுகதைப் போட்டி

1. மாதந்தோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் எழுத்தாளர்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம்.

2. எழுத்தாளர்கள் சொந்தமாகவே கதைகள் புனைந்து அனுப்ப வேண்டும். கதைகள் கல்கியில் ஆறு பக்கத்திலிருந்து பத்து பக்கம் வரையில் வெளியிடக் கூடியதாக இருக்கலாம்.

3. ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதப் போட்டிக்கு வந்த கதைகளில் சிறந்ததற்கு நூறு ரூபாய் பரிசு வழங்கப்படும்.

4. **பிப்ரவரி மாதப் போட்டிக்கு பிப்ரவரி 1-ந் தேதியிலிருந்து 28-ந் தேதி வரை கதைகள் எழுதியனுப்பலாம். பிப்ரவரி மாதப் போட்டிக்கு வந்த கதைகள் மார்ச் மாதம் முழுதும் பரிசீலனை செய்யப்படும். பரிசு பெற்ற கதை ஏப்ரல் மாதத்தில் பிரசுரமாகும். அதேபோல் அந்தந்த மாதக் கதைகள் அடுத்த மாதத்தில் பரிசீலனை செய்யப்பட்டு, அதற்கடுத்த மாதத்தில் பிரசுரமாகும்.**


5. கதைகளை நல்ல காகிதத்தில் இடைவீடுகள் விட்டு ஒரே பக்கத்தில் எழுத வேண்டும். காகிதத்தின் மறு பக்கத்தில் எழுதக் கூடாது.

6. தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் அவற்றுடனேயே போதிய தபால் பில்லைகள் வைத்து அனுப்ப வேண்டும். தபால் பில்லைகள் வைத்து அனுப்பாதவற்றைத் திருப்பியனுப்புவதற்கில்லை.

7. போட்டிக் கதை சம்பந்தமாக எந்தவிதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

8. தேர்ந்தெடுத்த கதைகளைத் திருத்துவதற்கும் குறைத்து வெளியிடுவதற்கும் ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு.

—ஆசிரியர், கல்கி



"காயமே......இது பொய்யடா!......காயமே இது பொய்யடா!......வெறும் காற்றடைத்த பையடா!..."

"ஏய் பரதேசி! மரியாதையா இங்கேயிருந்து போகிறாயா இல்லையா? மட்டிப்பயல். காலையிலே வந்து நம்ம வியாபாரத்தைக் கெடுக்கிறான்!"

தின் வீட்டில் சந்திப்பது என்ற ஏற்பாட்டுடன் அவர்கள் பிரிந்தார்கள்.

* * *

ஐந்தே நிமிடங்களில் நாகலிங்கம் டாக்டரின் உருவுக்கும், குரலுக்கும் அடிமையாகி விட்டான். இத்தனை மேதையும், புகழும் உள்ளவர் ஒரு குழந்தைபோல் தன்னுடன் சிரித்து உரையாடிக் கொண்டிருந்தது அவனால் நம்ப முடியாத விந்தையாக இருந்தது. பேச்சின் போக்கில் அவர் அவனுடைய கை ரேகையை ஆராய ஆரம்பித்தபொழுது அவனுக்கு மூர்ச்சையே போட்டு விட்டது. இந்தப் பொல்லாத மனிதருக்குத் தெரியாத விஷயமே இருக்காதோ என்று நினைத்தான். பக்கத்து அறையில் டாக்டரின் மனைவி, சரோஜா, இவர்களுடன் இருந்த சாவித்திரி கவலையுடன் டாக்டரின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். வெகு நேரம் நாகலிங்கத்தின் கையைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்த டாக்டரின் கண்களில் ஏதோ ஒரு ஒளி தோன்றியதுபோல் சாவித்திரிக்குப் பிரமை தட்டியது. அன்றிரவு டாக்டர் தம்பதிகள் விடைபெற்றுப் போகையில் ஆறுதல் சொல்லும் வகையில் அவர் தன்னைப் பார்த்ததாக அவள் நினைத்தாள். ஆனால், உடனேயே இவைகளெல்லாம் தன் மனத்தின் படைப்புக்களோ என்ற பயமும் அவளைத் தொத்திக்கொண்டது.

அடுத்த நாள் தன் கணவன் ஆபீசுக்குப் போனதுதான் தாமதம், சாப்பிடக் கூடச் செய்யாமல், வீட்டை இழுத்துப் பூட்டிக் கொண்டு டாக்டரின் இல்லம் நோக்கி விரைந்தாள். அங்கு ஏற்கனவே சரோஜாவும் வந்திருந்தாள். அவள் பரபரப்பை உணர்ந்தவர் போல், டாக்டரும் அவளைக் காக்க வைக்காமல், "அம்மணி! உங்கள் தவம் வென்று விட்டது. என் மனமார்ந்த பாராட்டுதல்கள். உங்கள் கணவர் தீர்க்காயுசுடன் எழுபது வயதுக்குமேல் அமோகமாக வாழ்வார்" என்று கூறினார்.

அணைகடந்தோடிய மகிழ்ச்சியின் காரணமாகச் சாவித்திரியால் பேசவே முடியவில்லை.

"எப்படி. - எப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்றாள் வாய் குழறி.

"நான் சொல்லவில்லை அம்மா, அவர் கையே சொல்கிறது. அவர் கையில் கண்ட தீர்க்க ஆயுள் ரேகைபோல், நான் என்றும், எங்கேயுமே கண்டதில்லை" என்றார் டாக்டர்.

"அப்படியானால் ...... அந்தப் புகைப்படம்? ஏற்கனவே நடைபெற்றுள்ள அந்தச் சம்பவங்கள்?" என்று கேட்டாள்.

"நான் அவை ஒன்றையுமே மறுக்கவில்லை. புகைப்படத்தை முதலில் பார்த்தபொழுது நீங்கள் யூகித்தபடி அடுத்து உங்கள் கணவருக்கும், பிறகு இதரர்களுக்கும் மரணம் சம்பவிக்கலாம் என்றுதான் எனக்கும் தோன்றியது. ஆனால்...புகைப் படத்தில் எஞ்சியிருந்தவர்களுக்கும் சமீப காலத்திலேயே மரணம் சம்பவிக்குமா என்பதை அறியத்தான் நான் உங்கள் கணவரின் ஆயுள் பற்றி அறிந்து கொள்ள விரும்பினேன். நேற்று அவர் கையைப் பார்த்தபின், என் தீர்மான முடிவு உங்கள் கணவருக்கு அவர் எழுபது வயதைத் தாண்டிய பிறகுதான் மரணம் சம்பவிக்கும் என்பதுதான். புகைப்படத்தில் கண்ட சூசகம் உண்மையானால், அவரைத் தொடர்ந்தே மற்றவர்களின் மரணம் ஏற்படலாம். ஆனால், சமீபத்தில் நீங்கள் கவலைப்பட ஒன்றுமே இல்லை" என்று கூறி முடித்தார்.

கடைசியில், கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தோட நன்றி கூறிவிட்டு, தோழிகள் இருவரும் டாக்டர் தம்பதிகளிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார்கள்.

அவர்கள் சென்று வெகு நேரம் ஆகியும், டாக்டர் இருந்த இடத்தை விட்டு நகராமல் ஏதோ சிந்தனையில் மூழ்கிக் கிடந்தார்.

அப்பொழுது அங்கு வந்த அவர் மனைவி, "ஆமாம், உங்களுக்கு ரேகை சாஸ்திரம் தெரியுமென்று இன்று வரை என்னிடம் கூடச் சொன்னதே இல்லையே!" என்றாள் மிகுந்த வியப்புடன்.

இதற்கு டாக்டர் பதிலொன்றும் சொல்லவில்லை. ஆனால், மனத்துக்குள், 'எனக்கு ரேகை சாஸ்திரம் தெரியுமென்று யார் சொன்னது? நான் மட்டும் அந்த நாடகம் ஆடியிராவிட்டால், அந்தக் குடும்பத்தின் கதி என்னவாகி இருக்கும்?' என்று நினைத்தாரோ என்னவோ?

தன் கேள்விக்குப் பதில் கிடைக்காமல் போகவே, "நான் கேட்டது உங்கள் காதில் விழவில்லை?" என்றாள் டாக்டரின் மனைவி, சற்றுச் சீற்றத்துடனேயே.

இதற்கும் ஒரு பதில் சொல்லாமல், சிரித்துக் கொண்டே டாக்டர் அறையை விட்டகன்றார். இரண்டாம்பேருடன், அதுவும் ஒரு ஸ்திரீயுடன் பகிர்ந்துகொண்ட விஷயம், வெகு காலம் ரகசியமாக இருக்க முடியாது என்ற உண்மையை, தன் பரந்த அனுபவத்தில் அவர் அறிந்திருக்க வேண்டும்!

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.


நேஷனல்–எக்கோ
கம்பெனியின் புதிய தயாரிப்பு...
கவர்ச்சிகரமான மாடல் U-717
குறைந்த விலையான ரூ. 250/-ல்
ஒரு உயர்ந்த ஸெட்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon